www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாமனிதர்

06.03.2008 அன்று கனகராசன்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா அரசின் ஆழ ஊடுருவும் இராணுவப்புலனாய்வு அணியின் தாக்குதலுக்கு இலக்காகி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசன் அவர்கள் உயிரிழந்தார்.

படுகொலை செய்யப்பட்ட யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் அவர்களை மாமனிதராக தேசியத் தலைவர் அவர்கள் மதிப்பளித்தார். இது தொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் விடுக்கப்பட்ட அறிக்கை.

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.
07.03.2008

தமிழீழ மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்த மகத்தான மனிதர் ஒருவரை இன்று சிங்களம் அழித்து விட்டது. தமிழினக்கொலைப் பரிமாணத்தின் உச்சமாக திட்டமிட்ட இந்தக் கோரக்கொலை நிகழ்ந்திருக்கிறது. சிங்கள அரச பயங்கரவாதத்தின் அசிங்கமான வடிவமாக வன்னி மண்ணிலே இந்தக் கொடுமை அரங்கேறியி ருக்கின்றது.

திரு.கிட்டினன் சிவநேசன் அவர்கள் சுயநலம் கருதாது நேர்மையுடனும் நெஞ்சுரத்துடனும் செயற்பட்ட தனித்துவ மான மனிதர். உயர்ந்த உள்ளம் கொண்ட எளிமையான மனிதர். புனிதமான அரசியலாளர். தொழிலாளர்களின் நலன்களுக்காகவும் மேம்பாட்டிற்காகவும் அல்லும் பக லும் அயராது உழைத்தவர். அனைவருடனும் அன்பாக வும் பண்பாகவும் நடந்து கொள்ளும் ஒரு உயரிய பண் பாளர்.

இவர் தமிழீழ மண்ணின் விடிவையும் தமிழீழ மக்களின் விடுதலையையும் தனது வாழ்வின் இலட்சியமாக வரித் துக்கொண்டவர். தமிழ் மக்கள் தமது சொந்தத் தாயக மண்ணில் இன்னல்கள் நீங்கி, இடர்கள் அகன்று, சுதந் திரமாக, கௌரவமாக நிம்மதியாக வாழவேண்டும் என ஆவல் கொண்டவர். தமிழீழ மண்ணை ஆழமாக நேசித் தவர். அந்த மண் ஒரு சுதந்திர தேசமாக மலர்வதைக் காணத்துடித்தவர். இந்தத் துடிப்பில் உயிர்பெற்று எமது விடுதலை இயக்கத்தையும் அதன் அரசியல் இலட்சியத் தையும் அதனை அடைவதற்கு நாம் நெறித்துள்ள போராட்டப்பாதையையும் முழுமையாக ஏற்றுப் பெரும் விடுதலைப் பணியாற்றியவர்.

யாழ். மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன் றப் பெரும் பொறுப்பைச் சுமந்தவாறு உலகெங்கும் அலைந்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு நியாயம் தேடினார். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி எமது போராட்டத்திற்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டினார். சிங்கள் அரசும் அதன் ஆக்கிரமிப்புப் படைகளும் எமது மண்ணில் நிகழ்த்தும் அநியாயங் களையும், அட்டூழியங்களையும் உலகத்திற்கும் ஊடகங் களிற்கும் தெளிவாக எடுத்துக்கூறினார். சிங்களப்படை களின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் அஞ்சா நெஞ்சுடன் அநீதியை எதிர்த்துப் போராடினார். கடும் உழைப்பாலும் செயற்றிறனாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அன்னார் ஆற்றிய அரும்பணி அளப்பரியது.

திரு.கிட்டினன் சிவநேசன் அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது விடுதலைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்து விடுவதில்லை. சரித்திர நாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

(வே.பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

www.tamilarangam.net

# எரிமலை







## கட்டுரைகள்


| | |
|---|---|
| பொன்.பூலோசிங்கம் | 04,32 |
| யோ.சே.யோகி | 08,40 |
| கலி | 12,36,42 |
| ஜெயராஜ் | 15 |
| அன்பரசு | 19,52 |
| கெல்மன் | 22 |
| வேலவன் | 27 |
| பு.சத்தியமூர்த்தி | 28 |
| ச.பாலா | 34 |
| சு. ஞாலவன் | 44 |
| மலைமகள் | 58 |






கோத்தபாயவின் முகத்தில் ரத்தவத்த 28

காலம் எழுதப்பட்ட வரலாறு 44




## கவிதைகள்


| | |
|---|---|
| கருணாகரன் | 11 |
| அலறி | 25 |
| ஸ்ரீ துஸ்யா | 41 |




## வரலாற்று நவீனம்


| | |
|---|---|
| தமிழ்க்கவி | 47 |


## சிறுகதை


| | |
|---|---|
| ஆதிலட்சுமி சிவகுமார் | 50 |


உள்ளே...

www.tamilarangam.net



«

மனித வரலாற்றுச் சக்கரம், காலங்களைக் கடந்து, யுகங்களை விழுங்கி, முடிவில்லாமற் சுழல்கிறது. இந்த முடிவில்லாத இயக்கத்தில், உலகத்து மனிதன் நிறையவே மாறிவிட்டான். அவனிடத்தில் எத்தனையோ புதிய சிந்தனைகள் தோன்றியிருக்கின்றன எத்தனையோ புதிய கருத்தோட்டங்கள் பிறந்திருக்கின்றன. எத்தனையோ புதிய எண்ணங்கள் அவன் மனதிலே தெறித்திருக்கின்றன. இந்தச் சிந்தனைத் தெறிப்பிலே, சுதந்திரமும் சமத்துவமும் கூடிக்குலவும் ஒரு வாழ்வை அவன் கண்டுகொண்டான். சாதி, சமய, பேதங்கள் ஒழிந்த, அநீதியும் அட்டூழியங்களும் அகன்ற, சூழ்ச்சிகளும் சுரண்டல்களும் நீங்கிய, கொந்தளிப்புக்களும் நெருக்கடிகளும் அகன்ற ஓர் உன்னத வாழ்வைக் கற்பிதம் செய்தான். இந்தக் கற்பிதத்திலிருந்து தோன்றிய கருத்துருவம்தான் சுதந்திரம். இந்த உன்னதமான கருத்துருவை வாழ்வின் உயரிய இலட்சியமாக வரித்து, மனிதன் போராடப் புயலாகப் புறப்பட்டான்.

»

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்
மாவீரர் நாள் - 2007 உரையில் இருந்து...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தலைவாசல்

## கிழக்கில் தேர்தல் வடக்கில் மோதல்

தமிழர் தாயகத்தின் துயரை எடுத்துக்காட்ட இந்த தலையங்கம் போதுமானதாக இருக்கிறது. ஒருபக்கம் ஆக்கிரமிப்பாளனை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறோம், மறுபக்கத்தில் ஆக்கிரமிப்பாளன் தேர்தல் நடத்துகிறான். இன்னுமொரு நாட்டிலோ இடத்திலோ இது நடக்குமாயின் அது எமக்கு வேடிக்கையாக இருக்கலாம். எமது உள்வீட்டில் நடப்பதால் எமக்குத் துயரமும் கடுஞ்சினமும் ஏற்படுகிறது.

கிழக்கு எம்மைப் பொறுத்தளவில் தென்தமிழீழம் என்ற தாயகத்தின் தெற்குப்புலமாகும். புலிகள் தந்திரோபாயமாக விலகியதைச் சாட்டாகக் கொண்டு அதைக் கைப்பற்றிவிட்டதாக எதிரி எக்காளமிடுகிறான். இயல்பு நிலையை நிறுவப்போவதாகவும் அதற்கு முன்னோடியாகக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்போவதாகவும் எதிரி பிரகடனஞ் செய்துள்ளான். கிழக்கின் உதயம் என்ற பெயரில் ஒரு மேம்பாட்டுத் திட்டத்திற்கான வரைவையும் எதிரி தயாரித்துள்ளான். ஜப்பான் உள்ளிட்ட சிறிலங்காவின் நட்பு நாடுகளும் ஐ.நாவும் கிழக்கின் உதயம் மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பணம் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளன. கிழக்கின் உதயம் திட்டத்தின் அங்கம்தான் கிழக்கில் நடக்கப் போகும் தேர்தல்.

'கிழக்கின் உதயம்' தமிழர்களின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்டதாக சிங்களஅரசு சொல்வதை ஒருவரும் நம்புவதில்லை. நிதிவசூல், சிங்களக் குடியேற்றம் ஆகிய இரு காரணங்களுக்காக கிழக்கின் உதயம் உருவாக்கப்பட்டது. சிங்களவர்கள் சுதந்திரம் பெற்றதைக் கொண்டாடும் பெப்ரவரி நாலாம் நாளன்று குடும்பிமலைக் குன்றின் மீது 16 அடி உயரமான புத்தர்சிலை ஒன்றைப் பிக்குகளும் இராணுவத்தினரும் நிறுவி உள்ளார்கள். முருகன்தான் குன்றுதோறும் ஆடும் வரலாறு உள்ளவன், இப்போது புத்தரும் தொடங்கிவிட்டார். அம்பாறையின் தீகவாபி புத்தர் கோயிலைச் சுற்றி சிங்களக் குடியேற்றம் படுவேகமாக நடக்கிறது. கோயிலின் மணியோசை கேட்கும் சுற்றுவட்டத்திற்குள் பௌத்த சிங்களவர்கள் மாத்திரம்தான் குடியிருக்கவேண்டும் என்று பிக்குகள் பிரகடனஞ் செய்துள்ளனர்.

கிழக்கின் உள்ளூராட்சித் தேர்தல் பெரியதொரு கேலிக்கூத்தாக மாறிவிட்டது. முக்கிய கட்சிகள் அச்சம் காரணமாக ஒதுங்கிவிட்டன. ஆயுதம் தாங்கிய அரசின் ஒட்டுக் குழுக்கள் போட்டியிடுகின்றன. மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் கருணாகுழு, பிள்ளையான்குழு ஆகியவற்றுடன் தமக்குத் தொடர்பில்லை என்று மகிந்த அரசு சர்வதேச சமூகத்திற்குச் சொல்லியிருக்கிறது. ஆனால் அதேகுழுக்களுடன் அரசுக்கட்சி தேர்தல் ஒப்பந்தம் செய்துள்ளதோடு இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பும் வழங்குகிறது. இன்னும் கிழக்குவாழ் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாமல் அகதி முகாம்களில் வாழ்கிறார்கள். இந்த அப்பாவிகளுக்கு ஏன் தேர்தல் என்று கேட்கிறோம்.


கிழக்கைப்போல் வடக்கையும் இலகுவாகக் கைப்பற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் சிங்கள இராணுவம் மன்னார், முகமாலை, கிளாலி, மணலாறு போன்ற முனைகளில் புலிகளோடு முட்டிமோதியபடி நிற்கிறது. எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்காமல் சிங்கள இராணுவம் நாளாந்தம் இழப்புக்களைச் சந்தித்தபடி அல்லற்படுகிறது. அப்பாவிப் பொதுமக்கள் மீது விமானக் குண்டுவீச்சும் ஆழஊடுருவும் சிங்கள ஊடுருவல்காரரின் தாக்குதல்களும் மாணவர்கள், அரசஅதிகாரிகள், ஆண், பெண், சிறுவர்கள், குழந்தைகள் என்று பலியெடுக்கின்றன. விரைவில் விடிவு வரும் என்று காத்திருக்கிறோம்.

எரிமலை
கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு
மார்ச் 2008
இருபத்தேழாம் ஆண்டு
தாய்மண் வெளியீடு,
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, பிரான்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொசோவா சுதந்திரப் பிரகடனமும் தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டமும்



■ பொன்.பூலோசிங்கம்

சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் சர்வதேச ஊடகங்கள் மத்தியிலும் சிலாகித்து பேசப்படும் ஒருவிடயமாக கொசோவா சுதந்திரப் பிரகடனம் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. தேசிய இனங்களின் விடுதலைப்போராட்டங்களும் அவற்றிற்கு எதிரான எதிர்வினைகளும் சிறிதுகாலமாக பேசாப்பொருளாக சிலாகித்துப் பேசப்படாத விடயமாக இருந்துவந்த நிலைமையை கொசோவச் சுதந்திரப் பிரகடனம் மாற்றியமைத்துவிட்டது.

உலகின் பெரிய வல்லரசான அமெரிக்காவும் ஒரு பலமான சர்வதேச நாடுகளின் கூட்டமைப்பாக விளங்குகின்ற ஐரோப்பிய யூனியனும் ஏகோபித்த குரலில் கொசோவா சுதந்திரப் பிரகடனத்திற்கு ஆதரவளித்தமை அதனுடைய சர்வதேச பரிமாணத்தை சர்வதேச சமூகத்தின் மத்தியில் பெருமளவு பேசப்படும் பொருளாக மாற்றியமைத்துவிட்டது. மாஷல் டிட்டோ தலைமையில் ஒன்றிணைக்கப்பட்டிருந்த ஒருதேசம் படிப்படியாக அவரது மறைவிற்குப் பின்னர் தேசிய இனங்களின் போராட்டக்களமாக மாறியது. சேர்பிய இராணுவத்தினுடைய அடக்குமுறைகள், இனச்சுத்திகரிப்பு, மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் இவற்றிற்கு எதிராக எல்லாத்தேசிய இனங்களும் போராடவேண்டும் என்ற உணர்வு அங்கு வளர்ச்சியடைந்துவந்தது. பொஸ்னியா, மொண்டினிறோ போன்ற பல்வேறு நாடுகளில் வாழ்ந்த தேசிய இனங்கள் அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து சுதந்திரத்தை பெற்றுக்கொண்டன. இந்த நாடுகளில் இடம்பெற்ற ஆட்கடத்தல், காணமல்போதல், இனப்படுகொலைகள், மனிதப் புதைகுழிகள் இவையெல்லாம் வெட்டவெளிச்சத்திற்கு வந்தபொழுது அடக்குமுறையாளர்கள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அம்பலப்பட்டுப்போனார்கள். தேசிய இனங்களுடைய சுதந்திர வேட்கையை கட்டுப்படுத்தமுடியாமல் அடக்குமுறையாளர்கள் தமது இராணுவத்தை வாபஸ் பெறவேண்டியதாயிற்று. இறுதியாக உலக வரைபடத்தில் கொசோவா என்ற ஒருநாடு உதயமாவதற்கும் ஐக்கியநாடுகள் சபையில் அதன் கொடி பட்டொளி வீசிப் பறக்கவும் சர்வதேச சமூகம் அங்கிகாரம் அளித்துள்ளது.

www.tamilarangam.net

கொசோவா சுதந்திரப் பிரகடனம் சர்வ தேச சமூகத்தை இரண்டு அணிகளாக பிரித்துவிட்டதாக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அமெரிக்கா, ஐரோப் பிய சமூகம், நோர்வே என்பன இந்த சுதந் திரப் பிரகடனத்திற்கு தமது பரிபூரண ஆத ரவை கொடுத்திருக்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ் வெளிப்படை யாகவே தமது ஆதரவை வெளியிட்டமை உலகின் கவனத்தை பெரிதும் ஈர்த்துக் கொண்டது. சர்வதேசசமூகத்தின் மத்தியில் அமெரிக்கா தேசிய இனங்களுடைய உணர்வை மதிப்பதில்லை என்ற கண்டனக் குரல் இப்பொழுது அடக்கிவாசிக்கப்படு கிறது.

கொசோவா சுதந்திரப் பிரகடனத்தை ஒவ்வொரு நாடும் தத்தமது உள்நாட்டு சொந்தப்பிரச்சனையின் தளத்தில் வைத்தே பார்க்கின்றன. இதனால் சுதந்திர கொசோவா நாட்டினுடைய தேசிய இனத் தின் ஆத்மார்த்தமான அபிலாசைகளை அவை இரண்டாம் பட்ச நிலைக்கு தள்ளி விட்டுள்ளன. என்ற குற்றச்சாட்டில் சர்வ தேச முன்னணி ஊடகங்களால் வெளிச்சம் போட்டுக்காட்டப்பட்டுள்ளன. ரஷ்யா இந் தப் பிரகடனத்தை எதிர்க்கிறது. அதற்குக் காரணம் அங்கு இடம்பெற்றுவரும் செச் செனிய விடுதலைப்போராட்டம் உத்வேகம் பெற்றுவிடுமோ என்ற அச்சமாகும். சீனா வும் இந்தப் சுதந்திரபிரகடனத்தை எதிர்க் கிறது இதற்குக் காரணம் தாய்வானில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளாகும். இதே போல ஸ்பெயின் நாடும் இந்தப்பிரகட னத்தை எதிர்க்கிறது. இதற்குக்காரணம் அங்குள்ள பாஸ்க் இனத்தவர்கள் பல ஆண்டுகளாக விடுதலைகோரி போராடி வரும் போராட்டமேயாகும் இதேபோல சிறிலங்காவும் இந்த பிரகடனத்தை அப் பிரகடனம் செய்யப்பட்டு பன்னிரெண்டு மணித்தியாலயத்திற்குள் தாம் எதிர்ப்பதாக அறிக்கை வெளியிட்டது. சிறிலங்காவினு டைய வெளிநாட்டமைச்சர் ரோகித போகல் லாகம சிறிலங்காவினுடைய எதிர்ப்பிற்கு காரணம் கூறுகின்றபோது சேர்பிய பெரும் பான்மை இனத்தவர்களது விருப்பத்திற்கு மாறாக இப்பிரகடனம் அமைந்துள்ளது எனக்குறிப்பிட்டார்.

சிறிலங்கா கொசோவப் பிரகடனத்தை இலங்கையினுடைய இனப்பிரச்சினையி னுடைய தளத்தில் வைத்து பார்க்கின்றது. பெரும்பான்மையினுடைய விருப்பமென் பது ஒரே இனத்தவர்கள், ஒரே மதத்தவர்கள் ஒரே தேசிய இனத்தவர்கள் மத்தியிலிருந்து உருவாகும்போதுதான் அது ஜனநாயக ரீதியாக பரிணாமத்தை வெளிப்படுத்தும். பல தேசிய இனத்தவர்கள் பலமொழி பேசு கின்றவர்கள் பல மதத்தைப் பின்பற்றுகின்ற வர்கள் பல்பரிமாணக் கலாச்சாரத்தை உடையவர்கள் மத்தியில் பெரும்பான்மை



இறைமை என்பது பகிர்ந்தளிக்கப்பட முடியாத இறுகிப்போன ஒரு கற்பாறையல்ல ஒரு தேசியஇனம் வாழுகின்ற நாட்டில் இறைமையென்பது ஒரேயொரு தேசிய இனத்திற்கு ஏற்புடைய ஒரு வரையறையாக அமையலாம் ஆனால் இலங்கை போன்ற பலமொழி பேசுகின்ற பலதேசிய இனங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டிற்கு ஒற்றையாட்சி தத்துவமோ ஏகபோக இறைமைக்கோட் பாடோ ஒருபோதும் இனமுரண்பாடுகளை தீர்த்துவைக்கப்பயன்படாது மாறாக அவற்றை மேலும் சிக்கலாக்கும் தேசிய விடுதலைப்போராட்டம் வளர்ச்சிபெற்று கூர்மை அடைவதற்குரிய ஏதுநிலைகளை அவை உருவாக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யினருடைய ஏகோபித்த அபிப்பிராயம் என்பது எப்போதுமே சிறிய தேசிய இனங்கள் மீது பெரும்பான்மையினர் தமது அபிப்பிராயத்தை திணிக்கின்ற ஒருபோக்காகவே இருந்துவருகின்றது. இலங்கை ஒரு தோல்வியுற்றநாடு, இலங்கை ஊடகவியலாளர்களிற்கு ஆபத்தான நாடு, இலங்கை தன்னார்வுத் தொண்டர்களுக்கு ஆபத்தான நாடு, இலங்கை சுற்றுலாப்பயணிகளிற்கு நெருக்கடி நிறைந்த நாடு இவ்வாறு இன்று சர்வதேச சமூகத்தால் சிறிலங்கா அடையாளப்படுத்தப்பட்டு பிரச்சாரமயப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் இலங்கை பல்தேசிய இனங்கள் வாழ்கின்ற ஒருநாடு, பல மதத்தவர்கள் வாழ்கின்ற நாடு, பல மொழிகள் பேசுகின்றவர்கள் வாழ்கின்ற நாடு என்ற அதனுடைய பல்பரிமாணத்தை அடைவதில் படுதோல்வியடைந்துவிட்டது. சிறிலங்கா தனது 60வது சுதந்திரதினத்தை கொழும்பு காலிமுகத்திடலில் கொண்டாடுகின்ற வேளையிலும் நாட்டின் பலபாகங்களிலும் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. இந்த குண்டுவெடிப்புச்சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றபாடம் என்ன? இலங்கை இன்னமும் தனது சரியான தடத்தில் கால்பதிக்கவில்லை. பெரும்பான்மையினருடைய விருப்பம், இறைமை, ஒற்றையாட்சி, எந்தவகையிலும் மாற்றியமைக்கப்படமுடியாத அரசியலமைப்பு என்றொரு வட்டக்களரிக்குள் சுற்றிச் சுழலாடிக்கொண்டிருக்கின்றது. இந்த வட்டத்திற்குள் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியாத சிறிலங்கா சர்வதேச சமூகத்தின் தேசிய இனங்களின் விடுதலைப்போராட்டத்தையும் இறுகிப்போயுள்ள தனது பேரினவாத சிந்தனைகளில் நின்றுதான் பார்க்கின்றது. ஆனபடியால்தான் கொசோவா சுதந்திரப் பிரகடனத்தையும் சிறிலங்கா அரசு சமகால அரசியல் செல்நெறிகளிற்கு எந்தவகையிலும் அனுகூலம் இல்லாத ஒரு வெறுமையில் இருந்துகொண்டு பார்க்கின்றது. இந்தப்பார்வைகூட சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக மேலும் ஆய்வுகளை மேற்கொள்ள அது தூண்டியுள்ளது. சிறிலங்காவினுடைய அறிக்கை வெளியான பின்னர் அமெரிக்காவினுடைய முன்னாள் பிரதி சட்டமா அதிபர் அமெரிக்காவிலுள்ள இலங்கையினுடைய தூதுவர் பேனாட் திலகரட்னாவை இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அழைப்புவிடுத்திருக்கின்றார்.

இவ்வாறாக உலகப்புகழ்பெற்ற சட்டமேதை கரேன் பார்க்கர் தமிழர் தாயகம் பூரணமான ஒரு சுதந்திரப்பிரகடனத்தை வெளியிடுவதற்கு போதுமான அளவு அதனுடைய உள்கட்டுமானங்கள் வளர்ச்சி பெற்றிருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு பார்க்கின்றபோது கொசோவாவினுடைய சுதந்திரப்பிரகடனமும் அதற்கெதிராக சிறிலங்கா எடுத்துக்கொண்ட நிலைப்பாடும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு மேலும் பலம் சேர்த்திருக்கின்றன.

உலகப் புகழ்பெற்ற சட்டமேதை கரேன் பார்க்கர் தமிழர் தாயகம் பூரணமான ஒரு சுதந்திரப்பிரகடனத்தை வெளியிடுவதற்கு போதுமான அளவு அதனுடைய உள்கட்டுமானங்கள் வளர்ச்சி பெற்றிருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு பார்க்கின்றபோது கொசோவாவினுடைய சுதந்திரப்பிரகடனமும் அதற்கெதிராக சிறிலங்கா எடுத்துக்கொண்ட நிலைப்பாடும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் பலம் சேர்த்திருக்கின்றன.

கடந்த 26.02.2008 அன்று கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி மிரர் தினசரியில் பிரபல ஆய்வாளர் ஜெகன் பெரேரா அவர்கள் எழுதிய கட்டுரையொன்றில் கொசோவினுடைய சுதந்திரப்பிரகடனம் பற்றியும் தமிழ்த்தேசிய விடுதலைபற்றியும் சிறிலங்கா அரசு சர்வதேச சமூகத்தில் எவ்வாறு அம்பலப்பட்டு நிற்கின்றது என்பது தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

சிறிலங்கா நாட்டினுடைய ஒற்றையாட்சி தத்துவமும், சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையும் இராணுவ மேலாதிக்கப் போக்கும் சிறிலங்காவினுடைய பொருளாதார வளர்ச்சியும் இனங்களிற்கிடையில் முரண்பாடுகளை கூர்மையாக்குவதில் எத்தகைய பங்கினை பெற்றுள்ளன என்பதை அவர் சுட்டிக்காட்டி கொசோவா சுதந்திரப் பிரகடனம் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதர்சமாக அமைகின்றது. என்பதை சுட்டிக்காட்டியிருக்கின்றார். இறைமை என்பது பகிர்ந்தளிக்கப்படமுடியாத இறுகிப்போன ஒரு கற்பாறையல்ல ஒரு தேசியஇனம் வாழுகின்ற நாட்டில் இறைமையென்பது ஒரேயொரு தேசிய இனத்திற்கு ஏற்புடைய ஒரு வரையறையாக அமையலாம் ஆனால் இலங்கை போன்ற பலமொழி பேசுகின்ற பலதேசிய இனங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டிற்கு ஒற்றையாட்சி தத்துவமோ ஏகபோக இறைமைக்கோட்பாடோ ஒருபோதும் இனமுரண்பாடுகளை தீர்த்துவைக்கப் பயன்படாது. மாறாக அவற்றை மேலும் சிக்கலாக்கும் தேசிய விடுதலைப்போராட்டம் வளர்ச்சிபெற்று கூர்மை அடைவதற்குரிய ஏதுநிலைகளை அவை உருவாக்கும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற தேசிய இனங்களின் விடுதலைப்போராட்டம் இதைத்தான் உணர்த்திநிற்கின்றது. பாகிஸ்தானில் சர்வாதிகாரி எகயாகான் வங்கதேச விடுதலைப்போராட்டத்தை ஒடுக்குவதற்காக ஜெனரல் திக்காக்கான் தலைமையில் ஒரு இனஅழிப்புப் படையை அனுப்பிவைத்தார். அவர் தலைமையிலான இன அழிப்புப் படை 1970 களில் முப்பது நாளில் முப்பது இலட்சம் வங்காளிகளை கொன்று குவித்தது. ஆனாலும் அவர்களால் வங்கதேச விடுதலைப்போராட்டத்தை அடக்கமுடியவில்லை. காலம் சென்ற முஜீபுர் ரகுமான் தலைமையில் பங்களாதேஷ் 1971ல் விடுதலைபெற்றது. பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்கள் இதிலிருந்தும்கூட பாடங் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் கொசோவா சுதந்திரப்பிரகடனத்தை பாகிஸ்தான் இன்று எதிர்க்கின்றது. அதற்குக் காரணம் பாகிஸ்தானின் உள்நாட்டில் பலுஸ்தானியர்கள் என்ற தேசிய இனம் நடத்திவருகின்ற விடுதலைப் போராட்டமேயாகும். ஆனால் கடைசியாக இடம்பெற்ற பொதுநலவாய அமைப்பு நாடுகளின் ஒன்றியம் முஷாரப்பினுடைய அராசாங்கத்தை அவரது ஜனநாயக விரோதப் போக்கிற்கு எதிராக கண்டனம் தெரிவித்ததோடு பாகிஸ்தானை பொதுநலவாய அமைப்பிலிருந்து வெளியேற்றியும்விட்டது. இந்த வெளியேற்றம் தொடர்பாகக்கூட சிறிலங்காவால் சரியான நிலைப்பாட்டை எடுக்கமுடியவில்லை இலங்கையினுடைய வெளிநாட்டமைச்சர் ரோகித போகல்லாகம பாகிஸ்தானுடைய வெளியேற்றத்தை ஆதரித்து பொதுநலவாய அமைப்பு நாடுகளில் தனது வாக்கை அளித்தார். ஆனால் இலங்கையில் கொழும்பில் பிரதம மந்திரி ரட்ண சிறி விக்கிரமநாயக்கா தலைமையில் கூடிய முதன்மை அமைச்சர்கள் பாகிஸ்தானிற்கு ஆதரவுதெரிவித்தார்கள். பொதுநலவாய அமைப்பைக் கண்டித்தார்கள்.

ஆகவே இன்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கையினுடைய வெளிநாட்டுக்கொள்கை ஒரு தளம்பல்நிலையை கொண்டிருக்கின்றது. உள்நாட்டுப்பிரச்சினையிலும் குறிப்பாக வன்னிப்பிரதேசத்தின் மீதான பேரினவாத இராணுவப் படையெடுப்பு சிக்கலுக்குள்ளாகியிருக்கிறது. வாழ்க்கைச்செலவு உயர்வு, வாழ்க்கைத்தரவீழ்ச்சி, கட்டுப்படுத்தமுடியாத பணவீக்கம், இனப்பிரச்சினைச் சிக்கல் போன்ற இன்னோரென்ன பிரச்சினைகளால் சிறிலங்காவில் உள்நாட்டுப் பொருண்மியம் தளம்பல் நிலையை அடைந்திருக்கிறது. ஆகவே இன்று உலக வரைபடத்தில் சிறிலங்கா தோல்வியுற்ற நாடு அதற்கு எதிர்காலமே இல்லை என்ற குறியீட்டு அடையாளம் மேலும் மேலும் வலுப்பெற்றுவருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எவ்வாறு அங்கீகரிப்பார்கள்

சேர்பிய குடியரசிலிருந்து கொசோவா தனிநாட்டுப்பிரகடனம் செய்திருப்பதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. கோசோவோவின் தனிநாட்டுப்பிரகடனம் ஒருதலைப்பட்சமானது. இவ்வாறு சிறிலங்கா அரசாங்கம் கொசோவா பாராளுமன்றத்தின் தீர்மானத்திற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சிறிலங்கா அரசாங்கத்திட்டம் இருந்து இத்தகையதொரு நிலைப்பாடு எதிர்பார்க்கத்தக்கதே. ஏனெனில் சிறுபான்மை இனங்கள் தொடர்பான சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடும். நடவடிக்கையும் சேர்பிய அரசாங்கத்தின் நடவடிக்கையில் இருந்து எந்தவகையிலும் மாறுபட்டதொன்றல்ல.

சிறிலங்கா அரசாங்கம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சேர்பியாவின் பெரும்பான்மை மக்களின் சம்மதம் இன்றி இச்சுதந்திரப்பிரகடனம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும். கோசோவோவின் ஒருதலைப்பட்சமான சுதந்திரப்பிரகடனமானது. இறையாண்மையுடைய நாடுகளுக்கென ஏற்படுத்தப்பட்ட உலகளாவிய ஒழுங்குகளுக்கு அமைய சர்வதேச உறவுகளைக்கொண்டு நடத்துவதற்கு சமாளிக்க முடியாத முன்மாதிரியை ஏற்படுத்தக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது.

ஒரு இனத்திற்கு அன்றி ஆக்கிமிக்கப்பட்ட ஒருபிரதேசத்திற்குச் சுதந்திரம் என்பது ஒடுக்குமுறையாளர்களின் அங்கீகாரத்துடன் தான் மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்த்தால் இன்று உலகில் பல இனங்கள் அழிந்தே போயிருத்தல் வேண்டும். பல பிரதேசங்கள் சுடுகாடாய் இருக்க வேண்டும்.

அதுமாத்திரமின்றி ஒடுக்குமுறையாளர் ஒருஇனத்திற்கோ அன்றி பிரதேசத்திற்கோ தாமாக உணர்ந்தோ அன்றிச் சிந்தித்தோ சுதந்திரத்தை வழங்கியதும் இல்லை. ஒரு சுதந்திரத்தை வழங்கியதும் இல்லை ஒன்று சுதந்திரத்தை/விடுதலையை தடுத்து நிறுத்தமுடியாது என்ற நிலையில் அதாவது தம்முடைய எத்தகைய அடக்குமுறையும் மீறியதாகப் போராட்டம் வெற்றிபெறுவது தவிர்க்கமுடியாது என்ற நிலையில் சில நாடுகளின் சுதந்திரத்திற்கு ஒடுக்குமுறையாளர் அங்கீகாரம் வழங்கியதுண்டு.

இன்னொருபுறத்தில் சர்வதேசத்தின் அழுத்தம். தலையீடு என்பன சுதந்திரத்தை பெற்றுக்கொடுப்பதுண்டு. எடுத்துக்காட்டாக கிழக்குத்தீமோரின் சுதந்திரம் ஐ.நாவின் தலையீட்டால பெறப்பட்டது. இதே போன்று முன்னால் யூக்கோசுலோவாக்கியாவின் ஒரு பகுதியான பொஸ்னியாவிலும் வெளியார் தலையீடு காரணமாகச சுதந்திரம் பெறப்பட்டது.

மறுபுறத்தில் பல இனங்கள. பல மொழிகள். பல மதங்கள் உள்ள நாடுகளில் மக்கள் அமைதியாகவும். ஒற்றுமையாகவும் வாழுகின்றனர் என்றால் அதற்குக் காரணம் அங்குள்ள மக்கள் அனைவரதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு மட்டுமல்ல. சகல இன, மத மக்களும் சம அந்தஸ்துடன் நடாத்தப்படுவதிலேயே ஆகும்.

அவ்வாறு இல்லாதுவிடில் இன்று சில நாடுகளில் மட்டும் விடுதலைக்கான போராட்டங்கள் நடக்க மாட்டாது. பல இனம், பல மொழி, பல மதமுள்ள அனைத்து நாடுகளிலுமே போராட்டங்கள் தவிர்க்கப்பட முடியாதவையாக மாறியிருக்கும்.

அதாவது சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்ப்பதுபோல் இறையாண்மையுடைய நாடுகளுக்கென ஏற்படுத்தப்பட்ட உலகலாவிய ஒழுங்குபடுத்தலுக்கு அமைவாக எதுவுமே நிகழ்வதாக இருக்க மாட்டாது. சுருக்கமாகக் கூறுவதனால் இறையாண்மையுள்ள அரசுகள் தமது மக்களை சம நீதியுடனும். சம அந்தஸ்துடனும் நடத்தும் பட்சத்தில் உலகளாவிய ஒழுங்குபடுத்தல் என்பது சாத்தியமானதாக இருக்கும்.

அவ்வாறு இல்லாதுவிடின் அதாவது ஒரு தொகுதி மக்கள் மீது அன்றி ஒரு பிரதேசத்தின் மீது ஒடுக்குமுறையை மேற்கொள்ளும் எந்த ஒரு அரசும் இறையாண்மையையோ, பிரதேச ஐக்கியத்தையோ கொண்டவையாக நீண்ட காலத்திற்கு இருத்தல் முடியாது. இவ்வொடுக்குமுறை அரசுகள் சர்வதேச உறவுகளைக்கொண்டு நடத்தமுடியாத முன்மாதிரியாக உருவாக்குபவையாகவே இருக்கமுடியும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யோ.சே.யோகி

# அமெரிக்கா ஜப்பான் இந்தியா இலங்கைத்தீவு

இலங்கைத்தீவில் சிறிலங்கா, தமிழீழம் எனும் தேசங்கள் உண்டு இதை ஏற்க உலக நாடுகள் மறந்து வருகின்றன அமைதி வழித்தீர்வு எனப் பேசிக்கொண்டு உலகின் தொன்மையான ஒரு நாகரீகத்தை, மொழியை அழிக்க உலகு சிறிலங்காவிற்கு உதவி வருகிறது.

இதுவரை இல்லாத அளவிற்கு அமெரிக்கா சிறிலங்காவின் உள் அரசியலில் தலையீடு செய்கிறது அமைதித்தீர்வில் மிகுந்த அக்கறை காட்டிய யப்பான் போருக்கு எனப் பணஉதவி செய்கிறது. இந்தியாவோ தமிழ்நாட்டுத் தமிழர்களின உணர்வுகளையும் தமிழீழப் போராட்டத்தின் நியாயத்தையும் புறந்தள்ளிவிட்டு சிறிலங்காவோடு உறவை வளர்க்கப் பெரிதும் விளைகின்றது. சிறிலங்காவின் தமிழின அழிப்புப் போர்க்கருவிகள், பணஉதவிகள், போர்ப்பயிற்சிகள் என வழங்கிப் பெரிதும் துணைபுரிகின்றது.


அமெரிக்கா இப்போது அதன் நலன்களுக்கு எதிராகச் செயற்படக்கூடிய நாடுகள் அமைப்புக்கள் மீது முன் செயலிழப்புத் (pre-emptive)திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. அதன் நலனுக்கு ஆபத்து என கருதுவோர் மீது ஏதாவது பொய்க்காரணங்களைக் காட்டியாவது அது தாக்குதலை நடத்தும் இதுவே அதனது முன் செயலிழப்புக் கொள்கையாகும்.

அமெரிக்கா அதன் நலனுகளுக்கு எதிராக எதிர்காலத்தில் எழும் அச்சுறுத்தலை எதிர் கொள்ள ஒரு தாக்குல் தளமாகவும், மத்திய கிழக்கிலிருந்தான நிலநெய் வழியைக் காக்கக்கூடிய இடமாகவும் இந்த இரண்டு இலக்குகளையும் அடையக்கூடிய மூலோபாய இடமாகவும் இலங்கைத் தீவைக்கருதுகிறது. இன்று இசுலாம், உலகின் இரண்டாவது மதமாக வளர்ந்துள்ளது. அது அரபுகளை மட்டும் உள்ளடக்கிய மதமாக இல்லாமல் இசுலாமியர்கள், கறுப்பு ஆபிரிக்கர்கள், கிழக்கு ஐரோப்பியர், துருக்கியர், குர்தீசுகள், ஆர்மினியர்கள், ஈரானியர், ஆப்கானிஸ்தவர், மத்திய ஆசியாவிலிருக்கும் பல இனக்குழுவினர், மொங்கோலியர், சீனர், பாகிஸ்தானியர், இந்தியர், பங்களாதேசத்தினர், மலேசியர், இந்தோனேசியர் எனப் பல்வேறு நாட்டு மக்களிடையேயும் பரவிய ஒரு மதமாக இருக்கிறது. இந்துமாவாரியானது ஏறத்தாள ஒரு முசிலிம் ஏரிபோலவே காணப்படுகிறது அது கிழக்கே பங்களாதேசம், மலேசியா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தோனேசியா, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளாலும் மேற்கே மொசாம்பிக், சான்சிபர், சோமாலியா, சூடான், எகிப்து, யேமன், சவுதிஅரேபியா ஆகியவற்றோடு பாரசீக வளைகுடா, அரேபியன்கடல் ஆகியவற்றைக் கண்காணிக்கும் நாடுகளாலும் இவற்றுள் பாகிஸ்தானும், இந்தியாவும் அடங்கும் சூழப்பட்டிருக்கின்ற இந்தியாவில் இரண்டரைக்கோடி முசிலிம் மக்கள் உள்ளனர்.

இங்குள்ள பல நாடுகளில் அல்குவைதா அமைப்பு நன்கு காலுன்றியுள்ளது இதனால் பெருமளவில் இயிகாதிகள் (jihadist) உருவாக்கப்பட்டுகின்றன.

உலகிற்கான நிலநெய்யைக் கப்பல் மூலம் கொண்டு செல்லும் வழியில் மூன்று இடங்களில் தடையை ஏற்படுத்தல் சுலபம். சுயசுகால்வாய், கோமசு நீர்க்கால், மலாக்கன் நீர்க்கால் ஆகிய ஒடுங்கிய வழிகள் முசிலிம் மக்களைக் கொண்ட நாடுகளின் அரண்கள் வழியே இருக்கின்றன. உலகின் 60% நிலநெய் செல்லும்வழி இது தான் இயிகாதிகள் இதனைத் தடுக்க முயலுவர் என அமெரிக்காவோடு மேற்குலகு அஞ்சுகிறது.

கசுபியன் கடல்ப்பகுதியில் பெருமளவிலிருக்கும் நிலநெய்கைக் குழாய் மூலம் ஆப்கானிஸ்தானுடாக அமெரிக்கா கொண்டு செல்வதற்காகவே அது ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தது. இங்கு அது செய்யும் முதலீடு காரணமாக கோமசு நீர்க்காலும் சுயசுகால்வாயும் எவ்வாறேனும் காக்கப்படவேண்டும். சுயசுகால்வாயில் சில நிலநெய் தாங்கிகள் தாக்கி மூழ்கடிக்கப்பட்டால் பாரசீக வளைகுடா கசுபியன் கடல் ஆகியவற்றிலிருந்து செல்லும் நிலநெய் முற்றாகத்தடைப்படும் இதனால்.

உலகப்பொருளாதாரம் பெரும்பின்னடைவை எதிர்கொள்ளும்.

இதன் காரணமாக அமெரிக்கா, மேற்குலகோடு யப்பானுக்கும் இந்துமாவாரியில் உள்ள வழிகளை காப்பாற்றுவதும் அதில் தடை ஏற்படாது இருப்பதும் இன்றியமையாததாக இருக்கிறது. இதனால் இவை இயிகாதிகளால் குழப்ப முடியாத ஒரு நடுநிலையான தளத்தைத் தேடுகின்றன அந்தத் தளத்திலிருந்து இந்த வழிகளை கண்காணிக்கவும் விரும்புகின்றன.


அமெரிக்காவுக்கு இடியாகோ கார்ச்சியாவில் ஒரு தளமுண்டு இடியாகோ கார்ச்சியாவை தளமாக அமெரிக்கா பயன்படுத்துவதற்கான உடன்பாடு 2017 இல் முடிவுக்கு வருகிறது. இடியாகோ கார்ச்சியாவில் 900 அமெரிக்கப் படையினர் தனது ஐந்தாவது கடற்படைக்கும் பி 52சி குவாட்டிரன் குண்டு வீச்சிகளுக்கும் ஆதரவுதர இருக்கின்றனர் இத்தளத்திலிருந்தே ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றன.

« அமெரிக்கா அதன் நலனுகளுக்கு எதிராக எதிர்காலத்தில் எழும் அச்சுறுத்தலை எதிர் கொள்ள ஒரு தாக்குல் தளமாகவும் மத்திய கிழக்கிலிருந்தான நில நெய் வழியைக் காக்கக் கூடிய இடமாகவும் இந்த இரண்டு இலக்குகளையும் அடையக்கூடிய மூலோ பாய இடமாகவும் இலங் கைத்தீவைக் கருதுகிறது. »

இந்தச் சூழலிலேயே அமெரிக்கா திருமலையில் ஒரு தளத்தை அமைக்க விரும்புகின்றது இலங்கையை அது ஒரு பெளத்த நாடாகப் பார்க்கின்றது இலங்கையில் இயிகாதிகளால் குழப்பம் ஏற்படுத்த முடியாது என அது கருதுகிறது.

இந்தியாவும் அதன் நாட்டுள் எழக்கூடிய இயிகாதிகளின் அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள அமெரிக்காவின் ஒத்துழைப்பையும் காப்பையும் விரும்புகின்றது.


திருகோணமலை உலகில் மூன்றாவது பெரிய இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ளது இங்கு அமெரிக்காவின் அணு நீர் மூழ்கிக் கப்பல் காப்பாக மறைந்திருக்கக் கூடிய ஒரு ஆழமான சுரங்க



திருகோணமலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முண்டு மேலும் திருகோணமலையில் நில நெய்யைச் சேமித்துவைக்கக் கூடிய நூறு பெரிய நிலநெய்த் தாங்கிகள் உண்டு இதனைப் பயன்படுத்தி அமெரிக்காவால் அதனது ஐந்தாவது கடற்படைத் தொகுதிக்கு நிலநெய் வழங்கலை மேற்கொள்ள முடியும் அதனால் திருமலை வான் தளத்தை அமெரிக்காவின் பி 52, எ 14 வானூர்திகள் பயன்படுத்தக் கூடிய வகையில் சீரமைக்க முடியும் அமெரிக்கா சிறிலங்காவுடன் 2002 இல் ஒரு காப்பு உடன்படிக்கையைச் செய்தது. இதன் மூலம் அமெரிக்கக் கடற்படை சிறிலங்காவின் துறைமுகங்களுக்கு செல்வதற்கான ஒப்புதலைப் பெற்றுள்ளது.

அடுத்த இருபது ஆண்டுகளில் சீன ஆசியாவின் வலுமிக்க வல்லரசாகும் தனது விரிவாக்கத்தை கட்டுப்படுத்தவேண்டும் அதற்கு இலங்கை மூலோபாய ரீதியில் நல்ல இடமாகும் மத்திய கிழக்கிலிருந்து நிலநெய்யை இறக்குமதி செய்யும் சீனாவானது மியான்மார் இந்தோனேசியாவிலிருக்கும் நிலநெய்மீதும் கண்வைக்கலாம் யப்பான் இதே காரணத்திற்கான 1940இல் இப்பகுதியில் போரிட்டதும் குறிப்பிடத்தக்கது.

இயிகாதிகளின் செல்வாக்கை முன் செயலிழக்கச் செய்யவும் மத்திய கிழக்கிலிருந்து சுயசுகால்வாய், கோமசு நீர்க்காலூடான கடல் வழியைத்திறந்து வைத்திருக்கவும் அமெரிக்கா, இந்தியா, யப்பான் ஆகிய நாடுகள் இலங்கையை மூலோபாய வகையில் மிக முக்கிய நாடாகக் கருதுகின்றன அவற்றிற்கு இருக்கும் பெரிய சிக்கல் இங்கு நடக்கும் போராகும் எனவே இந்தப் போரை விரைந்து முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே அவற்றின் விருப்பமாகும்.

போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனும் அவற்றின் விருப்பில் தமிழர் உரிமை குறித்துப் பெரிய அளவில் அக்கறை இருப்பதாக அவற்றின் கடந்த நிகழ்கால நடவடிக்கைகள் காட்டவில்லை தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலமிழக்கச் செய்வதன் மூலம் தமிழ்

> « தமிழீழ விடுதலைப்புலிகளை போரால் வலுவிழக்கச் செய்ய முடியாது என்பதைக் காலம் இந் நாடுகளுக்கு உணர்த்தும் அதற்குள் சிங்களப்பேரினவாதத்தால் மலையகம் வாழ் தமிழர், முசிலிம்களின் வெறுப்பையும் கோபத்தையும் சிறிலங்கா எதிர்கொள்ளும், பொருளாதாரச் சீரழிவு, நாடு முழுவதையும் படைமயமாக்கல் என்பன சிங்களவர்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும். »

மக்களின் உரிமைக் குரலை வலுவிழக்கச் செய்து சிங்களப் பேரினவாதம் விரும்பும் ஒரு தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிக்கவே அவை விரும்புகின்றன. அ மை தி என்ற போர்வையில் போராட்டத்தை நீர்த்துப் போக வைக்க முடியும் என்ற அவற்றின் கனவு சிதைந்து விட அவை சிங்களப் பேரினவாத வெறிக்கு ஊக்கம் தந்து அதற்கு படைக்களம் தந்து தமிழர்களின் உரிமைக் குரலை நசுக்கும் பணியில் வெட்கமின்றி மனசாட்சியின்றி ஈடுபட்டுள்ளன. அதனது நலனுக்காக தமிழர்களின் உணர்வுகளைப் புறந்தள்ளிச் செய்யப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தற்காக வடகிழக்கு மாகாண இணைப்பை சிங்கள அரசு கைவிட்டபோது இந்தியாவின் செயலின்மை அதற்குக்கூறிய கருத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும் இந்த ஒப்பந்தத்திற்கு செயல்வடிவம் தரவே போர் தொடுத்ததாகக் கூறிய இந்திய அரசு அதற்காக ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்களை கொன்று நூற்றுக்கணக்கில் பெண்களை பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கி, தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்தது.

இப்போது அமெரிக்கா, இந்தியா, யப்பான், பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் இலங்கையில் இருக்கும் 'பயங்கரவாதத்தை' ஒழிக்கத் தாம் சிறிலங்காவுக்கு உதவுவதாகக் கூறுகின்றன. அதேவேளை தமிழர்கள் உரிமை குறித்து அவ்வப்போது கடமைக்குப் பேசிவருகின்றன.

இரண்டாம் உலகப்போரின் பின் யப்பானுக்கு விடுதலை அளிக்க வேண்டுமென அப்போது சிலோன் என்று அழைக்கப்படும் இலங்கைத்தீவின் வெளி விடய அமைச்சராக இருந்த யே.ஆர் ஜெயவர்த்தனா 1952 - இல் சான்ஸ்பிரான்சிக்கோ மாநாட்டில் பேசியமைக்காக யப்பான் சிறிலங்காவை நன்றி உணர்வுடன் மதித்து வருகின்றது. யப்பான் வழங்கும் இரு நாடுகளுக்கான உதவிப் பணத்தில் பெருமளவுப் பணம் சிறிலங்காவுக்கே தரப்படுகின்றது. இந்தப்பகுதியில் அது அழிக்கும் கடனில் மூன்றிலொரு பகுதியை சிறிலங்காவுக்கே தருகின்றது. சிறிலங்கா பெறும் இரு நாடுகளுக்கான உதவிகளில் நாற்பது வீதத்தை யப்பானே தருகின்றது. மகாயன பௌத்த நாடான யப்பான் தேரவாத பௌத்த நாடான சிறிலங்காவுடன் கொண்டிருக்கும் உறவானது மதம் நன்றிக் கடன் என்பதற்கு அப்பால் தென்னாசிய வர்த்தகம் இப்பகுதியை ஆதிக்கம் செலுத்தல் புல்மோட்டையில் இருக்கும் கனிமவளங்களைப் பெறுதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டிருக்கின்றது. அது இப்போது இவற்றிற்கெல்லாம் மேலாக மேலே கூறப்பட்ட காரணங்களுக்காகவும் சிறிலங்கா அரசுக்கு உதவி வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளை போரால் வலுவிழக்கச் செய்யமுடியாது என்பதைக் காலம் இந்நாடுகளுக்கு உணர்த்தும் அதற்குள் சிங்களப்பேரினவாதத்தால் மலையகம் வாழ் தமிழர், முசிலிம்களின் வெறுப்பையும் கோபத்தையும் சிறிலங்கா எதிர்கொள்ளும், பொருளாதாரச் சீரழிவு, நாடு முழுவதையும் படைமயமாக்கல் என்பன சிங்களவர்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும்.

இன்று சூழல் தமிழீழத்திற்கு எதிரானது போல காட்சியளிப்பினும் நாம் வலுவோடு அடிபணியாது துணிந்து எமது உரிமைக்காக எவ்வளவு இடர்வரினும் போரிடுவோமாயின் சூழல் மாறும் தமிழீழ தமிழரசுக்கான வாசல் தானாகவே திறக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருக்கோணேச்சரம்

கருணாகரன்



பாடல்பெற்ற திருத்தலத்தின் திசைமுகங்களில்
பேரிசை முழக்கம்
உடுக்கொலி மறைத்து
சங்கொலி மறைத்து
எழும் நாதப் பேரிசை மறைத்து.

மலைகளை அதிரவைக்கும் விதமாய்
'தென்னாடுடைய சிவனே போற்றி...'
என்றவரெல்லாம்
அடிவீட்டில் முடங்கினார்
வழிதோறும் மலைமுழுதும்
படைவீட்டின் பெருக்கம் கண்டு.

இராவணன் வெட்டில்
கடல் குமுறித்துடித்தது
நூற்றாண்டாய், அதற்கும் அப்பால்
ஆயிரமாண்டுகளின்
தேவாரப்பண்ணிசையை
அலைகள் பாடின ரகசியமாய்.

பீரங்கிகளோடு அலைகளை மேவி அலைந்தன
போர்ப்படகுகள்
துறைமுகத்தில்.
எண்ணெய்க்குதங்கள் இந்தியாவுக்கு
சில பங்குகள் சீனாவுக்கு
பிரிமா ஆலையும் சீமேந்து ஆலையும்
யப்பானுக்கு
துறைமுகமோ அமெரிக்காவுக்கு.

சிவனுக்கோ
அடியாருமில்லை
அடிவைக்க இடமுமில்லை.

மலை முகட்டில் புத்தரின் சொரூபம்
நிஷ்டையில்.
தியானம் வசதியாகிப் போய் விட்டது
அவருக்கு
அடையாள அட்டை இல்லாதபோது
கண்மூடி அமர்ந்து விடலாம் சற்றுப்பாதுகாப்பு.

மலையில் சிவன்
சுற்றிவரப்படையாட்கள்
எங்கே போவது
துவாரபாலகர்களையும் காணவில்லை
அவர்களைப் பிடித்துச் சென்றது யார்
யாரிடம் முறையிடுவது.

பதற்றத்துடன் உமையொருபாகன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள

# தமிழின உணர்வை மழுங்கடிக்க முயலும் தீய சக்திகள்


தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி

80 களை நினைவுபடுத்துவது போல தமிழ் நாட்டில் ஏற்பட்டு வரும் தமிழின உணர்வுகளை மழுங்கடிக்க சில தீய சக்திகள் முயல்கின்றனவா? இதற்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி பலியாகி விட்டாரா என்று ஈழத்தமிழர் ஆதரவுச் சக்திகள் கேள்வி எழுப்புகின்றனர்.

கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பில் வரலாற்றுக் கறை படிந்த தீர்மானமொன்றை தமிழக சட்ட சபையில் நிறைவேற்றி தமிழினம் சந்தேகப் படும்படி நடந்து கொண்டுள்ளார் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்புதியசட்டம் விடுதலைப் புலிகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்க வகை செய்கிறது. இது முற்று முழுதாக தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதே இது தமிழ் மக்கள் மீது வீணான குற்றச் சாட்டுக்களை சுமத்தி நடவடிக்கை எடுக்கவும் முயலக் கூடும்.

இது போன்ற சட்டம் கொண்டு வர வேண்டிய தேவை எழுந்ததா? இது பற்றிய நெருக்கடிகள் முதல்வருக்கு ஏற்படாவிட்டாலும் பொறு, காத்திருக்க வேண்டும் என்பது தமிழர்களின் வேணவா.

■ கலி

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசுவது பரப்புரை செய்வது துண்டுப்பிரசுரம் வெளியிடுவது, கூட்ட ஒழுங்கு, இரங்கல் தெரிவிப்பது, உண்ணா நோன்பு இருப்பது, ஆர்ப்பாட்டம் பேரணி போன்றன நடத்துவது அனைத்தும் தண்டனைக்குரிய குற்றமாக கொள்ளப்படும். என அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தமிழின உணர்வாளர்களுக்கு அதிர்ச்சியூட்டக் கூடியதே இது வேறெந்த நாட்டிலோ நடந்திருந்தால் அது பற்றி யாரும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அது நம்ம தமிழ் நாட்டில் நம்மட முதல்வர் கருணாநிதி இருக்கிற நாட்டில் நடந்திருக்கிறது. என்பதை தான் பலராலும் சகித்துக் கொள்ள முடியாததொன்றாக நினைத்து வெம்பி வெதுங்குகிறார்கள்.

விடுதலைப்புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு அல்ல விடுதலைப் புலிகள் அல்லாத தமிழர் போராட்டமும் ஒன்று இங்கு இல்லை ஈழத்தில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பு அரணாக விடுதலைப்புலிகளே உள்ளனர். இந்நிலையில் இது போன்ற சட்டங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தவே உதவும். இதனை கருணாநிதி உணராமல் இருக்க முடியாது.

இது போன்ற சட்டங்களை தமிழக மக்கள் ஆதரிக்க மாட்டார்கள். வேண்டுமானால் மக்கள் கருத்துக் கணிப்பை நடத்திப் பார்க்கட்டும். என தொல் திருமாவளவன் வன் துவேசமாகக் குறிப்பிட்டது வரவேற்கத்தக்கது. இச்சட்டத்தின் மூலம் கருணாநிதி தொடர்பாடல் நன் மதிப்பு பாதிக்கப்பட்டுள்ளது எனக் கூறுகின்றநதா.

கலைஞர் இது தொடர்பாக அவசரப்பட்டு விட்டார். இந்திய நடுவன் அர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிற்கு அவர் பலியாக இருக்கக் கூடும் அல்லது தமிழ் நாட்டில் சில கட்சிகளின் மூர்க்கத்தனமான விடுதலைப் புலி எதிர்ப்புக்கு இரையாகி இருக்கலாம். ஆயினும் கலைஞரின் இந்தத் தவறான முன்னோட்டம் அவர் மீது உலகத் தமிழர் வைத்திருந்த நன்மதிப்பிற்கு காயத்தை ஏற்படுத்தி விட்டது.

சிறிலங்கா அரசாங்கத்தை திருப்திப்படுத்த இந்தியா முயல்கிறது. டெல்லியை திருப்திப்படுத்த கருணாநிதி முயல்கிறார் என்பதை இது போன்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். கலைஞரின் விட்டுக் கொடுப்புக்கள் சில வேளை அவரது ஆட்சி காப்பாற்ற உதவலாமே தவிர ஈழத்தமிழர்களை பாதுகாக்க உதவாது.

சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களை இராணுவத் தாக்குதல் மூலம் அழிக்கும் நோக்கத்திற்கு இது போன்ற சட்டங்கள் மேலும் வலுச்சேர்க்கும். தமிழீழத்தினையும் மக்களையும் பாதுகாக்கும் பணியில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டு வரும் நிலையில் அவர்களுக்கான தார்மீக ஆதரவை இந்திய அரசுகள் வழங்குவது நியாயபூர்வமான நெறியாகும்.

இதனை செய்யாது விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்துவதாக கூறிக் கொண்டு தமிழர் விரோதச் செயல்களில் மத்திய மாநில அரசுகள் ஈடுபடுவது இப்பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தவோ அல்லது பிரச்சினைகளுக்கு தீர்வு காணவோ உதவப்போவதில்லை.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் போரைத் திணித்துள்ள சிங்களம் அதனை இப்போது மேலும் தீவிரப்படுத்தி வரும் நிலையில் தென்னிலங்கையில் குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. இது பன்னாட்டு சுற்றுலா பயணிகளின் வருகைக்கு இயல்பானதாக இல்லாத நிலையில் பிரிட்டன் தனது விசா வழங்கும் பிரிவை சென்னைக்கு மாற்றியுள்ளது. இது பிரிட்டிஷ் தூதரகத்திற்கு பாதுகாப்பில்லை என்று எடுத்துக் கொள்ளலாமா என்று பிரிட்டிஷ் தூதுவரிடம் கேட்டதற்கு பதிலளிக்க மறுத்து விட்டார். இது போன்ற நிலைகளுக்கே வழிவகுக்க உதவும். இவை இப்போது பிரிட்டிஷ் செல்ல விசா பெற சென்னை செல்ல வேண்டிய தேவை சிங்கள மக்களுக்குமே ஏற்பட்டு விட்டது.

இன்று தென்னிலங்கை முழுவதும் போர் மூண்டு விட்டதையே இவை காட்டுகிறது. இந்தியாவிலும் தமிழகத்தில் உள்ளூர் அமைப்புக்கள் மற்றும் தீவிரவாத அமைப்புக்கள் பலமடைந்து வரும் நிலையில் அங்கு பல்வேறு வன்முறைகள் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில் கூட இந்தியா மற்றும் தமிழக பிராந்திய அரசியல் பொருளாதார நலன்களுக்கு விடுதலைப் புலிகள் ஆதரவான போக்கையே கொண்டிருந்தனர். இது விடயத்தில் இந்தியத்தலைவர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கு இடையில் நல்லெண்ணத்தை வளர்க்க முதல்வர் கருணாநிதி பலமாக இருக்க வேண்டும் சிறிலங்கா அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிய போது பன்னாட்டு சக்திகள் கவலை வெளியிட்டன. இந்திய நடுவன் அரசில் தி.மு.க. பிரதான கூட்டணியாக இருக்கிறது. இந்நிலையில் கூட நடுவன் அரசிற்கு இடித்துரைத்து இது குறித்த எச்சரிக்கையையோ அல்லது கண்டனத்தையோ ஆகக் குறைந்தது கவலையையோ வெளியிட்டு வைக்க முடியாமல் போனது தமிழ் மக்களை பெரிதும் வாட்டியெடுத்தது.

சிறிலங்கா அரசாங்கம் போர் நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகி, வடக்கே போரை தீவிரப்படுத்தி தமிழர்களை அழித்து வருகிறது. இந்நிலையால் கூட தமிழக முதல்வர் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்ட சக்திகளுக்கு ஆதரவு வழங்கியிருக்க வேண்டும். அது அவரது தார்மீக கடமையாகும். என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான செயற்பாடுகளில் மும்மரமாக ஈடு

> **சிறிலங்கா அரசாங்கத்தை திருப்திப்படுத்த இந்தியா முயல்கிறது. டெல்லியை திருப்திப்படுத்த கருணாநிதி முயல்கிறார் என்பதை இது போன்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். கலைஞரின் விட்டுக்கொடுப்புக்கள் சில வேளை அவரது ஆட்சி காப்பாற்ற உதவலாமே தவிர ஈழத்தமிழர்களை பாதுகாக்க உதவாது.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படும் பல தலைவர்கள் தமிழகத்தில் உள்ளனர். அவர்களுக்கு இச்சட்டம் பாரதூரமான இடரை ஏற்படுத்திவிட்டது. எதிர்காலத்தில் ஈழத்தின் போராட்ட வடிவங்களுக்கு குரல் கொடுக்க முனையும் அவர்களை பழி வாங்க இது போன்ற சட்டங்கள் துணை போகலாம்.

எனவே இதனை முதல்வர் துணிவுடன் தீர்க்க வேண்டும். சிறிலங்கா அரச பயங்கர வாதத்திற்கான எதிர்வினைதான் விடுதலைப்புலிகளின் போர் என்ற கருத்தை துணிச்சலோடு சிங்கள இடதுசாரித்தலைவர்களில் ஒருவரான ரணத் குமாரசிங்க கடந்த வாரம் சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கருத்துரிமை மீட்பு மாநாட்டில் உரை நிகழ்த்தும் போது குறிப்பட்டார்.

இது போன்ற சிந்தனைகள் கூட முதல்வரின் மனங்களை மாற்றவில்லை என எண்ணும் போது முதல்வருக்கு எத்தகைய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பது விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகவே உள்ளது. இது குறித்து பழ நெடுமாறன் குறிப்பிடும் போது நீதியை மதிக்காத காங்கிரஸ்வாதிகளிற்கு அடி பணிந்து கருத்துரிமை மறுக்கும் சட்டம் கொண்டு வந்து முதல்வரின் இயலாமையை வெளிப்படுத்துகிறது. என்பது தமிழக முதல்வரின் ஆளுமைக்கு விடப்பட்ட சவாலாகும்.

தமிழ் உணர்வுமிக்க கருணாநிதியின் சொல்லாடல்கள் எங்கே போய் விட்டது? இரும்பையொத்த மனவுறுதி கொண்ட கருணாநிதியின் துணிச்சல் எங்கே போனது. தமிழினம் ஏற்காத இச்சட்டத்திற்கு ஒப்புதல் அளித்து சேறு வாரிப் பூசிக்கொண்டாரே சிறிலங்கா இராணுவத்தால் தமிழர் தாக்கப்படும்போது அதனைக் கண்டித்து முதல் எழும் குரல் தமிழகத்தினுடையதாக இருக்கும். ஆனால் இன்று அனுமதிக்க முடியாது என்பது போல் தமிழக சட்டப் பேரவை தீர்மானம் போட்டுள்ளது.

இனிமேல் வீரமணி, சு.ப.வீரபாண்டியனும், திருமாவளவனும், சாகுல் அமீது போன்ற தமிழின உணர்வாளர்கள் அச்சமின்றி விடுதலைப் போராட்டம் பற்றியும் அதற்கு தலைமை தாங்கும் விடுதலைப் புலிகள் பற்றியும் ஆதரித்து பரப்புரை செய்ய முடியுமா?

சிங்களத்தின் கொடுமைகளை கண்டித்து கூட்டம் போட முடியுமா? தமிழ்ச் செல்வனுக்கு இரங்கல் கவிதை எழுதிய முதல்வர் கருணாநிதியால் இனி வீரச்சாவெய்தும் போராளிகளுக்கு கவிதை வார்க்க முடியுமா?

செல்வா நீ எங்கு சென்றாய் என்ற தலைப்பில் கவிதை எழுதி அதனைத் தலைமை செயலக அரசுச் செய்திக்குறிப்பில் வெளியிட்டு வைக்க அது அனைத்து இணையத்தளங்களிலும் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டதும் அதனை வரிக்கு வரி படித்து கொண்ட தமிழ் நெஞ்சங்கள் உள்ளத்தில் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தியது. என்பதெல்லாம் மறக்க வேண்டிய செய்தியாகிவிடுமா? உலகத்தமிழினம் கலைஞரின் கவிதை வரிகளைப் பாடலாக்கி தங்கள் வீரவணக்க நிகழ்வுகளில் பாடி மனதை தேற்றிக் கொண்டனர். அது போன்றே தமிழர்கள் நடாத்தும் வீரவணக்கக் கூட்டங்களின் மேடைகளில் வைக்கப்படும் தமிழ்ச்செல்வனின் நினைவுப்படங்களின் கீழே கலைஞரின் கவிதை வரிகளைப் போட்டு திருப்திப்பட்டனர்.

> **செல்வா நீ எங்கு சென்றாய் என்ற தலைப்பில் கவிதை எழுதி அதனைத் தலைமை செயலக அரசுச் செய்திக்குறிப்பில் வெளியிட்டு வைக்க அது அனைத்து இணையத்தளங்களிலும் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டதும் அதனை வரிக்கு வரி படித்து கொண்ட தமிழ் நெஞ்சங்கள் உள்ளத்தில் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தியது. என்பதெல்லாம் மறக்க வேண்டிய செய்தியாகிவிடுமா?**

ஆறரைக் கோடி தமிழ் மக்களின் உணர்வுகளை தனது இரங்கல் கவிதை மூலம் பிரதி பலித்துள்ள கருணாநிதி இப்போது குறிதவறி தடுக்கி விழுந்த செய்தி பலரை வியப்பில் ஆழ்த்தி விட்டது.

கருத்து வெளியிடுவது குற்றமாகாது எனக் கூறிய 24 மணித்தியாலத்திற்குள் கருணாநிதி கருத்து வெளியிடுவது தண்டனைக் குரிய குற்றமென சட்டசபையில் தீர்மானம் போட்டு சொல்லியுள்ளது. எவ்வளவு கொடுரமானது. என்பதை விட இவ்வளவு அவசரப்பட்டு கருணாநிதியால் எப்படிச் சொல்ல முடிந்தது. என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழக முதல்வரே தமிழ்ச் செல்வனுக்காக இரங்கல் தெரிவித்ததும் தமிழகத்தில் எழுந்துள்ள வீரவணக்க எழுச்சிக் கூட்டங்களும், சிங்கள அரசிற்கு எதிரான கண்டனங்களும், ஆர்ப்பாட்டங்களும் கண்டு கொழும்பு அதிர்ச்சியடைந்த செய்திகள் ஏற்கனவே வெளிவந்திருந்தன. இவை இவை தொடர விடக்கூடாதென சிறிலங்கா துணை தூதரக அதிகாரியை கோத்தபாய ராஜபக்ச கேட்டுக் கொண்டார் என்ற செய்திகள் தமிழகத்தில் உலாவி வந்தன. ஆயினும் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதான பிரதிபலிப்பு வெளிவராத நிலையில் கடந்தவாரம் தமிழக சட்டசபையில் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இது தொடர்பில் கொழும்பு புதுடெல்லியை நெருங்கி வந்ததன் விளைவே தமிழகத்தில் முதல்வரின் தீர்மானம் அரங்கேற்றப்பட்டுள்ளதா?

என்ற நிலையில் இந்தியா வழங்கி வரும் படைக்கல ஆயுத உதவிகளை நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் இலங்கைத்தமிழர் மீதான போராக உருமாறியுள்ளது. எனவே சிறிலங்காவிற்கான இராணுவ உதவிகள் முழுமையாக நிறுத்த இந்திய நடுவன் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொண்டுள்ளதை தமிழக முதல்வர் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்தவாரம் சென்னையில் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா இவ்வாறு தெரிவித்திருப்பதை கூட முதலமைச்சர் கருணாநிதி ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. தமிழகத்தில் என்றுமில்லாத தமிழின எழுச்சி ஏற்பட்டு வரும் சூழ்நிலையில் இந்த நெருக்கடி தோன்றியுள்ளது.

இதனிடையே சிறிலங்காவின் இனப் படுகொலையை இந்தியா தடுத்து நிறுத்த வேண்டும் இந்திய எவ்வித ஆயுதங்களையும் வழங்கக் கூடாதென பெரியார் திராவிடக் கழக தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் இந்திய நாடாளுமன்றம் முன்பாக கனவ ஈர்ப்புப் போராட்டமொன்றை நடத்தி, தமிழக மக்களின் உணர்வை வெளிப்படுத்தியமை ஈழத்தமிழர்களுக்கு ஆறுதலான செய்தி இது போன்று கோவை மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சம் கையொப்பம் வாங்கி நடுவன் அரசிற்கு உரத்துச் சொன்னது கூட மிகவும் பயனுள்ள விடயமே. இது போன்ற நிலைகளை உணர்ந்து கலைஞர் சட்டத்தை திரும்ப பெறுவது வரவேற்கத்தக்கது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜெயராஜ்

மூன்று தசாப்தமாக நீடித்து வரும் தமிழர் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் காலத்துக்குக் காலம் பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. இன்று நெருக்கடிகள் சந்தித்து காலத்துக்கு ஏற்ப அதன் பரிமாணம், பருமன் என்பன மாறுபட்டதாக இருப்பினும் அக்கால கட்டத்துக்கு ஏற்ப அவை மிகப் பெரிய சவால்களாகவே, நெருக்கடிகளாகவே இருந்தன.

மறுவளமாக இத்தகைய நெருக்கடிகள், சவால்கள் யாவற்றையும் எதிர்கொண்டு அவற்றை மேவியதாக விடுதலைப் போராட்டத்தை உயிர்ப்புடனும் துடிப்புடனும் முன்னோக்கி நகர்த்துவதில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் வெற்றி கண்டிருந்தார்.

வேறு விதமாகக் கூறப்போனால் போராட்டம் சந்தித்த நெருக்கடிகளையும், சவால்களையும் தாண்டி அதனை முன்னோக்கி நகர்த்திச்செல்லும் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் இப்போராட்டத்தின் இயங்கு சக்தியாக அல்லது மைய சக்தியாக இருந்து வருகிறார்.

கெரில்லாப் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்டு இன்று முப்படைகளையும் கொண்ட கட்டமைப்புக்களுடன் கூடியதான ஒரு விடுதலை அமைப்பாகவும் ஒரு தனியரசுக்குரிய நிர்வாகக் கட்டமைப்புகளைக் கொண்ட ஓர் அரச நிர்வாகமாகவும் விடுதலைப்புலிகள் இயக்கம் வளர்ச்சி கண்டுள்ளது.

விடுதலைப்புலிகள் கண்டுள்ள இவ் வளர்ச்சியாது படிப்படியான தொன்றாகிலும் அது இலகுவில் பெறப்பட்டதொன்றல்ல காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை ஆயுத ரீதியில் தோற்கடித்து விட, அடக்கி விட, மேற்கொண்ட பாரிய முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் தாண்டியே இவ் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

# நான்காம் கட்ட ஈழப்போர் புலிகளுக்குச் சவாலானதா ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு கெரில்லா இயக்கமாக செயற்பட்ட காலத்தில் அது சந்தித்த நெருக்கடிகள் அவற்றில் இருந்து அது மீண்டெழுந்துள்ளமை குறித்து இங்கு ஆராயும் நோக்கம் இல்லை. விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முன்னணி இயக்கமாக தமிழர் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் ஒரு இயக்கமாக வளர்ச்சி கண்ட பின்னர் அது சந்தித்த சவால்கள் அவற்றிலிருந்து மீண்டு வருவதற்கு தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் கைக்கொண்ட யுக்திகள், நகர்வுகள் என்பன குறித்தே இங்கு நோக்கப் படவுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி கண்ட பின்னர் சிறிலங்காவில் பதவிக்கு வந்த ஒவ்வொரு சனாதிபதியும் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்து விடவே முற்பட்டனர். இதனை அண்மையில் சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கூட உறுதி செய்திருந்தார் அவர் 'விடுதலைப்புலிகளை தோற்கடிக்க ஐந்து சனாதிபதிகள் முயற்சித்து தோல்வி கண்டுள்ளனர்' என தெரிவித்திருந்தார் இது கோத்தபாய ராஜபக்ச விடுதலைப்புலிகளிடம் புகழாரம் பெற முடியாது என்ற புரிதலின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டதாகும்.

சுருக்கமாகச் சொல்லப்போனால் கடந்த மூன்று கட்ட ஈழப்போரின் ஒவ்வொரு கட்டத்திலும் சிறலங்காவில் ஆட்சியிலிருந்த ஆட்சியாளர்கள் அனைவரும் ஒரு தடவையோ அன்றி ஒன்றிற்கு மேற்பட்ட தடவையோ விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க பகீரதப் பிரயத்தனத்தை செய்தார்கள் சிலர் தனித்தும் செய்தனர் சிலர் ஏனையோரின் துணையுடனும் செய்தனர்.

இதேவேளை தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் இச்சவால்களையும், நெருக்கடிகளையும் தனித்து நின்றே எதிர்கொண்டார். இவ்வேளையில் ஒவ்வொரு கட்டத்திலும் எதிரியின் சவாலை எதிர்கொள்ள புதிய யுக்திகள், தந்திரோபாயங்கள், புதிய வழிமுறைகள் என்பன அவரால் அறிமுகம் செய்யப்பட்டன. அதன் மூலம் கள நிலையில் பாரிய திருப்பங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்த முடிந்தது.

இம் மூன்று கட்டப் போரிலும் விடுதலைப் புலிகள் மீது கொடுத்த உச்ச கட்ட நெருக்கடியை பின்வருமாறு சுட்டிக்காட்ட முடியும்.

### முதலாம் கட்டம்

ஒப்பிரேசன் லிபரேசனும், இந்திய இராணுவத்துடனான மோதலும்.

### இரண்டாம் கட்டம்

யாழ் குடாநாட்டு முற்றுகை முயற்சியும், யாழ் தேவி நடவடிக்கையும்.

### மூன்றாம் கட்டம்

ரிவிரசவும், ஜெயசிக்குறுவும்.

விடுதலைப்புலிகள் யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னர் அவர்கள் எதிர் கொண்ட பெரும் சவால் ஒப்பிரேசன் லிபரேசனாகும். சிறிலங்கா இராணுவம் விமானப்படையின் உதவியுடன் பாரிய படை நகர்தல் ஒன்றின் மூலம் வடமராட்சிப் பிரதேசத்தை வன்பறிப்புச் செய்தது.

அத்தோடு வலிகாமம் மீது விரைவில் படை எடுக்கப்படும் எனவும் அரசாங்கத் தரப்பால் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது அத்தகைய ஒரு நிலையில் தேசியத் தலைவர் அவர்கள் உயிராயுதம் என்னும் தற்கொடைத்தாக்குதலைப் பயன்படுத்தத் தீர்மானித்தனர்.

இதன் பிரகாரம் கரும்புலி கப்டன் மில்லர் முதற் கரும்புலியாக நெல்லியடி மகா வித்தியாலயத்தில் இருந்த சிறிலங்கா முகாமைத் தாக்கியழித்தது மட்டுமல்ல சிறிலங்கா இராணுவத் தரப்பிற்கு பெரும் அதிர்ச்சியையும் நெருக்கடியையும் கொடுத்தார்.

இத்தாக்குதலானது ஒப்பிரேசன் லிபரேசன் நடவடிக்கை மூலம் வன்கவர்ந்த பகுதியின் மையப்பகுதிக்குள் இடம்பெற்றமையாலும் விடுதலைப்புலிகளால் புதிய போரியல் யுக்தி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டதினாலும் சிறிலங்காகப் படைத்தரப்பு பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியிருந்தது.

இந்த வகையில் தேசியத் தலைவர் அவர்கள் உயிராயுதத்தைப் பயன்படுத்தியதன் மூலம் யுத்தத்தின் போக்கில் ஒரு மாற்றத்தை திடீர்திருப்பத்தை ஏற்படுத்தினார். இத்திருப்பமானது அன்று சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைக்கு எல்லையிட்டது அன்றி வரையறை செய்தது எனக் கூறின் மிகையாக மாட்டாது.

இதேவேளை 1987 இந்தியா சிறிலங்கா சமாதான உடன்பாடும், இந்திய இராணுவத்தின் வகையையும் விடுதலைப் போராட்டத்திற்கு புதிய ஒரு நெருக்கடியையும் சவாலையும் தோற்றுவித்து இந்நெருக்கடியானது ஆரம்பத்தில் இராசதந்திர அரசியல் ரீதியிலான சவாலாகத் தோற்றம் பெற்று இறுதியில் இராணுவ ரீதியில் அதாவது உலகின் நான்காவது பெரிய இராணுவத்துடன் புலிகளை மோதும் நிலைக்கு கொண்டு சென்றதொன்றாகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறிலங்காவுடன் இந்தியா ஒரு சமாதான உடன்பாட்டைச் செய்து கொள்ள முற்பட்ட போது அது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கானது என்பதை விட இந்தியாவின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதாகவே இருந்தது. ஆனால் இந்திய நலனுக்கு முட்டுக்கட்டை போடாத விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் அக்கறை கட்டினார்.

ஆனால் இந்திய அரசு ஒரு கட்டத்தில் தனது நலன் என்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கும் உரிமைக்கும் மாறாகச்செயற்பாட்டை மேற்கொள்ளத் தொடங்கியமையால் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் இந்தியாவுடன் இராணுவ இராசதந்திர ரீதியில் மோத வேண்டியதானதொரு தீர்மானம் எடுக்கவேண்டியதாயிற்று.

அதாவது தமிழ் மக்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் உறுதி செய்யப் போரிட வேண்டியதான சூழ்நிலை உருவாகியது விடுதலைப்புலிகள் மோதல்களைத் தவிர்க்க மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியடைந்தன.

இந்திய இராணுவத்தின் பயத்தைக் காட்டி விடுதலைப்புலிகள் சரணடைந்து விடுவார்கள் என எண்ணியவர்களுக்குத் தேசியத் தலைவர் ஆயுதத்தை கையில் எடுத்தமை ஆச்சரியம் கொடுக்கும் ஒன்றாகவே இருந்தது.

அது மட்டுமன்றி விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இராசதந்திர நகர்வுகள் இந்திய அரசிற்கு சவால் நிறைந்ததாகவும் நெருக்கடியைத் தோற்றுவிப்பதாகவுமே இருந்தது அதாவது தேசியத்தலைவர் அவர்களின் தலைமைக்கு இலக்கு வைத்தது இந்திய இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளை தேசியத்தலைவரோ தீர்மான இராசதந்திர நடவடிக்கை மூலமும் இராணுவ நடவடிக்கைள் மூலமும் இந்திய இராணுவத்தை தலைகுனிவுடன் வெளியேறிச் செல்ல வேண்டியதான சூழ்நிலையை உருவாக்கினார்.


விடுதலைப்புலிகள்

02

இரண்டாம் கட்ட ஈழப்போர் உச்சக் கட்டத்தை அடைந்த காலத்தில் சிறிலங்கா இராணுவத் தரப்பு விடுதலைப்புலிகளை யாழ். குடாநாட்டிற்குள் உள்ளாகும் வகையில் போர் தந்திரோபாயத்தை வகுத்தது.

இதன் முதற் கட்டமாக 1991 இன் இறுதியில் வலம்புரி நடவடிக்கை மூலம் தீவகப்பகுதியையும் பூநகரியையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. இதன் மூலம் பூநகரி போக்குவரத்துப் பாதை மூடப்பட்டது. இதன் பின்னர் 1992 நடுப்பகுதியில் பலவேகல - 02 நடவடிக்கை மூலம் ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, இராணுவ வேலி அமைக்கப்பட்டது இதன் மூலம் அன்று மக்களின் போக்குவரத்துப் பாதையாக இருந்த ஊரியான், கொம்படி, பாதைகள் மூடப்பட்டன.

இத்தகையதொரு நிலையில் கடற்புலிகள் கிளாலி ஊடான கடல்வழிப் பாதையை திறந்தனர். இந்நிலையில் அப்பாதையும் மூடி யாழ்.குடாநாட்டு முற்றுகையை உறுதி செய்ய சிறிலங்காப் படைத்தரப்பு யாழ்.தேவி என்னும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. ஆனால் இந்நடவடிக்கையானது இராணுவத்திற்குப் பலத்த அடியாக அமைந்ததோடு இரண்டாம் கட்ட ஈழப்போரில் அரச தரப்பை நெருக்கடிக்கும் உள்ளாக்கியது. அதாவது சிறிலங்காப் படைத்தரப்பின் முற்றுகைத் திட்டம் தேசியத் தலைவரினால் இரு முனைகளிலும் எதிர்கொள்ளப்பட்டது அதாவது கடலிலும் தரையிலுமாக விடுதலைப்புலிகளின் போர் யுக்தி அமைந்தது குறிப்பாக யாழ் கடல் நீரேரியில் சிறிலங்கா கடற்படையினரின் சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு கடற்புலிகளின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதே சமயம் ஆழ்கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையின் ரோந்துப் பணிக்கு சவால் விடுக்கப்பட்டது. இதன் ஓர் அங்கமாக டோறாப் பீரங்கிப்படகு மீது பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்புலிகளின் தாக்குதல் நடாத்தப்பட்டது. இது டோறாப் பீரங்கிப் படகு மீது நடத்தப்பட்ட முதலாவது கரும்புலித் தாக்குதலாகும் இதில் சிறிலங்கா கடற்படையின் டோறாப் பீரங்கிப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

இவை யாவற்றிற்கும் உச்சமாக பூநகரிப் படைத்தளம் மீது 1993 நவம்பரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஈருடகத் தாக்குதலானது சிறிலங்காப் படைத்தரப்பிற்கு பெரும் சேதத்தை விளைவித்தது. இத்தாக்குதலை அடுத்து சிறிலங்கா இராணுவம் இயலாமையால் முடங்கிக் கொள்ள அரசியல்வாதிகள் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கான சமாதானம் குறித்து பேச வேண்டியதாயிற்று.

அதாவது காலத்துடன் சேர்ந்து பரிமாணத்திலும், பருமனிலும் வளர்ச்சி பெற்றுச் சென்ற யுத்தத்தை தேசியத் தலைவர் அவர்கள் திறம்பட எடுத்துக் கொண்டதோடு சிறிலங்கா அரசாங்கம் புலிகள் மீது கொடுத்த நெருக்கடியை அவர்களுக்கே திரும்பிக் கொடுத்தார்.

03

ஆயினும் ஆட்சியைக் கைப்பற்றித் தம்மைச் சுதாகரித்துக் கொண்ட சந்திரிகா குமாரதுங்க மிக விரைவிலேயே மூன்றாம் கட்ட ஈழப்போரை நோக்கி நாட்டை நகர்த்தினார் பாரிய படைநடவடிக்கை ஒன்றின் மூலம் யாழ். குடா நாட்டைக் கைப்பற்றவும் விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கான இறுதி யுத்தம் ஒன்றிற்கும் சிறிலங்காவைத் தயார்ப்படுத்தினார்.

ஆனால் தேசியத் தலைவர் அவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறிலங்கா இராணுவத்துடன் ஒரு நீண்ட காலப் போருக்கு உட்படுத்தி வந்தார். இதேசமயம் ஓயாத அலைகள் - 01 இன் மூலம் முல்லைத்தீவு படைமுகாமைத் தாக்கி அழித்து விடுதலைப்புலிகள் இயக்கத்தின் யாழ். குடா நாட்டு வெளியேற்றமானது தந்திரோபாய ரீதியிலான பின்வாங்கல் என்பதை நிரூபணம் செய்தார்.

இருப்பினும் சிறிலங்கா ஆட்சியாளர்களும் ஆயுதப் படைத்தரப்பும் அதனைச் சரியாக மதிப்பீடு செய்திருக்கவில்லை. 'விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிப் போர்' என்ற அறிவிப்புடன் ஜெயசிக்குறு என்ற பெயரில் வன்னி மீது பாரிய படை நடவடிக்கையை அது மேற்கொண்டது.

பல டிவிசன் துருப்புக்களுடன் அதிகளவான போர்த் தளவாடங்களுடன் முன்னெடுக்கப்பட்ட பாரிய படை நடவடிக்கையானது 18 மாத காலம் வரை நீடித்தது. தென்னாசிய வரலாற்றில் நீண்ட இப்படை நடவடிக்கையான ஜெயசிக்குறு சிறிலங்கா இராணுவத்திற்குப் பெரும் இழப்பையும் சலிப்பையும் ஏற்படுத்தியிருந்த வேளையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையைத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் ஆரம் பித்தார்.

சிறிலங்காப் படைத்தரப்பு பாரிய உயிர் மற்றும் யுத்த தளவாட இழப்புக்களை ஏற்படுத்தியதுடன் வன்கவர்ந்த பிரதேசங் களை ஓயாத அலைகள் 03 நடவடிக்கைகள் மூலம் மீட்டெடுத்தார் ஜெயசிக்குறு, வோட் டசெட், ரணகோச போன்ற படைநடவ டிக்கைகள் மூலம் எட்டு மாதங்களுக்கு மேலாக இராணுவம் வன்கவர்ந்த பிர தேசங்கள் யாவும் ஓயாத அலைகள் - 03 நடவடிக்கை மூலம் சில வாரங்களில் மீட் கப்பட்டன.

அது மாத்திரமின்றி ஓயாத அலைகள் - 03 நடவடிக்கை மூலம் ஆனையிறவுப் பிரதேசத்தையும் மீட்டெடுத்தது. அதாவது சிறிலங்கா இராணுவத்தால் அசைக்க முடியாத கோட்டை எனக் கருதப்பட்டதும் வெளிநாட்டு இராணுவ விற்பனர்களால் பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதி செய்யப் பட்டதுமான தளத்தை ஓயாத அலைகள் - 03 மீட்டெடுத்தது.

ஓயாத அலைகள் - 03, மூலம் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தேடிக் கொடுத்த வெற்றியானது இராணுவ ரீதியில் மட்டுமல்ல அரசியல் இராசதந்திர ரீதியி லும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒன் றாகியது. சிறிலங்கா இராணுவ இயந்திரம் இயங்கு சக்தியைப் இழந்தது போன்ற தானதொருகட்டத்தை அடைந்தது.

இந்த வகையில் சிறிலங்காப் படைத் தரப்பு காலத்திற்குக் காலம் விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் அழித்தொழிப்பதற் கென மேற்கொண்ட பாரியபடை நடவடிக் கைகள் தேசியத் தலைவர் அவர்களின் நுட்பமான போர் முறையுக்தி மூலம் முறி யடிக்கப்பட்டன.

04

இத்தகையதொரு நிலையே சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக் கும் இடையில் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று ஒப்பமிடப்படுவதற்கும் சுமார் ஐந் தாண்டு காலத்திற்கு அது குறித்துப் பேசுவ தற்கும் ஆன சூழ்நிலையை உருவாக்கி யது.

இருப்பினும் சிறிலங்காவில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சி உருவா கியதும் யுத்த நிறுத்த உடன்பாடு பல வீனப்பட்டு யுத்தம் முனைப்புப்படுத்தப் பட்டது. இது படிப்படியாக வளர்ச்சிகண்டு கடந்த ஆண்டின் இறுதியில் சிறிலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து தன்னிச்சையாக வெளியேறும் நிலையில் சென்றது. இதன் மூலம் ஏற் கெனவே ஆரம்பித்திருந்த நான்காம் கட்டப்போரை சிறிலங்கா அரசு உத்தியோக பூர்வமாகப் பிரகடனப்படுத்தியதெனலாம்.

சிறிலங்கா அரச தரப்பு இத்தகைய முடி வொன்றிற்கு வருவதற்கு கிழக்கு மாகா ணத்தில் அது இராணுவ ரீதியில் ஈட்டிக் கொண்டதாகக் கருதும் வெற்றியும் 'இனப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர் வொன்றை எட்டிவிட முடியும் என்ற நம் பிக்கையும்' காரணமாக இருத்தல் வேண் டும்.

மாறாக விடுதலைப்புலிகள் இயக் கமோ கிழக்கு மாகாணத்தில் இருந்து தந்தி ரோபாய ரீதியில் வெளியேறி இருந்தது.

இதேவேளை கிழக்கின் வன்கவர்தலை மிகப் பெரும் இராணுவ வெற்றியாக பறை சாற்றிய சிறிலங்காப் படைத்தரப்பு வன்னிப் பிரதேசத்திலும் அத்தகையதொரு வெற்றி யீட்டப்படும் எனவும் அது ஓராண்டு காலத் திற்குள் ஈடுபடும் எனவும் பிரகடனப்படுத்தி யது.

ஆனால் வடக்கின் களமுனை சிறி லங்கா அரசாங்கமோ இராணுவத் தலை மையோ எதிர்பார்த்த மாதிரியானதாக இல்லை இதனை அவர்களின் பேச்சின் சுரு தியில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங் களே வெளிப்படுத்துவதாய் உள்ளன.

எடுத்துக்காட்டாக ஓராண்டிற்குள் முடிக் கப்படும் என அறிவிக்கப்பட்ட யுத்தத்திற்கு தற்பொழுதுகால நிர்ணயம் செய்ய முடி யாது என ஆட்சியாளர் தரைப்பில் கூறப் படுகிறது. அதே போன்று முன்பு வன்னி மீட்பு என இராணுவத் தலைமையால் பேசப்பட்ட விடயம் தற்பொழுது கிளி நொச்சி மீட்பு எனப் பேசப்படுவதாக உள் ளது.

இவை யாவும் சிறிலங்கா அரச தரப்பின் அறிவிப்புக்களின் அடிப்படையிலானதா கும் ஆனால் விடுலைப்புலிகள் தரப்பில் இருந்து போர் பிரகடனங்கள் எவையும் வெளிவந்ததாக இல்லை. ஆனால் புலிகள் குறித்து அதாவது கடந்த கால அனுபவங் களைக் கொண்டும் நிகழ்கால நடவடிக்கை களைக் கொண்டும் நான்காம் கட்ட ஈழப்போரும் வெற்றிகரமாக எதிர்கொள் வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாகவே கொள்ளலாம்.

அத்தோடு சிறிலங்கா இராணுவத்துட னான மூன்று தசாப்த காலப் போராட்டத் திலும் தேசியத் தலைவர் கைகொண்டதான வழிமுறைகள் யுக்திகள் அடிப்படையில் சில எதிர்பார்ப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததே.

இதில் முதலாவதாக சிறிலங்காப் படைத்துறையின் வளர்ச்சி பருமன் என்வற் றிற்கு ஏற்ப விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலும் வளர்ச்சியும் பருமனும் கொண்டதாகவே இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக 1987 இல் வடமராச்சியில் கரும்புலி கப்டன் மில்லரை ஒருவராகப் பயன்படுத்திய தேசியத் தலைவர் கடந்த ஆண்டில் அநுராதபுரம் விமானப் படைத் தளத்தின் மீதான தாக்குதலின் 21 கரும் புலிகளை பயன்படுத்தியிருந்தார்.

குறிப்பாக 1987 வெடிமருந்து ஏற்றிய வாகனத்துடன் சென்று வெடிக்கவைப்பதே கரும்புலி கப்டன் மில்லரின் பணியாக இருந்தது அவ்வேளை அநுராதபுரம் படைத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தச் சென்ற வர்கள் பெரும் தாக்குதல் திட்டமொன் றுடன் சென்று வெற்றிகரமாகச் செயற்பட்டு வீரச்சாவு அடைந்திருந்தார்கள்.

இதை ஒத்ததான மாற்றங்கள் ஏனைய படைத்துறையிலும் ஏற்பட்டே உள்ளன தரைப்படை, கடற்படை, வான்படை என விரிவுபடுத்தப்பட்டுள்ள விடுதலைப்புலி களின் படையணிகள் சாதனைக்குரிய விட யங்களையும் செய்து முடித்துள்ளன. எடுத் துக்காட்டாக புலிகளின் வான்படைத் தாக்கு தல்கள் அநுராதபுரம் விமானப்படைத் தளத்தின் மீது கரும்புலிகளுடனான இணைந்த நடவடிக்கை என்பன சுட்டிக் காட்டத்தக்கன.

சுருக்கமாகக் கூறப்போனால் 'விடுத லைப்புலிகள் மீள முடியாத நிலை ஏற்பட்டு விட்டது, அவர்களின் நாட்கள் எண்ணப் படுகின்றன' என பலரும் நம்ப விளைந்த காலப்பகுதிகளில் பெரும் திருப்பங்களு டனும் மாற்றங்களுடனும் கூடியதான பல செயற்பாடுகளைத் தேசியத் தலைவர் அவர் கள் தனது தனித்துவமான ஆற்றலின் மூலம் கடந்த மூன்று தசாப்த காலமாக போரியல் மற்றும் அரசியல் வரலாற்றை தீர்மானிப்பவராக இருந்துள்ளார்.

இந்த வகையில் வன்னி மீது தாக்குதல் களைநடத்திக் கொண்டும் பெரும் தாக்கு தல்பகளுக்குத் தயாராகிக் கொண்டுமிருக் கும் சிறிலங்காவின் முப்படைகளையும் எதிர்கொள்ள தேசியத்தலைவர் வே. பிர பாகரன் அவர்கள் புதிய யுக்திகளுடனும், விடுதலைப்புலிகள் இயக்கத்தை தயார் நிலையில் வைத்திருப்பார் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம். தற்பொழுது கள முனை யில் அது வெளிக்காட்டப்பட்டுவரினும் அதன் ஒட்டுமொத்த பரிமாணத்தையும் புலிகளின் எதிர்கால நடவடிக்கை மூலமே புரிந்துகொள்ளமுடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராசதந்திரம் விழித்தியது



இப்போது அமெரிக்காவுக்கான சிறிலங்காத் தூதுவராகப் பதவி வகுக்கும் பேர்னாட் திலகரத்தின (BERNARD TILAKARATNA) முன்பு சிறிலங்காவின் தூதுவராக இந்தியாவில் இருந்தவர் ஏறத்தாள பதினைந்து வருடகாலம் இவர் கொழும்பின் தூதுவராக புதுடில்லியில் பதவி வகித்தார் இந்தியா சிறிலங்கா நெருக்க உறவை கட்டியெழுப்பியவர் இவர் தான் இரு நாட்டு உறவுகள் நெருக்கடி நிலையில் இருந்தபோது பேர்னாட் திலகரத்தினா புதுடில்லியில் இருந்த வாறு வெப்பத்தைத் தணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார் இது இன்றுவரை சிறிலங்கா சார்பான மிகப் பெறுமதியான இராசதந்திர முதலீடாக் கருதப்படுகிறது இந்திய விமானங்கள் அரிசி, பருப்பு, போன்றவற்றை யாழ் மண்ணில் வீசிய போதும் அதன் தொடர் நிகழ்ச்சியாக இந்தோ - சிறிலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போதும் ஈழத்தமிழர்கள் மீது போர் தொடுப்பதற்காக இந்தியப் படைகள் வந்த காலத்தின் போதும் பேர்னாட் திலகரத்தினா புதுடில்லியில் சிறிலங்கா நலனைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்.

*சிங்களத் தலைவர்கள் பற்றி பார்த்தசாரதி தனிப்பட்ட முறையில் தமிழில் கூறிய கருத்து 'களவாணிப்பயலுகள்' என்பதாகும்.*


பேர்னாட் திலகரத்தினா ஒரு வித்தியாசமான இராசதந்திரி அவர் வெளிவிவகார சேவையில் (FOREIGN SERVICE) இணைந்து படிப்படியாக உயர்ந்து உயர் பதவியை எட்டியவர் சிறிலங்கா ராசதந்திரிகள் தேர்தலில் தோல்வியடைந்த இராணுவ அபேட்சகர்கள் தமிழர்களை படுகொலை செய்வதில் சாதனைபடைத்த இராணுவ அதிகாரிகள் ஆகியோர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படுவது வழமை. ஜே.ஆர். ஜெயவர்த்தனா இராணுவத்தை அரசியல் மயப்படுத்தினார். இராசதந்திர சேவையை இராணுவ மயப்படுத்தினார். இராணுவ அதிகாரிகளை தூதுவலர்களாக நியமிக்கும் நடைமுறையை ஆரம்பித்தவர் ஜே.ஆர். தான். தமிழர் படுகொலையில் சாதனை படைத்த சேபால அட்டியாகல் புல் (BULL) அதாவது நாம்பன் வீரத்துக்காக டெனிஸ் பெரேரா, சிறில் றணதுங்க, ஜானகபெரேரா, றோகான் டலுவத்த ஆகிய இராணுவ அதிகாரிகள் தூதுவராகியுள்ளனர். சிறிலங்காவின் அதிகபட்ச இரத்த வெறிபிடித்த ஜெனரலான ஜானக பெரேரா அவுஸ்ரேலியாவுக்கான தூதுவராக நியமனம் பெற்றபோது ஈழத்தமிழர்கள் மாத்திரமல்ல அவுஸ்ரேலிய எதிர்கட்சியினரும் சர்வதேச மன்னிப்புச் சபையையும் கூட்டாக எதிர்த்தனர். ஆனால் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் தொலைபேசி மூலம் கேட்டதற்கு இணங்க அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சான்டர் டவுனர் எதிர்ப்புக்களை மீறி ஜாகன பெரேராவின் நியமனத்தை ஏற்றுக் கொண்டார்.

ஜோன் ஹொவாட் அரசும் அதில் பதவி வகித்த அலெக்சான்டர் டவுனரும் கடந்த தேர்தலில் பதவி இழந்தள்ளனர் கதிர்காமருக்கும் டவுனருக்கும் இடையில் நிலவிய உறவின் தன்மையை அறியப் பலர் ஆவலாக உள்ளனர் இப்போது ஓய்வாக இருக்கும் டவுனர் கட்டுரை வாயிலாகவோ பிறிதொரு வகையிலோ இந்த மர்மத்தைத் துலக்கினால் பேருதவியாக இருக்கும் டவுனர் மீது இராசதந்திர உறவுகளைக் கடந்து தனிப்பட்ட பிரத்தியேக உறவுகளைச் சுட்டிக் காட்டுகிறது கதிர்காமரின் துர்ப்போதனை காரணமாக அவுஸ்ரேலிய வாழ் தமிழர்கள் மீது டவுனர் ஆதாரமற்ற பல சந்தேகங்களைக் கொண்டிருந்தது தெரிந்ததே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேர்னாட் திலகத்தினா போன்ற இன்னுமொரு தொழில்சார் இராசதந்திரியாக டாக்டர் எல்.பி. மென்டிஸ் இடம்பெறுகிறார் இப்போது இவர் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச இராசதந்திர கல்வி நிலையம் கொழும்பின் இயக்குனர் நாயகமாகச் செயற்படுகிறார். இலங்கை வெளிநாட்டுச் சேவையில் இளவயதில் இணைந்த மென்டிஸ் நாற்பது அகவைக்கு முன்பாகவே இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்கான துணைத்தூதுவராகப் பதவி வகித்தார். தனது முப்பத்தைந்து வயதின்போது இவர் சிறிலங்காவின் அமெரிக்கா, பிரான்சு, யப்பான், சோவியத் ஒன்றியம், தூதரகங்களில் பணியாற்றினார். தனது ஐம்பதாவது வயதில் சிறிலங்காவின் கனடாவுக்கான தூதராக அவர் நியமனம் பெற்றார் சிறிலங்காவின் இராணுவ அதிகாரி, தூதுவர்களுக்கு இராணுவ மட்டத்தில் பெரிய மதிப்புக் கிடையாது ஆனால் சோவியத் ஒன்றியத்திற்கான சிறிலங்காவின் முதலாவது தூதுவர் ஆர்.எஸ்.எஸ். குணவர்த்தன போன்றோருக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது சிறந்த நன்கு பழுத்த இராசதந்திரிகள் சிங்களவர்களிடம் இருப்பதை மறுக்க முடியாது.

மேற்குச் சார்பான நிலைப்பாட்டை ஜெயவர்த்தன தனது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் இந்தியா தொடர்பான சில தவறுகளைச் செய்கிறார் அது அவருக்கு வினையாகவும் முடிந்திருக்கலாம் இந்தியா சுதந்திரம் பெற்றபின் முப்பது வருடங்களாக புதுடில்லியில் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி 1977 பெப்ரவரி மாதத்தில் தோல்வி அடைந்தது. இந்தத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வட மாநிலங்களில் படு தோல்வி கண்டதோடு ஆட்சி நடத்தும் உரிமையையும் இழந்தது. 1977 மார்ச் மாதம் 26 அம் திகதி மொரார்ஜி தேசாய் பிரதமரானார். பல கட்சிகளின் கூட்டான மொரார்ஜி ஆட்சி 1979 யூலை 15 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. மொரார்ஜி ராஜினாமா செய்தாலும் சரண் சிங் பிரதமர் பதவியை ஏற்றார். சரண் சிங் ஆட்சி 24 நாட்கள் நீடித்தன 1980 சனவரியில் மீண்டும் தேர்தல் நடந்தது. இதில் இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றதோடு இந்திரா காந்தி மீண்டும் பிரதமரானார் இந்த வரலாற்றுக்கும் சிறிலங்காவிற்கும் நெருக்கமான தொடர்புண்டு.

இரண்டு வருடங்கள் கூட நீடிக்காத மொரார்ஜி தேசாய் ஆட்சியின் போது சிறிலங்காவில் ஆட்சி செய்த ஜெயவர்த்தனாவின் அழைப்பை ஏற்று மொரார்ஜி கொழும்பு வந்தார். தனது நாவை அடக்கத் தெரியாத மொரார்ஜி இந்திராவையும் அதன் இளைய மகன் சஞ்செஜயையும் பசுவும் கன்றும் என்று பகிரங்கமாக ஏளனம் செய்தார் இதை ஜெயவர்த்தனாவும் நன்கு ரசித்தார் ஜெயவர்த்தனாவுக்கும் இந்திரா காந்திக்கும் இடையிலான பகை இப்படித்தான் ஆரம்பித்தது. ஜே.ஆருக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று இந்திரா கறுவிக் கொண்டிருந்தார் பிரதமர் பதவி வகிக்கும் காலத்தில் தொட்டிலை ஆட்டிக் கொண்டு பிள்ளையை கிள்ளும் சென்னையின் ஆனந்தவிகடன் சஞ்சிகைக்கு மொரார்ஜி ஒரு நேர்காணல் வழங்கினார். இதில் ஈழத் தமிழர் உரிமைகள் பற்றிக் கேட்கப்பட்ட போது அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. சிறிலங்காவின் சட்டங்களுக்கு அமைவாக நடக்க வேண்டியது தானே என்று மொரார்ஜி பதில் கூறினார்.

1980 சனவரி தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மகத்தான வெற்றி பெற்றது. 525 தொகுதிகளில் 351 இடங்களை இந்திரா காந்தி கைப்பற்றினார். அவருடைய இளைய மகன் சஞ்சே காந்தியும் வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் வந்தார் மீண்டும் பிரதமரான இந்திரா காந்தியுடன் நல்லுறவைப் பேணவேண்டிய அவசியத்தை ஜே.ஆர். உணர்ந்தார். புதுடில்லியில் இருந்த பெனார்ட் திலகரத்தினாவிடம் அவர் இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டார் நானே புதுடில்லிக்கு வந்து சந்திப்பை மேற்கொள்ளவா என்றும் ஜே.ஆர் கேட்டார். வேண்டாம் புதுடில்லிக்கு லலித் அத்துலத் முதலியை அனுப்புங்கள் என்று பெனார்ட் ஆலோசனை கூறினார் அதற்கமைவாக அத்துலத்முதலி புதுடில்லி வந்து சேர்ந்தார்.

இந்திராவுடனான சந்திப்பைத் தூதுவர் பேர்னாட் ஒழுங்கு செய்தார். அத்துலத் முதலியும் பேனாடும் இந்திராகாந்தியைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர். இந்திரா இங்கிலாந்தின் ஒக்ஸ்பேட் பல்கலைக் கழகத்தில் படித்தவர். அத்துலத் முதலியும் காலம் பிந்தினாலும் ஒக்ஸ்போட்டில் தான் படித்தவர். இவருக்கும் இடையில் சிறந்த நட்புறவு ஏற்பட்டது. சிங்களவர் தரப்பு நியாயப்பாடுகளை இந்திரா ஏற்றுக் கொண்டது போல் தோன்றியது. அப்போது மாலை நேரத் தேநீர் பரிமாற்றப்பட்டது. தேநீர் விருந்தில் இந்திராவின் ஆலோசகர் ஜி. பார்த்தசாரதி கலந்து கொள்ள வந்து சேர்ந்தார். தேநீர் பகிரும் போது இந்திராவின் காதிற்குள் ஹிந்தி மொழியில் பார்த்தசாரதி ஏதோ சொன்னார். இந்திராவின் முகம் மாறிவிட்டது அதன் பின்பு பேச்சுக்கள் முறிந்து போய்விட்டன. இப்ப என்ன நடந்தது என்று சிங்கள மொழியில் பேர்னாடைப் பார்த்து அத்துலத்முதலி கேட்டார். தெரியாதா தெற்கின் குரல் பேசிவிட்டது என்று பேர்னாட் பதில் சொன்னார்.

தெற்கு என்று பேர்னாட் திலகரத்தின குறிப்பிட்டதில் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. முதலாவதாக பார்த்தசாரதி தென் மாநிலத்தைச் சேர்ந்தவர் தென் மாநிலங்கள் ஈழத்தமிழர் சார்பான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததாக அப்போது எண்ணப்பட்டது. ஜி. பார்த்தசாரதி (1912-1995) ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பட்டதாரி, சிறந்த கிரிக்கெட் விளையாட்டு வீரன், ஊடகவியலாளர், இந்தோனேசியா, சீனா, பாகிஸ்தான், ஆகிய நாடுகளுக்கான முன்னாள் தூதுவர் என்ற பல சிறப்புக்களை உடையவர் நேருவும், இந்திராவும் இவரைத் தமது குடும்பத்தில் ஒருவராக மதித்தனர் முதற் கூறிய தேநீர் விருந்துச் சம்பவத்துக்குப்பின் அவரைச் செயலிழக்கச் செய்ய வேண்டும் என்பதில் சிங்களத் தலைவர்கள் குறியாக இருந்தனர். இதில் வெற்றியும் அடைந்தனர் சிங்களத் தலைவர்கள் பற்றி பார்த்தசாரதி தனிப்பட்ட முறையில் தமிழில் கூறிய கருத்து 'களவாணிப்பயலுகள்' என்பதாகும்.

புதுடில்லி வெளிநாட்டு அமைச்சகம் அமைந்திருக்கும் தென்மாடிக்கட்டத் தொகுதி காரணமாக வெளிநாட்டு அமைச்சகத்தை சவுத் புளொக் (sOUTH BOLCK) என்பார். இந்த அர்த்தத்திலும் தெற்கு என்ற சொல்லை பேனாட் திலகரத்தினா பயன்படுத்தியிருக்கலாம். அரசுகள் வரலாம், மறையலாம் ஆனால் வெளிநாட்டு அமைச்சக அதிகாரிகள் தொடர்ச்சியாக இந்திய நலனைப் பாதுகாப்பார்கள் என்ற மரபு உண்டு. எந்தவொரு நாட்டு வெளிநாட்டு அமைச்சக நிர்வாகத்துடன் ஒப்பிட்டாலும் இந்திய வெளிவிவகார அமைச்சக நிர்வாகம் முன்னணியில்தான் நிற்கிறது. நாட்டின் தூர நோக்குத் தேசிய நலனைப் பாதுகாக்கும் பொறுப்பு இந்த நிர்வாகத்திடம் உள்ளது. கௌடில்ஸரின் கோட்பாடுகளுக்கு அமைவாக அது இயங்குகிறது. தேசிய நலன் நோக்கில் எதனையும் செய்யலாம் யாருடையஅழிவையும் தோற்றுவிக்கலாம் அல்லது அழிவிற்குத் துணைபோகலாம் என்பது இக்கோட்பாட்டின் சாராம்சம் பிரிட்டிஸ் ஆட்சிக் காலம் தொட்டு இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைச்சகத்தில் மலையாளிகள் குறிப்பாக மேனன் குடும்பத்தினர் ஆதிக்கம் செலுத்து கிறார்கள் இப்போது வெளிவிவகாரச் செய லாக இருப்பவர் சிவசங்கர்மேனன் முன் னாள் சிறிலங்காவுக்கான தூதுவர் நிருபமா சென் பிறப்பால் மேனன். திருமண உற வால் சென் இப்போது அவர் இந்தியாவின் சீனாவுக்கான தூதுவராக பதவி வகிக்கிறார்.

தேநீர் விருந்துடன் முறிந்து போன பேச்சுக்களை புதியதொரு திசையில் முன் னெடுக்குமாறு பேனாட் திலகரத்தினாவை ஜே.ஆர். கேட்டுக் கொண்டார்.

அப்போது இந்திரா ஆட்சியில் இருந் தார். அவருடைய வாரிசாக இளையமகன் சஞ்சே பட்டம் சூட்டப்பட்டிருந்தார். ஆனால் இவரையும் விலத்தியவாறு இந்திராவின் முதல் மகன் ராஜீவ் காந்தியுடன் தொடர்பு களை ஏற்படுத்துமாறு ஜே.ஆர் தனது தூதுவரைக் கேட்டுக் கொண்டார். ராஜீவ் அப்போது அரசியல் பற்றி எண்ணாத காலம். மிகச் சிறந்த விமான ஓட்டியாக போயிங் இராட்சத விமானங்களை அவர் ஓட்டிக் கொண்டிருந்தார். சிறிபெரும்புதா ருக்கு காலனைச் சந்திக்க வரும்போது கூட புதுடில்லியில் இருந்து சென்னை வரை தானே விமானத்தை ஓட்டி வந்தார். என்றோ ஒரு நாள் அட்சி அதிகாரம் ராஜீவ் காந்தி யின் கைக்கு மாறும் என்று ஜே.ஆர் கணக் குப் போட்டார். அது மிக விரைவில் நடக்கும் என்று அவர் சிறிதளவேனும் எண்ண வில்லை.

பைலட் ராஜீவ் புதுடில்லியில் இருந்த போது அவரைத் தனது வீட்டிற்கு உணவ ருந்த வரும்படி பேனாட் அழைத்தார். இதற்கு சாதகமான பதில் கிடைத்தது. இந் தியாவின் நண்பன் என்று தன்னை விளம் பரப்படுத்திய காமினி திசநாயக்க அப் போது புதுடில்லியில் உலாவிக் கொண்டி ருந்தார். அவரையும் வரும்படி பேனாட் அழைத்தார். விருந்து மிகச்சிறப்பாக அமைந்தது தனக்குத் தெரிந்த தெரியாத பல விடயங்களைப பற்றி ராஜீவ் பேசிப் பேசி உணவருந்தினார். பேனாட்டும், காமி னியும் அவருடைய பேச்சில் தலையிடாமல் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தனர். இந்த விருந்து நடந்த சில வாரங்களில் 1980 யூன் 20 ஆம் நாள் சஞ்சே செலுத்திய பயிற்சி விமானம் கீழே விழுந்து நொருங்கி யதில் அவர் உயிரிழந்தார். இந்திராகாந்தி சோகத்தில் ஆழ்ந்தாலும் வாரிசுகளை விட் டுக் கொடுக்காமல் அமேதிக் தொகுதியில் மூத்த மகனை நிறுத்தினார். 1981 ஒகஸ்ட் 17 ஆம் நாள் தேர்தலில் வெற்றிபெற்ற ராஜீவ் காந்தி பாராளுமன்ற உறுப்பினராக பதவி யேற்றார்.



இந்தோ- [illegible] ஒப்பந்தம்

நிகழ்ச்சிகள் படு வேகமாக நகர்ந்தன. சீக்கியரின் பொற் கோயிலுக்குள் பதுங்கியிருந்த சீக்கியத் தீவிரவாதிகளை தாக்கி யழிப்பதற்காக இந்திரா இராணுவ நடவடிக்கை எடுத்தார். 1984 யூன் 06 ஆம் நாள் அவர் இரா ணுவத்தை பொற் கோயிலுக்குள் அனுப்பி னார். தீவிரவாதிகளுக் குத் தலைமை தாங்கிய பிந்திரன்வாலேயும் 250 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். 48 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். 1984 ஒக்டோபர் 31 ஆம் திகதிகாலை பிரத மர் இல்லத்திலிருந்து அலுவலகத்திற்கு நடந்த செல்லும் போது இந்திரா காந்தியின் சீக்கிய மெய்ப்பாதுகாவர்கள் இருவர் அவ ரைச் சுட்டுக் கொன்றனர்.

ராஜீவ் காந்தியும் வர்த்தக அமைச்ச ராக இருந்த இப்போதைய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் அப்போது கல்கத்தாவில் இருந்தனர். இருவரும் புது டில்லிக்கு விரைந்தனர் மூத்த உறுப்பின ரான முகர்ஜி தனக்குத்தான் பதவி என்று எதிர்பார்த்து அதற்கான ஒழுங்குகளைச் செய்தார். ஆனால் இந்திராவுக்கு நெருக்க மானவர்கள் அவரைப் புறந்தள்ளிவிட்டு ராஜீவ் காந்திக்கு பட்டம் சூட்டினார். இந் திரா காந்தி இறந்த அதேநாள் மாலை 5.30 மணிக்கு ராஜீவ் காந்தியின் பதவி ஏற்பு வைபவம் நடந்தது. புதுடில்லியில் அதே நாளில் சிக்கியர்களுக்கு எதிரான மிகப் பெரிய இனக்கலவரம் மூண்டது. 5000 வரை யிலான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். 'பெரிய மரம் சரியும் போது சிறிய மரங்கள் அழிகின்றன' என்று புதிய பிரதமர் பகிரங் கமாகத் தத்துவம் பேசினார்.

ஜே.ஆர். காலத்தில் கொழும்பின் வேலையை புதுடில்லி செய்ததாக சொல் வார்கள். இப்போதும் அது தொடர்வதை பார்க்கலாம். விருந்தோம்பலிலும் மது, மாது வழங்களிலும் சிங்களவர்கள் நிகரற்று விளங்குகிறர்கள்.

இராசதந்திரப் பாரம்பரியத்தின்படி புதிய பிரதமருக்கு விருந்தளிக்கும் கௌரவ முன்னுரிமைக்காக புதுடில்லியில் பலத்த போட்டி நடந்த இந்தப் போட்டியில் சிறிலங் காத் தூதரகம் வெற்றிபெற்றது. பேர்னாட் திலகரத்தினாவின் அழைப்பை ஏற்ற ராஜீவ் காந்தி குடும்பத்தோடு வந்து உணவருந் தினார். 1991 மே 21 சிறுபெரும் புதாரில் கொல்லப்படும் வரை பேர்னாட் திலகரத் தினாவுடன் நட்புறவை மேற்கொண்டதோடு சிறிலங்கா தொடர்பான ஒவ்வொரு அரசி யல் மற்றும் இராணுவ நகர்வுகளையும் உடனுக்குடன் அவருக்குத் தெரிவித்தார். ஜே.ஆர். கேட்டுக் கொண்டதற்கு இணங்க பார்த்தசாரதியை ராஜீவ் வெளியேற்றினார். பின்பு ஏ.பி.வெங்கடேஸ்வரனையும் தரக் குறைவாக பேசி பதவி விலகச்செய்தார்.

ஜே.ஆர். காலத்தில் கொழும்பின் வேலையை புதுடில்லி செய்ததாக சொல் வார்கள். இப்போதும் அது தொடர்வதை பார்க்கலாம். விருந்தோம்பலிலும் மது, மாது வழங்களிலும் சிங்களவர்கள் நிகரற்று விளங்குகிறர்கள். இயல்பான திறமையோடு இவையும் இணைந்து வெற்றிக்கு வழி விடுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கெல்மன்

# செயலிழந்து செல்லும்

உலகில் எந்தவொரு நாட்டிற்கும் பொருளாதாரம் முக்கியமானதொன்று. விஞ்ஞானத்தில் வளர்வதென்றாலும் சரி, மக்களின் ஏழ்மையைப் போக்குவதென்றாலும் சரி, யுத்தம் செய்வதென்றாலும் சரி, பொருளாதாரம் முக்கியமானது.

இதனால்தான் உலக நாடுகளின் இராஜதந்திர நடவடிக்கைகள்கூட பொருளாதாரம் வர்த்தகத்தை நோக்கியதாக அமைகிறது. புதிய வர்த்தக ஒப்பந்தங்களுக்காக நீண்ட, கடுமையான இராஜதந்திர நடவடிக்கைகளில் கூட ஈடுபடுகின்றன. பொருளாதாரத்திற்காக யுத்தங்கள் கூட நடந்த வரலாறு நவீன உலகில் இருக்கின்றது. உலகில் எல்லா நாடுகளும் தமக்கிடையே ஒன்றுடன் ஒன்று மேற்கொண்டுவரும் இராஜதந்திர நடவடிக்கைகளை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் அதில் இறுதி இலக்கு பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்திருக்கின்றன. இறுதியில் ஒரு வர்த்தக உடன்படிக்கையைச் செய்வார்கள்.

இந்திய - சிறிலங்கா அரசாங்கத்துக்கிடையே நீண்டகாலமாக இருந்துவரும் உறவு நிலையையும் அடுத்த இரு நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர நடவடிக்கைகளையும் ஆராய்ந்தால் இலங்கை இனப்பிரச்சினை அமைதி வழியில் தீர்க்கப்படவேண்டும். அத்தீர்வு ஐக்கிய இலங்கைக்குள் அமைய வேண்டும் என்று கூறும் இந்தியா இறுதியில் ஆயுத விற்பனையும் வட்டிக்கு காசு கொடுப்பதையுமே முடிவாகக் கொண்டிருக்கிறது.



அமெரிக்கா - சீனாவிற்கிடையிலான இராஜதந்திர நடவடிக்கைகளைப் பார்த்தால் சீனாவைத் திறந்த பொருளாதாரத்திற்குள் இழுத்து விட்டு அமெரிக்க பல்தேசிய கம்பனிகளைச் சீனாவிற்குள் காலூன்றச் செய்வதே அமெரிக்காவின் இலக்காக இருப்பதைக் காணலாம். இதற்காக சீனாவை சம்மதிக்கச் செய்வதற்குச் சீனா மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அதைச் சர்வதேச கண்டனங்களாக வெளியிட்டு சீனா மீது அழுத்தங்களை மேற்கொள்ளவும் அமெரிக்கா முற்படுகின்றது.

சிறிலங்கா - மேற்குலகுக்கிடையிலான இராஜதந்திரத்தைப் பார்த்தால் சிறிலங்கா மீது பாரிய கடுமையான மனித உரிமை மீறல்கள், குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவரும் மேற்குலகும் சிறிலங்கா அரசாங்கம் சில அரசாங்க நிறுவனங்களைத் தனியார் மயமாக்க முன்வந்ததும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களின் சுருதியைக் குறைத்து இறுதியில் கைவிட்டு விடுகின்றன. அத்தோடு கடனுதவிளையும் ஆயுத விற்பனையையும் தாராளமாகச் செய்கின்றன. மேற்குலக நாடுகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையே கடந்த பல வருடங்களாக நடைபெற்றுவந்த இராஜதந்திர நடவடிக்கைகளை உற்று நோக்கி அதன் விளைவுகளை ஆராய்ந்தால் இதைப் புரிந்து கொள்ள முடியும். இதன் மூலம் இரு நாடுகளும் பொருளாதார ரீதியாக இலாபமடைகின்றனர். சிறிலங்காவைப் பொறுத்து யுத்தத்தை தொடர்ந்து நடத்த நிதி கிடைக்கிறது.

மேற்குலகைப் பொறுத்துத் தம்மிடம் உபரியாகவுள்ள மூலதனத்தை கடனாக கொடுத்து வட்டி வருமானத்தை உழைத்துக்கொள்ள சந்தையைத் தேடிக்கொள்கிறது. அத்தோடு தமது ஆயுத விற்பனையைச் செய்வதற்கும் சந்தையைத் தேடியுள்ளன.

இவ்வாறான உலக நாடுகள் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டதால் அதை ஈட்டிக்கொள்ள வர்த்தகத்தை ஒரு மார்க்கமாகப் பயன்படுத்துகின்றன. அது பொருள் உற்பத்தி கொள்வனவு, விற்பனை என்றோ, சேவை உற்பத்தி, கொள்வனவு, விற்பனை என்றோ பல்வேறு வழிகளில் நடைபெறுகின்றன. தத்தமது வர்த்தகத்தினை மேற்கொள்ள உள்ள தடைகளை அகற்றும் தொழில்பாடாகவே இராஜதந்திர நடவடிக்கைகளைப் பயன்படுத்துகின்றன.

மூலதனத்தை உபரியாகவும் தொழில் துறையில் வளர்ச்சி பெற்றதுமான மேற்குலக நாடுகள் இதற்காக ஒரு எண்ணக்கருவை கூட உருவாக்கியுள்ளன. அதுதான் 'உலக மயமாக்கல்' இச்சிந்தனை அல்லது எண்ணக்கருவை எல்லோரையும் ஏற்றுக் கொள்ளச் செய்வதனூடாகத் தம்மிடமுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறிலங்காவின் பொருளாதாரம்



> மகிந்த ராஜபக்ச ஆட்சிப்பொறுப்பேற்று இரண்டு வருடங்களில் எல்லாப் பாவனைப் பொருட்களும் 100 வீதம் முதல் 200 வீதம் வரை விலை உயர்ந்துள்ளன. கடந்த ஆண்டு பணவீக்கம் 26.2 வீதமாக உயர்வடைந்து உள்ளது. பொதுவிலை மட்டம் கட்டுப்பாடின்றி உயர்வடைந்து பணவீக்கம் கட்டுப்படுத்த முடியாதளவு அதிகரித்துக்கொண்டு செல்லுமாகில் பணத்துக்கான கொள்வனவு வலுக்குறைந்து - குறைவடைந்து சென்று கொள்வனவு சக்தியைக் பணம் இழந்து விடும்.

மேலதிக உற்பத்திப் பொருட்களையோ சேவைகளையோ பற்றாக்குறையாகவுள்ள நாடுகளுக்கு விற்பனை செய்வதற்குள்ள தடைகளை நீக்கிவிட முடியும். அதனூடாக நாடுகளுடைய எல்லைகள் வர்த்தகத்திற்கு எல்லைபோடாமல் இருப்பதற்கும் இந்த எண்ணக்கரு மூலம் மேற்குலகு முயற்சிக்கிறது. இதில் அது ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது. அதாவது உலக வர்த்தகத்திற்கான எல்லைகளை - தடைகளை அகற்றுவதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளது. உலகில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில நாடுகளைத் தவிர ஏனைய நாடுகள் அனைத்தும் உலக மயமாக்கலின் முக்கிய அடிப்படையிலான விடயமாகத் திறந்த பொருளாதாரக்கொள்கையே கடைப்பிடிக்கின்றன. இது உலக மயமாக்கலை நடைமுறைப்படுத்துவதில் கண்ட வெற்றியாகவே கொள்ளவேண்டும். இந்த வெற்றி உலக மயமாக்கலை நடைமுறைப்படுத்துவதிலும் ஏற்றுக்கொள்ளச் செய்வதிலும் ஏற்பட்ட வெற்றியாகும். அதன் எண்ணக்கருவிற்குள் கிடைத்த வெற்றியாகக் கருத முடியுமா என்பது கேள்விக்குரியதே. உலக மயமாக்கல் எண்ணக்கரு வெற்றி அடைந்துள்ளதென இப்போது கூற முடியாது. ஏனென்றால் மூன்றாம் உலக நாடுகளில் உலக மயமாக்கல் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களும் இருக்கின்றன. உலக மயமாக்கல் வளர்ச்சியடைந்த நாடுகள் மேலும் செழிப்புறவும் குறைவிருத்தி நாடுகள் மேலும் குன்றிப்போகவுமே வழிவகுத்துள்ளதாக மூன்றாம் உலக நாடுகள் பல குறைபட்டும் கொள்கின்றதைக் காணலாம்.

அரசர்கள் இருந்த காலத்திலும் அந்நிய தேசங்கள் மீதும் அயல் பிரதேசங்கள் மீதும் படையெடுத்து அங்கேயிருந்த செல்வங்களைத் தமதாக்கிக் கொண்டனர்.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ஆக்கிரமிப்புக்கள், படையெடுப்புக்கள், நாடுகளைக் கைப்பற்றுதல் எல்லாம் அந்தந்த நாடுகளிலிருந்த சொத்துக்கள், செல்வங்கள் மற்றும் வளங்களைச் சுரண்டுவதற்காகவே நடந்தது. ஆசிய நாடுகள் பிரித்தானியரின் காலனித்துவத்தின் கீழ் இருந்த போது வியாபாரம் என்ற பெயரில் இந்தியாவிலிருந்து பெரும் செல்வங்களையும் தமது நாட்டிற்குக் கொண்டு சென்றனர். இலங்கையிலிருந்தும் வாசனைத்திரவியங்களைக் கொண்டு சென்றனர் இவை பொருளியல் வரலாறு.

ஒரு நாட்டிற்குப் பொருளாதாரம் எவ்வளவு முக்கியம் என்பதை பார்த்தோம். அந்தளவு முக்கியமான பொருளாதாரத்தை தக்க முறையில் பேணி அதை நொந்து போக விடாமல் மிக நேர்த்தியான சாத்தியப்பாடான அபிவிருத்தித்திட்டங்களை நிபுணர்களின் உதவியுடன் மேற்கொண்டு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து குடிமக்களை ஏழ்மை நிலையிலிருந்து காப்பாற்றி செழிப்பானவர்களாக மாற்ற வேண்டியது ஆட்சியாளர்களின் கடமையாகும். ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளையும் அதனால் பொருளாதாரத்துக்கு ஏற்படும் தாக்கங்களையும் ஆராய்வோம்.


அபிவிருத்தித் திட்டங்கள் எவையும் மேற்கொள்ளப்படாத நிலையில் வரி வருமானம் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டும் பற்றாக்குறைக்கு நாணயத்தாளை அச்சிட்டும் வெளிநாடுகள், சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இருந்து கடன்களைப் பெற்றும் அரசாங்க நிர்வாகத்தை நடத்தி வருகின்றது. இதனால் நாட்டு மக்கள் இறக்குமதியில் தங்கியிருக்கின்றனர். இது பணவீக்கத்தை வேகமாக அதிகரிக்கச் செய்கிறது. மகிந்த ராஜபக்ச ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு வருடங்களில் எல்லாப் பாவனைப் பொருட்களும் 100 வீதம் முதல் 200 வீதம் வரை விலை உயர்ந்துள்ளன. கடந்த ஆண்டு பணவீக்கம் 26.2 வீதமாக உயர்வடைந்து உள்ளது. பொது விலை மட்டம் கட்டுப்பாடின்றி உயர்வடைந்து பணவீக்கம் கட்டுப்படுத்த முடியாதளவு அதிகரித்துக்கொண்டு செல்லுமாகில் பணத்துக்கான கொள்வனவு வலுக் குறைந்து - குறைவடைந்து சென்று கொள்வனவு சக்தியைக் பணம் இழந்து விடும்.

இந்த நிலையில் மக்கள் பணத்தைத் தேட முற்பட மாட்டார்கள். சேவையை உற்பத்தி செய்து விற்பனை செய்வோர் தமது சேவைக்கான ஊதியமாகப் பணத்தைப் பெற மறுத்துப் பொருளாக தருமாறு கோருவர். அந்த நிலமையில் மக்களிடத்தில் கைநிறையப் பணம் இருக்கும் வர்த்தக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நிலையங்களில், சந்தையில் பொருட்கள் இருக்காது. குடிமக்கள் உற்பத்தி செய்யும் குறைந்தளவு பொருட்களையும் பணத்திற்கு விற்பனை செய்ய முன்வர மாட்டார்கள்.

பண்டமாற்றம் செய்து தமக்குத் தேவையான ஏனைய பொருட்களை வாங்கிக் கொள்ளவே முற்படுவர். இந்நிலையில் அரசாங்கமும் அதன் நிர்வாகமும் முற்றாகச் செயலிழந்துவிடும். இதன் பின்பாக நாட்டை மீட்டெடுக்க புதிய முதலீடுகள், புதிய பொருளாதார அடிப்படைகளுடனான திட்டங்கள் தேவைப்படும். இது வேறொரு நாட்டினால் அல்லது சர்வதேச நிதி நிறுவனங்களில் தான் மேற்கொள்ளமுடியும். பொருளாதாரம் சார்ந்த அனைத்து ஏற்பாடுகளையும் புதிதாகவே ஆரம்பிக்கவேண்டும். உலகில் அண்மைக் காலத்தில் இந்தோனேசியா, ஆர்ஜன்டீனா ஆகிய நாடுகளில் இந்நிலை ஏற்பட்டிருந்தன. இந்நாடுகளை ஐ. நா சபையும் சர்வதேச நிதி நிறுவனங்களுமே தூக்கி நிறுத்தி இயக்கச் செய்துள்ளன. ஆட்சியாளர்களாலேயே நாட்டிற்கு இந்நிலை ஏற்படும். குடிமக்களால் ஏற்படமாட்டாது.

சிறிலங்காவில் கடந்த ஆண்டு பணவீக்கம் 26.2 சதவீதமாக இருந்துள்ளது. இது ஆபத்தான நிலமையே இந்த ஆபத்தை சிங்கள ஆட்சியாளர் உணர்ந்துள்ளனர். உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்கள் குறித்த எச்சரிக்கைகளை வெளியிட்டே வருகின்றனர். ஆனாலும் சிங்கள ஆட்சியாளர்களிடம் யுத்தம் செய்யவேண்டும் என்ற மனோபாபம் மேலோங்கி இருக்கிறது. இதனாலேயே சிங்கள ஆட்சியாளர்கள் இந்த நிலைமையிலும் யுத்தம் செய்கின்றார். இந்நிலை மேலும் வளர்ச்சியடைந்து பணவீக்கம் மேலும் அதிகரித்துச் சென்று கொண்டிருக்குமாகில் தற்போது ஓடும் பணவீக்க நிலையிலுள்ள பணவீக்கம் பாயும் பணவீக்க நிலைக்கு மாறிப் பறக்கும் பணவீக்க நிலைக்குச் செல்லும் இந்த நிலையில் அரசாங்கத்தால் மக்களுக்கு உணவு கொடுக்கவோ அவர்களைக் காப்பாற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு யுத்தமும் செய்யமுடியாத வக்கற்ற நிலை ஏற்படும்.

இந்நிலையில் தமிழீழத்தில் அதாவது வன்னியில் இராணுவத்திடம் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்கள் சிங்களப் பொருளாதாரம் முறிந்து போகும் போது பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமாகில் சரியான பொருளியல் முன்னுணர்வுடன் செயற்பட வேண்டும் அதாவது எமது மக்கள் பொருள் உற்பத்தியில் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும். தமக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை அதில் குறிப்பாக தானிய வகைகளைத் தொடர்ச்சியாக உற்பத்தி செய்ய வேண்டும். இதன் மூலம் சிங்களப் பிரதேசத்திலிருந்து உணவுப்பொருள் இறக்குமதியை குறைத்து உணவுக்காக சிங்கள ஆட்சியாளரில் தங்கி வாழும் நிலையிலிருந்து விடுபட முடியும். அப்போது சிங்களப் பொருளாதாரம் முறிவடைந்து மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டு யுத்தம் செய்ய வக்கற்ற நிலையிலிருந்து சர்வதேசத்திடம் அவசரகால கையேந்தலைச் செய்யும் போது எமது பிரதேச மக்கள் பொருளாதார நெருக்கடியின்றி, பொருளாதார சௌகரியமான - மேம்பாடுடையவர்களாக இருப்பர். இந்த நேரத்தில் சிங்கள ஆட்சியாளர் உணவுப்பொருட்களை வன்னியிலிருந்து தடைமுகாங்களூடாகத் தங்களது பிரதேசத்திற்குள் உள்வாங்கக் கடும் பிரயத்தனம் மேற்கொள்வார். இந்த நிலையில் நாம் சிங்கள ஆட்சியாளருடன் இன்னொரு நாடு என்ற வகையில் பொருளாதார பேரம் பேசும் சக்தியைப் பெற்று விடுவோம். ஆகவே இவை எல்லாவற்றையும் தமது மக்களின் முயற்சியே தீர்மானிக்கவல்லன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முடிவடையும் சோகப்பாடலொன்றின் இறுதி அடி

அலறி

நெடுநாட்களுக்கு பின்னொரு இராக்காலம்
பேரலைகள் விழுங்கிய ஊர்க்கரையை
தனியே காணச் சென்றிருந்தேன்

முடிவற்ற துயரின் ஓவியங்களாக
எல்லாம் காட்சி தந்தன


உடைந்திருக்கும் வீடுகளில்
முற்றங்களில்
கரிய இருள் எழுந்து படர்ந்தது
குப்பி விளக்கொன்றை ஏற்றிடக்கூட
சுவர்களில்லை
ஆட்களில்லை

முறிந்திருக்கும் தென்னைகளின்
பனைகளின்
தெருக்களின் மேலாக
ஓசையற்ற காற்று தனித்தலைந்தது

இறக்கை தொலைத்த கடல்பட்சிகள்
திசைகெட்டு
கடலை ஒடுங்கிக் கடந்தன

முடிவடையும் சோகப் பாடலொன்றின்
இறுதி அடியாக
எல்லாமே இறந்து காட்சியளித்தன

மங்கிக் குருடாகும் நிலவின் மஞ்சள் இருளில்
விபரிக்க முடியா வேதனை சுமந்து
வீடு திரும்பிக் கொண்டிருந்தேன்
என்னையும் இழந்து.



www.tamilarangam.net



# யுத்தத்தை நடத்த மகிந்தவுக்கு தேவை

# ஒரு தீர்வுத்திட்டம்

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொண்டு தமிழ் மக்கள் மீதான போரைத் தீவிரப்படுத்தி தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்து விடுவதற்கு சிறிலங்கா அரசு காலக்கெடுவும் விதித்து விட்டது.

இந்தக் காலக் கெடுகள் ஆறுமாதங்கள் முதல் ஒரு வருடம் வரையானதாக இருக்கும் எனக் கொள்ளலாம். அதாவது எதிர் வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதியுடன் ஓய்வு பெற இருக்கும் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகா தான் அடுத்த தளபதிக்கு போரை விட்டுச் செல்லப் போவதில்லை எனச் சூளுரைத்திருக்கிறார்.

அவர் இப்போது மூன்றாவது பதவி நீடிப்புக் காலத்தில் இந்தப் பதவியை வகித்து வருகிறார். என்பதுடன் இந்தப் பதவி நீடிப்புக் காலத்திற்குள் அவரது செயற்பாடு அடுத்த பதவி நீடிப்பிற்கோ அல்லது உயர் பதவிக்கோ வழியேற்படுத்தும் என்பதும் அவருக்கு நன்கு தெரியும்.

எவ்வாறாயினும் அவரது இந்தப் பதவிக்காலம் இன்னமும் 11 மாதங்கள் மட்டும் இருக்கையில் இவரது காலக்கெடுவும் கூட ஒரு வருடத்திற்கும் குறைந்த காலப் பகுதியையே சுட்டிக் காட்டுகிறது. இவர் மட்டுமல்ல மகிந்த ராஜபக்சவின் சகோதரரான கோத்தபாய ராஜபக்சவும் அவ்வாறே நம்புகிறார்.

இவ்வாறான காலக் கெடுவையே அவரும் வைத்திருக்கிறார். அப்படியான ஒரு நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர் வரும் 23 ஆம் திகதி தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கப் போவதாக இப்போது கூறப்படுகிறது. இன்னமும் ஒரு வாரம் கூட இல்லாத நிலையில் சர்வகட்சிக் குழுவின் பெயரில் இந்தத் தீர்வுத் திட்டம் முன்வைக்கப் போவதாக இப்போது சிறிலங்கா ஊடகங்கள் கூறுகின்றன.

சர்வகட்சிக் குழு என்பது பெயரளவிலானதாக இருக்கையில் மகிந்த அந்தக் குழுவினூடாக ஒரு தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கப் போவதாகவும் செய்திகள் இப்போது வெளி வருகின்றன.

அதாவது 58 ஆவது தடவையாக சர்வகட்சிக் குழு கடந்த வாரம் கூடிய போது அல்லது அக்குழுவைக் கூட்டிய மகிந்த ராஜபக்ச சிறிலங்கா அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டதின் கீழ் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு அக்குழுவை வலியுறுத்தியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது இந்திய - சிறிலங்கா அரசுகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் கீழான மாகாணசபைகள் அடிப்படையில் தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு மகிந்த ராஜபக்ச வலியுறுத்தி உள்ளதாகக் கூறப்படுகிறது.



முதலாவதாக சர்வகட்சிக் குழு என்ற பெயரில் இப்பொழுது இயங்கும் அரசஆதரவுக்குழு கூட இவ்விடயத்தில் ஒருங்கிணைந்த கருத்தைக் கொண்டதாக இல்லை. இக்குழுவில் செயற்படும் ஜதிகெல உறுமய இதனை ஏற்றுக் கொள்ளாது. அத்துடன் இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி போன்றவை கடந்த கூட்டங்களில் ஆராயப்பட்ட விடயங்களுக்குப் புறம்பாக திடீரென இவ்வாறான ஒர தீர்வுத் திட்டத்தை சர்வகட்சிக் குழு வெளியிடுவதை விரும்புவதாக இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை ஒரு புறமிருக்க மகிந்தவுக்கு ஒரு தீர்வுத்திட்டம் - ஒரு தீர்வல்ல, திட்டம் மட்டுமே இப்போது அவசரமாகத் தேவைப் படுகிறது. சிலர் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்கை சிறிலங்கா சுதந்திர தினத் திற்கு வருகை தரச் செய்வதற்கு மகிந்த விற்கு ஒரு தீர்வுத் திட்டம் தேவையெனக் கருதினார். ஆனால் அது மட்டும் காரணமாக இருக்கு முடியாது.

இந்தியா உட்பட ஏனைய உலக நாடுகள் ஐ.நா. போன்ற அமைப்புக்கள் மனித உரிமை அமைப்புக்கள் போன்ற வற்றுக்குப் போக்குக் காட்ட ஒரு தீர்வுத் திட்டம் மகிந்த விற்கு அவசியமாக இருக்கின்றது.

போரைத் தீவிரப்படுத்த அதிலும் ஓராண்டு காலக்கெடுவிற்குள் முடிக்கும் அளவிற்குத் தீவிரப்படுத்த அதற்கு ஒரு தீர்வுத்திட்டம் அவசரமாகத் தேவைப்படுகிறது.

ஏனெனில் போரை நடத்துவதை ஆதரிக்கும் அல்லது ஆட்சேபிக்காத நாடுகள் கூட தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண ஓர் அரசியல் ரீதியான தீர்வுத்திட்டம். சிங்கள ஆட்சியாளர்களால் முன்வைக்கப் பட வேண்டும். என வலியுறுத்துகின்ற நிலையில் இதன் அவசியத்தை மகிந்த ராஜபக்ச உணர்ந்திருக்கின்றார். எனவே தான் அவர் இவ்வாறு ஒரு தீர்வுத்திட்டம் குறித்து அவசரப்படுகிறார் போலத் தெரிகின்றது.

அவருக்குத் தேவை தீர்வல்ல, தீர்வுத் திட்டம் மட்டுமே என்பதுடன் அவ்வாறான தொன்றை தனது பெயராலோ முன் வைக்க அவரது இனவாதச் சிந்தனை இடம் கொடுக்கவில்லை. இதனால் அதனை சர்வகட்சிக் குழுவினூடாக வைத்தாலென்ன அது உடனடியாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதுமல்ல. ஏனெனில் இது வெறும் திட்டம் மட்டுமே. இது சர்வகட்சிக் குழுவில் பங்கு பற்றாத ஏனைய கட்சிகள் பரிசீலனைக்கு வைக் கப்பட்டு பாராளுமன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு மக்களின் கருத்தறியப்பட்டு, என்று ஒரு முடிவுக்கு வரமுன் அவரது ஆட்சிக் காலம் முடிவுக்கு வந்து விடும்.

மூன்றாவதாக அவர் 13 ஆவது திருத் தத்தின் கீழான மாகாணசபை அடிப்படையாகக் கொண்டதான அதாவது அதற்கு ஒத்தான தீர்வுத் திட்டத்தையே வலியுறுத்துவதாகக் கூறப்படுகின்றது.

இந்தியா - சிறிலங்கா ஒப்பந்தத்தை முற்று முழுதாக அன்றே எதிர்த்தவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இவர்கள். நூற்றுக்கணக்கான காடையர்களுக்கு மொட்டையடித்து காவியுடை தரிக்கச் செய்து கொழும்பு வீதிகளிலே ஊர்வலம் போகச் செய்தனர். இவர்களுடன் பெருமளவான பிக்குகளும் ஊர்வலத்தில் சென்றனர்.

இதேவேளை ஜே.வி.பி.யினர் இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து தீவிரப்படுத்தினர். இந்தியப் பொருட்களுக்கு எதிரான நட்வடிக்கை என்ற பெயரில் அவற்றை விற்பனை செய்த வர்த்தகர்களைக் கூடக்கொன்றனர்.

எனினும் இப்போது அந்த ஒப்பந்தத் தின் கீழ் உருவான மாகாண சபைகளில் பதவிகளை வகித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்த மாகாண சபைகளுக் கான அதிகாரங்களைக் கூட வழங்க மகிந் தவுக்கு விருப்பமின்மையால் அதனை யொத்த தீர்வொன்றை முன்மொழிய அவர் கோருகின்றார். உண்மையில் இப்போதுள்ள மாகாணசபைகள் கூட எதுவித அதிகாரங்களும் அற்ற வெறுச் சபைகளே இவற்றுக்கு அரசியலமைப்பு ரீதியாக வழங் கப்பட்ட அதிகாரங்கள் கூட மத்திய அரசால் செயற்படுத்த அனுமதிக்கப்படுவதில்லை.

இவ்வாறு இருக்கையில் மகிந்த ஏன் 13 ஆவது திருத்தம் குறித்து குறிப்பிடுகிறார். அதாவது தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத்திட்டம் என்பதை விட ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டம் ஒன்றே அவருக்குத் தேவைப்படுகிறது. அதாவது இவ் வாறான ஒரு தீர்வை இந்தியாவே ஏற்றுக் கொண்டது. எனக் காட்டி உலகை ஏற்கச் செய்யலாம் என்பதே அவரது எண்ணமாகும்.

1995 ஜூலையில் சந்திரிக்கா அரசாங் கம் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையில் தோல்வியடைந்த பின்னர் 1995 ஒகஸ்டில் ஒரு தீர்வு ஆலோசனையை முன்வைத்தது. இது இலங்கை பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையில் அமையும் என்று கூறியது. இது ஒரு முன்னேற்றகரமான திட்டம் என அப்போது பலராலும் கூறப்பட்டது.

சனாதிபதி சந்திரிக்காவின் இவ் ஆலோசனைகள் அவர் தமிழ் மக்கள் மீது அடுக் கடுக்காக எடுத்த பாரிய இராணுவ நட வடிக்கைகளுக்கு உலக நாடுகளின் அங்கீ காரத்தைப் பெறுவதற்கானதாக அவரது சமாதானத்திற்கான யுத்தத்தை தீவிரப் படுத்துவதற்கானதாக மட்டும் இருந்ததே யொழிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண் தற்கானதாக இருக்கவில்லை.

அவரது யுத்தம் தீவிரமடைந்து தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தபோதும் அவரது வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இந்தத் தீர்வு ஆலோசனைகளை ஒரு கையில் யுத் தத்தை மறு கையிலும் வைத்துக் கொண்டு தமது யுத்தம் சமாதானத்துக்கான யுத்தம் தான் என்பதை நிறுவுவதில் வெற்றிகண் டார்.

ஆனால் தீர்வு ஆலோசனைகளோ கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி மிக மோசமான நிலையை அடைந்து விட்ட போதிலும் அதனைத் தீர்வாக மாற்றிவிட சந்திரிக்கா அரசாங்கத்தால் முடிந்து விட வில்லை. அது இறுதியில் அடைந்து விட்ட கதி குறித்து எவருமே கவலை கொள்ள வில்லை.

அவ்வாறு தான் மகிந்த அரசாங்கமும் உலகை ஏமாற்ற ஓர் அரசியற் தீர்வுத் திட்டத்தை இப்போது உருவாக்கிவிடத் தீவிரமாக முயன்று வருகின்றது.

அவ்வாறு ஒரு திட்டத்தை முன்வைக்க மகிந்தவால் முடியவும் கூடும். அதன் மூலம் உலகை ஏமாற்ற முயலவும் கூடும். இதில் ஏமாந்தோ அல்லது ஏமாறுவது போல் நடித்தோ சில நாடுகள் மகிந்தவின் யுத்தத் திற்கு உதவி புரியவும் கூடும். எவ்வாறா யினும் இங்கு மகிந்தவின் தீர்வுத் திட்டம் என்பதும் தமிழ் மக்களுக்கனது அல்ல அது உலகிற்கானதே என்பது மட்டும் வெளிப் படை.

ஆனால் தமிழ் மக்களுக்கு மகிந்த அரசு வைத்திருக்கின்ற தீர்வு யுத்தம் மட் டுமே. அத்துடன் 50 வருடங்களுக்கு மேல் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சி னைக்கு ஒரே இரவில் அரசியல் தீர்வுகண்டு விட முடியாது எனக் கூறி வருடக்கணக் கில் இழுத்தடிக்கும் இவர்கள் யுத்தத்தை மட்டும் ஓரிரு மதாங்களில் முடித்துவிட லாம் எனக் கூறுவது ஒன்றே அவர்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகின் றது.

ஆனால் இனப்பிரச்சினையை நியாய பூர்வமான முறையில் தீர்த்து வைப்பது தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக் கைகளை ஏற்றுக் கொண்டு இப்பிரச்சி னைக்கு தீர்வுகாண்பது என்பது என்ற முடி வுக்கு இவர்கள் உண்மையிலெயே வரு வார்கள் எனின் ஓரிரு மாதங்களில் தீர்வை எட்டிவிட முடியும். ஆனால் யுத்தமே தீர் வைத் தரும் என இவர்கள் தொடர்ந்தும் நம்புவார்களாயின் இவர்களால் என்றுமே அவ்வாறானதொரு தீர்வை எட்டிவிட முடி யாது என்பதே உண்மையாகும்.

வேலவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பு.சத்தியமூர்த்தி




« எல்லோரும் ஏறின குதிரையில...... »

# கோத்தபாயவின் முகத்தில் ரத்வத்த

"எனது பதவிக்காலத்தை நிறைவு செய்யும்போது சிறந்த இராணுவத்தளபதி என்ற நிலையுடன் பதவி விலகுவேன்" என ஜெனரல் பொன்சேகா கொழும்பிலிருந்து வெளியாகும், லக்பிம சிங்கள நாளேட்டிற்கு (10 - 02 - 2008) வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார். இக்கருத்து சிலவாரங்களிற்கு முன்னர் தனது உத்தியோக பூர்வ வாதஸ்தலத்திற்கு பத்திரிகையாளர்களை அழைத்துப்பேசியபோது அவர் தெரிவித்த, "எனக்கு அடுத்துவரும் தளபதிக்கு போரை விட்டுச்செல்லமாட்டேன்" என்ற கூற்றுக்கு மாறானதாகும். ஏன் ஜென்ரல் பொன்சேகாவின் சுருதி இவ்வாறு குறைந்து போனது.

"கிளிநொச்சியை மார்ச் மாதத்திற்கு இடையில் படையினர் கைப்பற்றிவிடுவர்" என்ற தகவல் அரசவிரோத சக்திகளால் பரப்பப்பட்ட ஒன்று எனவும் ஜெனரல் பொன்சேகா லக்பிம செவ்வியில் தெரிவித்திருக்கிறார். ஆனால் சிறிலங்காவின் சுதந்திரதினத்தன்று அரசவானொலி இத்தகவலை அரசின் ஒரு நம்பிக்கைக்குரிய கூற்றாக அல்லது எதிர்கால இலக்காக வெகு துல்லியமாக பிரகடனப்படுத்தியிருந்தது. ஏறக்குறைய ஒருவாரத்தின் பின் சிறிலங்காவின் இராணுவத்தளபதி அக்கருத்தை மறுத்துரைத்திருப்பது ஏன்? அரசினதும் அதன் தளபதியினதும் நோக்குநிலைகளில் இடைவெளி திடீரென ஏற்படக்காரணமென்ன?

விடுதலைப்புலிகளை வருகின்ற ஒகஸ்ட் மாதத்திற்குள் ஒழித்துவிடப்போவதாக சிலவாரங்களிற்கு முன்னர் ஜெனரல் பொன்சேகா சூளுரைத்திருந்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு.கோத்தபாய ராஜபக்சவும் இக்கருத்தை அப்போது ஊடகமொன்றிற்கு பேசும்போது பலமாக ஆதரித்திருந்தார். ஆனால் வெகுசில நாட்களிற்கு முன் பத்திரிகையொன்றிற்கு வழங்கிய பேட்டியில் திரு.கோத்தபாய புலிகளை அழிப்பதற்கு காலக்கெடு எதுவும் விதிக்க முடியாது என மிகத்தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

திரு.கோத்தபாய ராஜபக்ச - ஜெனரல் பொன்சேகா ஆகிய இருவரும் மிகக்கடும் போக்காளர்கள் என மேற்கு ஊடகங்களாலும் இராஜதந்திர வட்டாரங்களாலும் பகிரங்கமாகவே குறித்துரைக்கப்படுபவர்கள். சிறிலங்காவின் தற்போதைய ஆட்சிபீடத்தின் யுத்தமுனைப்பிற்கும் யுத்தத்தின் மீதான நம்பிக்கைக்கும் இவ்விருவருமே அச்சாக விளங்குகிறார்கள். இவர்கள் இருவரும் ஜெனரல் கொப்பேக்கடுவவின் கீழ் முறையே கஜபா, சிங்க றெஜிமென்றுகளின் பற்றாலியன்களை முதலாம் இரண்டாம் ஈழப்போர்களில் பல்வேறு களமுனைகளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லும் வழிநடத்திய இராணுவத்தோழர்கள் ஆவர். அந்த அடிப்படையில் இருவரிடையேயும் ஆழமான புரிந்துணர்வும் நட்பும் பரஸ்பர நம்பிக்கையும் வேரூன்றியுள்ளன.

இவை நன்கு பளிச்சிடும் வகையில் இவர்கள் வெளியிடுகின்ற கருத்துக்களும் வழங்குகின்ற செவ்விகளும் அமைந்திருப்பது வழமை. ஆட்சிப்பீடத்திற்கும் பொது மக்களுக்கும் யுத்தத்திலும் யுத்தத்தின்வழி புலிகளை அழிக்கமுடியும் என்பதிலும் நம்பிக்கையேற்படுத்தும் முகமாக இவர்கள் இருவரும் தொடர்ந்து பேசிவருவார்கள்.

ஆனால் இருவரதும் தொனி இப்போது குறைவடைந்துவருகிறது. வெகு தெனாவெட்டாக தாங்கள் இதுவரையும் விதித்து வந்த காலக்கெடுக்களை சந்தடிசாக்கில் தாங்களே மிகமெதுவாக கீழே நழுவவிடுகின்றபோக்கை பாதுகாப்புச் செயலாளரும் அவரது தளபதியும் கடைப்பிடிக்கிறார்கள். ஏன்?

சிறிலங்காவின் 60வது சுதந்திரதினத்திற்கு முன்பாக மடுத்திருப்பதியை கைப்பற்றிவிடுவோம் என்பது இந்த இணை வடபோர் அரங்கு தொடர்பாக முன்வைத்திருந்த முதலாவது காலக்கெடுவாக இருந்தது. இதற்காக இவர்கள் தமது தளபதிகளையும் அதிகாரிகளையும் சிப்பாய்களையும் பிழிந்தெடுத்தார்கள். ஓடவிரட்டினார்கள். அவர்களது சடலங்களை மல்வத்து ஓயாவின் தீரத்திலே புதைத்தார்கள். சிங்களவர்கள் நம்புகின்ற விஜயனின் வருகை நிகழ்ந்த இடமாகிய அப்பகுதியில் விஜயனின் வாரிசுகளை பெயரற்ற பிணங்களாக பெயர் குறிப்பிடாத புதைகுழிகளில் புதைத்தார்கள். ஆனால் மன்னார் களமுனை அசைந்து கொடுக்கவில்லை. ஒன்றுக்கிரண்டு டிவிசன்களை களமிறக்கிய போதும் அவர்களிற்கு அளவுகணக்கின்றி வெடிபொருட்களை அள்ளி வழங்கிய போதும் படையினரது உயிரைப்பற்றி அக்கறையில்லை வெற்றியே முக்கியமென முழங்கியபோதும் எதுவுமே நடந்துவிடவில்லை.

அடம்பனையோ பண்டிவிரிச்சானையோ தாண்டமுடியாமல் முறையே 58, 57வது படையணிகள் திணறிக்கொண்டிருக்க காட்சிமாறிவிட்டது. தம்புள்ளவிலும், கோட்டை ரயில்நிலையத்திலும், யாலவிலும் புத்தளவிலும், கொப்பேகடுவ சந்தியிலும் குண்டுகளும் கிளேமோர்களும் அடுத்தடுத்து வெடிக்க தென்னிலங்கை கதிகலங்கி சுதந்திர தின நிகழ்வுகளே நடந்தேறுமோ என்கின்ற சந்தேகம் அனைத்து மட்டத்திலும் புற்றுநோய் என பரவியிருந்தது. தென்னிலங்கையின் பாதுகாப்புக் குறித்து ஆழமான அச்சமும் ஐயமும் பொதுமக்களிடமும் அதிகாரிகளிடமும் அரசாங்கத்தினுள்ளும் பரவிவிட்டன. வடக்கில் யுத்தத்தில் வெற்றி கிட்டாவிட்டாலும் பரவாயில்லை தென்னிலங்கையில் பாதுகாப்பு நிலைநாட்டப்பட வேண்டும் என்ற ஆதங்கம் அனைத்து வட்டாரங்களிலும் விழுதெறிந்துவிட்டது.



> « தென்னிலங்கையின் பாதுகாப்புக்குறித்து ஆழமான அச்சமும் ஐயமும் பொதுமக்களிடமும் அதிகாரிகளிடமும் அரசாங்கத்தினுள்ளும் பரவிவிட்டன. வடக்கில் யுத்தத்தில் வெற்றி கிட்டாவிட்டாலும் பரவாயில்லை தென்னிலங்கையில் பாதுகாப்பு நிலைநாட்டப்பட வேண்டும் என்ற ஆதங்கம் அனைத்து வட்டாரங்களிலும் விழுதெறிந்துவிட்டது. »

சிங்களப் போர் இயந்திரத்தின் முதன்மைக் கவனம் தென்னிலங்கையின் பாதுகாப்பாக மாறிவிடக்கூடிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது. எனவேதான் சிங்களப் போர்க்குதிரையின் சவாரிவீரர்கள் சற்று அடக்கிவாசிக்கத் தலைப்படுகிறார்கள்.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இவர்களை விடவும் பலமடங்காக எகிறிய எள்ளல் விட்ட ஜெனரல் ரத்வத்த ஒன்றுக்கு பத்தாக காலக்கெடுக்களை விதித்தார். விடுதலைப்புலிகளை அழித்துவிட்டதாக விகிதாசாரக் கணக்குகளை அள்ளிவீசினார். அவரது தகவல் திணைக்களம் வரைபடங்களிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகள் தொடர்பாக பெரும் புரட்சியையே செய்தது. 1997 வெசாக் பண்டிகைக்கிடையில் மாங்குளத்தை கைப்பற்றி விடுவோம் என ஜெனரல் ரத்வத்த விதித்த காலக்கெடு மிகப்புகழ்பெற்றது. ஆனால் அதுவே அவருக்கு காலக்கேடாக மாறியதையும் உலகம் வெகுவிரைவிலேயே கண்டது. தனது காலக்கெடுக்களுள் தானே சிக்கி தனது துருப்புக்களை தானே பலியிட்ட அபவாதத்திற்கு ஆளானார் ஜெனரல் ரத்வத்த. அவர் ஆடிய பேயாட்டத்தின் விளைவாக அவரது மருமகளான திருமதி சந்திரிகா அம்மையார் ஆட்சியை இழந்தார்.

இப்போது சுதந்திரதினத்திற்கிடையில் மடு என்ற தங்களது முதலாவது காலக்கெடுவை தோற்றுவிட்டு நிற்கிறார்கள் திரு.கோத்தபாயவும் ஜெனரல் சரத்பொன் சேகாவும். அவர்களது தளபதிகள் தலையால் கிணறுதோண்டியும் கூட புலிகளின் நிலைகளை குறிப்பிடத்தக்களவிற்கு பின் தள்ளவோ கைப்பற்றவோ முடியாமல் வாயிலே நுரைதள்ள கைகளைப் பிசைகிறார்கள். ஏனென்றால் வாரம் ஒருதடவையாவது வவுனியாவிற்கு வருகின்ற ஜெனரல் பொன்சேகா சவாரிக் காளைகளை தார்க்குச்சியால் குத்துவதுபோல அவர்களை விரட்டிக்கொண்டிருக்கிறார்.

ஆனால் ஆய்வாளர்கள் என்னவோ ஜெனரல் பொன்சேகாவின் முகத்தில் ஜெனரல் தளுவத்தவும் திரு.கோத்தபாயவின் முகத்தில் ஜெனரல் ரத்வத்தவும் காணப்படுவதாக கூறுகிறார்கள்.

வரலாறு தொடர்பாக முதுமொழியொன்றுண்டு.

History repeats itself ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒளியின் கண்ணீரும் கதையின் கதையும் 18

ஒளிப்படம்: நெய்தல்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வையகத்தில் ஓர் வல்வெட்டித்துறை

தமிழர் தாயகத்தின் கடற்கரையோரப் பட்டினமான வல்வெட்டித்துறை பல கல்விமான்களையும், புகழ்பெற்ற வைத்தியர்களையும், உயர்நீதிபதிகளையும், வர்த்தகர்களையும், சமூகசேவையாளர்களையும், நீச்சல் வீரர்களையும், கலை இலக்கிய கர்த்தாக்களையும் தமிழ்மண்ணுக்கு நல்கிய புகழுடையதாகும். இவர்களில் வல்வெட்டித்துறையில் வாழ்ந்து பல சமயத் தொண்டுகளையும், சமூகத்தொண்டுகளையும், பொதுத்தொண்டுகளையும் ஆற்றி கடந்த நூற்றாண்டின் நான்கு தசாப்தங்களில் பெரும்மாற்றங்களை ஏற்படுத்திய ஒருபெரியார் திருமேனியார் அவர்களாகும்.

இவர் மிகுந்த ஒழுக்கமுடையவர், மிகுந்த சமயப்பற்றுள்ளவர், மிகப்பெரிய சமூகசேவையாளர், பரந்தளவில் மனித நேயம் படைத்தவர். நீதி, நேர்மை, கண்ணியம் இவற்றுக்கு ஒரு உதாரண புருசராக என்றும் வல்வெட்டித்துறை மக்களால் நினைவுகூரப்படுகின்றார். வர்த்தகத்துறையில் மிகப்பெரியளவில் பொருளீட்டிய இவர் அவற்றையெல்லாம் தமிழ்ப்பொதுமக்களுக்கு வாரிவழங்கினார். அவை கல்விப் பணிகள், பொதுப்பணிகள், கலையிலக்கியப்பணிகள், சமயப்பணிகள் எனப் பல் முனைப்பட்டதாக வெளிப்பாடடைந்தன. வர்த்தகத்துறையில் ஈடுபட்டிருந்த திருமேனியார் அவர்கள் பல கடல்போக்குவரத்து கப்பல்களுக்கு சொந்தக்காரராக இருந்தார். இவர் அடிக்கடி பர்மாவிற்கு சென்றுவருவது வழக்கம் அங்கிருந்து உலகப்போர் இடம்பெற்ற காலகட்டத்தில் ரங்கூனிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்து வல்வெட்டித்துறை துறைமுகத்தில் கொண்டு வந்து அவற்றை பொதுமக்களுக்கு விநியோகம் செய்தார். 1930களில் ஏற்பட்ட பொருளாதார உலகப் பெரு மந்தத்தின் போது மருதநிலத்து மக்களுக்கு உணவு விநியோகம் செய்த பெருமை நெய்தல் நிலத்து மக்களுக்கு உரியதாகும்.

இவ்வாறான ஒரு கப்பலுக்கு பெயர் சௌபாக்கிலட்சுமியாகும். இந்தக் கப்பல் அடிக்கடி வல்வெட்டித்துறைக்கும் பர்மாவின் ரங்கூனுக்குமிடையில் சேவையில் ஈடுபட்டது. தீபாவளி கொண்டாட்ட காலத்தின்போது பர்மாவிற்கு சென்று உணவுப்பொருட்களோடு ஆண்களுக்குத் தேவையான வேட்டிசால்வை பெண்களுக்குத் தேவையான ஆடை வகைகள் என்பவற்றோடு தீபாவளி கொண்டாட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள், சமையல்பொருட்கள் என்பவற்றையும் எடுத்துவரும். அந்தக்காலகட்டத்தில் இந்தக்கப்பலை அடுக்களைக் கப்பல் என்று அழைப்பர். ஒருமுறை சௌபாக்கியலட்சுமி கப்பல் கடலிலே வந்துகொண்டிருந்தபோது தற்செயலாக புகைக்கூண்டு ஒன்று கப்பலின் மேல்தளத்தில் விழுந்தது.

> வல்வெட்டித்துறையில் அந்தக்காலத்தில் கப்பல் கட்டும் துறையொன்று இருந்தது. அங்கு மிக அற்புதமான கட்டுமரங்கள் படகுகள் கப்பல்கள் பாய்மரக் கப்பல்கள் கடற்கலங்கள் கட்டுவிக்கப்பட்டன. இத்தகைய கப்பல்களில் ஒன்றுதான் அன்னபூரணி என்ற கப்பலாகும். அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல நாவல் ஆசிரியரான அல்பேட் றொபின்சன் அவர்கள் தனது மனைவியோடு இலங்கைக்கு வந்தபோது வல்வெட்டித்துறைக்குச் சென்று அந்த அன்னபூரணி என்ற கப்பலைப்பார்வையிட்டார். அந்தக் கப்பலினுடைய அமைப்பு வடிவமைப்பு வேலைப்பாடுகள் இவற்றால் ஈர்க்கப்பட்ட நாவலாசிரியரும் அவரது மனைவியாரும் இக்கப்பலை விலைக்குவாங்கி வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்க பொஸ்ரன் துறைமுகத்திற்கு கடல்மார்க்கமாகவே எடுத்துச்சென்றார்கள்.

இந்த புகைக்கூண்டு பர்மியர்களாலோ (மியான்மார்) அல்லது சீயம் நாட்டைச் சேர்ந்தவர்களாலோ (தாய்லாந்து) வானில் அனுப்பப்பட்டிருக்கவேண்டும் அதனை எடுத்து வல்வெட்டித்துறைக்குக் கொண்டு வந்த கடலோடிகள் அதனை ஆராய்ந்தார்கள். வல்வெட்டித்துறை நெடியகாட்டைச் சேர்ந்த மக்கள் தமக்குரிய இயல்பான தொழில்நுட்ப அறிவைக்கொண்டு ஈழத்திலும் அத்தகைய புகைக்கூண்டுகளை உற்பத்திசெய்தார்கள். இவை இப்பொழுதும் வல்வெட்டித்துறையில் விழாக்காலங்களில் வானிற்கு அனுப்பப்படும் புகழ்பெற்ற நிகழ்வாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகசேவையாளரான திருமேனியார் அவர்கள் பர்மா ரங்கூனுக்கு சென்றிருந்த சமயம் அங்கிருந்த மக்கள் தமக்கு ஒரு முருகன் கோவில் கட்டித்தருமாறு கேட்டுக் கொண்டார்கள். அங்கிருந்த பர்மிய தமிழ் மக்கள் வழிபாடு செய்வதற்காக ரங்கூனில் ஓர் கதிர்வேலாயுத சுவாமி கோயிலை திருமேனியார் அவர்கள் கட்டிக்கொடுத்தார்கள். இதேபோல கொழும்பிலே இருக்கின்ற தமிழ்மக்கள் குறிப்பாக கொட்டாஞ்சேனை ஜிந்துப்பிட்டி, செட்டியார் தெரு போன்ற இடங்களில் வாழ்ந்த தமிழர் தாயகத்தை வாழ்விடமாகக் கொண்ட கொழும்பு வாழ் தமிழர்கள் கொழும்பிலேயிருந்த செட்டிமார்களால் செட்டியார்தெரு முருகன் கோவிலில் வழிபாடு செய்தவதற்கு தடுக்கப்பட்டிருந்தபோது அவர்கள் திருமேனியாரிடம் முறைப்பாடு செய்தார்கள் அவர் பழைய செக்கடித்தெருவில் (தற்போது புதிய கதிரேசன் வீதி என அழைக்கப்படுகிறது) காணியை வாங்கி கதிர்வேலாயுத சுவாமி கோவிலைக் கட்டிக் கொடுத்தார். ரங்கூனில் இருக்கும் கதிர்வேலாயுதசுவாமி கோவிலிலும் புதிய கதிரேசன் வீதியிலுள்ள கதிர்வேலாயுத சுவாமி கோவிலிலும் திருவிழாக் காலங்களில் கட்டியங் கூறப்படுகின்ற பொழுது இந்தக் கோயில்கள் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த திருமேனியார் அவர்களால்

www.tamilarangam.net

கட்டுவிக்கப்பட்டது எனக்கூறப்படுகிறது.

மேலும் வல்வெட்டித்துறையில் அந்தக் காலத்தில் கப்பல் கட்டும் துறையொன்று இருந்தது அங்கு மிக அற்புதமான கட்டு மரங்கள், படகுகள், கப்பல்கள், பாய்மரக் கப்பல்கள், கடற்கலங்கள் கட்டுவிக்கப்பட்டன. இத்தகைய கப்பல்களில் ஒன்றுதான் அன்னபூரணி என்ற கப்பலாகும். அமெரிக்காவைச்சேர்ந்த பிரபல நாவல் ஆசிரியரான அல்பேட் றொபின்சன் அவர்கள் தனது மனைவியோடு இலங்கைக்கு வந்தபோது வல்வெட்டித்துறைக்குச் சென்று அந்த அன்னபூரணி என்ற கப்பலைப்பார்வையிட்டார். அந்தக் கப்பலினுடைய அமைப்பு வடிவமைப்பு வேலைப்பாடுகள் இவற்றால் ஈர்க்கப்பட்ட நாவலாசிரியரும் அவரது மனைவியாரும் இக்கப்பலை விலைக்கு வாங்கி வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்க பொஸ்ரன் துறைமுகத்திற்கு கடல்மார்க்கமாகவே எடுத்துச்சென்றார்கள். இந்தக்கப்பலில் ஆறு கடலோடிகள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் பயணம் செய்தார்கள். அவர்களில் ஒருவர் இரத்தின சுவாமி என்பவராவார் இவர்தான் கடைசியாக உயிர்வாழ்ந்த மாலுமியாகும் இவர் 1990 களில் தனது தாயகமான வல்வெட்டித் துறையில் இறந்தார்.

கப்பல் வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்ட திருமேனியாரும் அவரது தமையரான வெங்கடாலாசம் அவர்களும் கப்பல் வர்த்தகம் மூலம் தாம் சம்பாதித்த பொருளாதாரத்தை தமிழ்மக்களின் வாழ்வாதாரத்திற்கே செலவிட்டார்கள். பெரியவர் வெங்கடாலாசம் அவர்களுடைய மகன் வரதசுந்தரம் அவர்களாகும் அவரும் தமது தந்தை வழி முதுசமாக சமூகத்தொண்டு சமயத் தொண்டு இவற்றில் பெருமளவில் பங்கெடுத்தார். இவரது மகன் திரு.வேலுப்பிள்ளை அவர்கள் மாவட்டக் காணி அதிகாரியாக இருந்து தமிழ்மக்கள் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களுக்கு பெருமளவு குடியேற்றத்திட்டங்களை உருவாக்கி அவர்களுக்கு நிலையான வாழ்க்கையை அளித்தார். இவரது மகனான மேதகு பிரபாகரன் அவர்கள் தற்பொழுது தமிழ்மக்களுக்கான ஒரு தேசியத்தலைமையை வழங்கியிருக்கின்றார்.


இவ்வாறு பார்க்கின்றபொழுது வல்வெட்டித்துறையைச் சேர்ந்த றங்கா விவேகானந்தன் போன்ற புகழ்பெற்ற குச்சுப்புடி நடன ஆசிரியைகளையும் நவரத்தினசாமி, ஆழிக்குமரன் ஆனந்தன் போன்ற சர்வதேச புகழ்பெற்ற நீச்சல்வீரர்களையும், பல அரசாங்க அதிபர்களையும், பல வைத்திய நிபுணர்களையும், யோகசிகாமணிபோன்ற நேர்மையான உயர்நீதிபதிகளையும், பல எழுத்தாளர்களையும், பல கலைஞர்களையும் பல . பத்திரிகையாளர்களையும், பல பொறியியலாளர்களையும், இவ்வாறாக பல துறைசார்ந்த நிபுணர்களையும், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல மாவீரர்களையும் தந்துள்ளது. தமிழர் தாயகத்தின் மேம்பாட்டுக்கு இவர்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றிவருகிறார்கள்.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் தென்னிலங்கையில் தீவிர இடதுசாரிகள் பிரித்தானிய அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபட்டார்கள் இவர்களில் கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, சட்டத்தரணி எட்மன் சமரக்கொடி, அரசியல் ஆய்வாளர் லெஸ்லி குணவர்த்தனா போன்றவர்கள் மிகமுக்கியமானவர்களாவர். இவர்கள் 'பொப்பிமல்' இயக்கத்திற்கு எதிராக 'சூரியமல்' இயக்கத்தை நடத்தினார்கள். இதனால் ஆத்திரமடைந்த பிரித்தானிய அரசாங்கம் இவர்கள் நால்வரையும் கைதுசெய்து கண்டிபோகம்பறை சிறைச்சாலையில் அடைத்தது. அந்த சிறைச்சாலையை உடைத்துக்கொண்டு இவர்கள் வெளியேறி தலைமறைவானார்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற இவர்களை அங்குள்ள தமிழ்மக்கள் நன்கு உபசரித்தார்கள். இவர்கள் நால்வரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களான புகழ்பெற்ற கடலோடிகளான பாஞ்சாலி, கந்தப்பா, பயில்வான் வைரமுத்து ஆகியோர்களால் காப்பாற்றப்பட்டு படகுகள் மூலம் தென்னிந்தியாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

உண்மையில் வல்வெட்டித்துறை மக்கள்தான் இடதுசாரி கிளர்ச்சிக்காரர்களை அந்தவேளையில் காப்பாற்றினார்கள் தென்னிந்தியாவிற்கு அழைத்துச்செல்லப்பட்ட என்.எம்.பெரேரா, ரமணி என்ற பெயரிலும் கொல்வின் ஆர்.டி.சில்வா, கோவிந்தன் என்ற பெயரிலும் அங்குள்ள வங்கிகளில் கடமையாற்றினார்கள்.

இரண்டாம் உலகப்போர் முடிந்து இலங்கை திரும்பிய இவர்கள் சுதந்திரம் பெற்ற இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் 1947ம் ஆண்டு போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களாக சிங்கள தேசத்தால் தெரிவுசெய்யப்பட்டார்கள். இதில் என்.எம்.பெரேரா இலங்கையின் முதலாவது எதிர்க்கட்சித்தலைவராகவும் இருந்தார்.

பின்னர் இவர்கள் இலங்கையின் அமைச்சரவையிலும் இடம்பெற்றார்கள். 1964 இலும் 1970 களிலும் என்.எம்.பெரேரா நிதியமைச்சராகவும், கொல்வின் ஆர்.டி. சில்வா அரசியலமைப்பு அமைச்சராகவும், லெஸ்லி குணவர்த்தனா போக்குவரத்து அமைச்சராகவும் கடமையாற்றினார்கள். இவர்களில் எட்மண்ட் சமரக்கொடி ஒரு இலட்சியவாதி என்பதற்காக இறுதிவரை தமிழ்மக்களுடைய உரிமைகளுக்காகப் போராடினார். தமிழ்மக்களினுடைய சுயநிர்ணய உரிமையை அவர் ஏற்றுக்கொண்டார்.



என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தனா போன்றோர் பிற்காலத்தில் தீவிர இனவாதிகளாக மாறிவிட்டார்கள். ஆனால் எட்மண்ட் சமரக்கொடி தன்னுடைய இறுதிக்காலத்திலும் தான் தேடப்பட்டபோது 1940 களில் வல்வெட்டித்துறை மக்களால் தான் காப்பாற்றப்பட்டமையை நன்றி மறவாமல் நினைவுகூர்ந்ததோடு வல்வெட்டித்துறை மக்கள் செய்த உயிர்காப்பு நடவடிக்கைகளுக்காக இறுதிவரை தமிழ்மக்களுடைய உரிமைகளுக்காக குரல்கொடுத்தார். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பொன்.பூலோகசிங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாலை நிலப் பூக்களின் எதிர்காலம்

ச.பாலா



ஆதிக்க வெறிகொண்ட வல்லாதிக்க சக்திகளால் சீரழிக்கப்பட்டு கொண்டிருக்கும் எங்கள் குழந்தைகளைப் பற்றி இக்கட்டுரை உங்களுடன் கலந்துரையாட முயலுகின்றது. இது ஒரு மேலோட்டமான கலந்துரையாடல்தான். ஆனால் எங்கள் குழந்தைகள் பற்றிய ஆழமான ஓர் கலந்துரையாடலுக்கு இக்கட்டுரை உந்து சக்தியாய் அமையும் என்பதே எனது நம்பிக்கையாய் உள்ளது.

உலக மாந்தரின் வாழ்க்கைச் சக்கரம் மனித சமூகத்தின் தொடர்ச்சியான இருப்பை அடித்தளமாகக் கொண்டே இயங்கி வருகின்றது. இதன் அடிப்படையில் திருமணமும் அது சார்ந்த உறவும் மனித சமூகத்தின் மீள் உற்பத்திக்கான நடவடிக்கையாகவும் பண்பாடும் அது சார்ந்த உளவியல் நடவடிக்கைகளும் ஓர் ஆரோக்கியமான மனித சமூகத்தின் வளர்ச்சிக்கான நடவடிக்கையாகவும் கருதப்படுகின்றன. அன்பும், பண்பும், மனிதநேயமும், மண்பற்றும் கொண்ட ஓர் அறிவுசார் ஆரோக்கியமான சுதந்திர சமூகம் உருவாகவில்லையெனில் மனித சமூகத்தின் வாழ்வே அர்த்தமற்றுப் போய்விடும். மனித வாழ்வின் உன்னதமான விளைவுகளாக அவர்களது சந்ததியினரே இருந்து வருகின்றனர்.

எனவேதான் உலகம் முழுவதும் சிறுவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்படுகின்றது. சிறுவர்களது உடல் உள ஆரோக்கியம் என்றும் சிறுவர் உரிமை என்றும், சிறுவர்களின் கல்வி என்றும், சிறுவர்கள் எதிர்காலம் என்றும் பல்வேறு தளங்களில் சிறுவர் நலன்கள் பற்றி உலகம் பேசியும் பல்வேறு வகைப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டும் வருகின்றது. இவ்வாறான சூழலில் சிறுவர்களின் சமூக வாழ்நிலை எப்படி உள்ளது என்பதைப் பார்க்கும் போது பல அதிர்ச்சியான தகவல்களே நடைமுறை யதார்த்தமாக உள்ளன.

எமது தமிழ் பேசும் சிறுவர்களின் கண்முன்னாலேயே அவர்களது நண்பர்களும் உடன்பிறப்புக்களும் சக சிறுவர்களும் உடல் சிதறிச் சாகின்றார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர்களது பெற்றோர்கள் இரத்த வெள்ளத்தில் மிதக்கின்றனர். தன்னம்பிக்கை கொள்ளமுடியாத, அடுத்த நிமிடம்வரை நாம் உயிர் வாழ்வோமா எனும் நிச்சயமற்ற ஓர் துயரமான வாழ்வு எமது குழந்தைகள் மேல் திணிக்கப்பட்டுள்ளது. மரண பயமெனும் மாபெரும் அவலத்தை ஈழ மண்ணிலே எமது குழந்தைகள் தினமும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.



எரிச்சல், பொறாமை, மனப்பிறழ்வுகள், வக்கிரத்தனம், மோசமான சுயநலம், சிறுவயதுத் திருமணம், சமூகக் கூட்டின்மை என மிகமோசமான மனப்போக்குகள் சிறுவர்கள் மத்தியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ந்து வருவதை நாம் பார்க்கின்றோம். அத்தோடு வறுமை காரணமாக சிறுவர்கள் வேலைக்குப் போதல், பாலியல் நடவடிக் கைகளில் ஈடுபடுத்தப்படுவதால் வன் முறைக் கலாச்சாரத்திற்கு உட்படுதல், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுதல் எனச் சிறுவர்களின் எதிர்காலம் மிகவும் மோசமான நிலைக்கு உள்ளாகி வருவதை நாம் காண்கின்றோம். அதுமட்டுமல்லாமல் அன்புக்காகவும், அரவணைப்பிற்காகவும் ஏங்கித்தவிக்கும் பரிதாப நிலைக்கு படிப்படி யாகச் சிறுவர்கள் உள்ளாகி வருகின்றார் கள்.

யுத்த சூழலுக்குள் தள்ளப்பட்ட வறிய நாடுகளில் வாழ்ந்து வரும் சிறுவர்களுக்கு மட்டுமா இந்நிலை? இல்லை. பொருளா தாரம், விஞ்ஞானம், தொழிநுட்பம், கல்வித் துறை, உளவியல்துறை என சகல துறை களிலும் வளர்ச்சிகண்டுள்ளதாகச் சொல் லப்படும் மேற்குலகச் சிறுவர்கள்கூட அன் பும் அரவணைப்புமின்றி மிகுந்த மனப் பிறழ்வுகளுக்கு உள்ளாகி போதைப் பொருட்பாவனைக்கு அடிமையாகி வரு கின்றார்கள் என்பதற்கு ஏராளமான சான்று களை ஊடகங்கள் வாயிலாக தினமும் நாம் அறிந்து வருகின்றோம்.

சகலதுறைகளிலும் வளர்ச்சி கண்டு உலகின் சக்கரவர்த்தியாய் வலம் வந்து கொண்டிருக்கும் அமெரிக்க தேசத்தின் பிர சித்திபெற்ற நகரமான நியூயோர்க்கில் ஆரம்பப் பாடசாலையில் கல்விபயிலும் ஒரு சிறுவன் தன்னோடு சகமாணவியாகக் கல்விபயிலும் ஒரு சிறுமியை கைத்துப் பாக்கியால் சுட்டுக்கொன்றுள்ளான். கல்வி யிலும் பொருளாதாரத்திலும் வளர்ந்தால் எமது பிள்ளைகள் ஒரு மகிழ்ச்சியான சிறந்த வாழ்வைப் பெறுவார்களென்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு தமது பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர் கள் மேற்படி சம்பவத்திற்குரிய காரணம் என்ன என்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டி உள்ளது.

பண்பாடு, கலாச்சாரம், உளவியல், சிறுவர் உரிமைகள், மனித உரிமைகள் முன்னேற்றம் என உலகிற்குப் போதனை நடாத்திவரும் மேற்குலக உல்லாசப் பயணி கள் தமது உல்லாசமான வாழ்விற்காகவும் தமது மோசமான இன்ப நுகர்வுகளிற்காக வும் ஆசிய நாட்டுச் சிறுவர்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி வருகின்றார் கள்.

சிறிலங்காவிலே உல்லாசப் பயணி களின் கோட்டையெனக் கருதப்படும் ஹிக் கடுவ என்னும் ஓர் அழகான கிராமத்திலே இந்த உல்லாசப் பயணிகளுக்காக ஓர் பாலியல் பயிற்சிப் பாடசாலை இரகசியமாக ஆரம்பிக்கப்பட்டு அங்கே 10 வயதிற்கும் 15வயதிற்கும் இடைப்பட்ட ஏழைச் சிறு வர்களுக்கு உல்லாசப் பயணிகளை பாலி யல் ரீதியாக எப்படி மகிழ்விப்பதென நவீன முறைகளில் பயிற்றுவிக்கப்பட்டுச் சான்றி தழ்கள் வழங்கப்படுவதாகவும் அங்கே வரும் உல்லாசப் பயணிகள் இச்சான்றிதழ் அடிப்படையில் இச்சிறுவர்களைத் தேர்ந் தெடுத்து தமது பாலியல் இன்ப வெறிக்குப் பயன்படுத்தி வருவதாகவும் இத்தொழிலில் ஈடுபட்டு வரும் சிறுவர்களின் பணவருவாய் மிக அதிகமாய் இருப்பதால் பெற்றோர்கள் இச்சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப் பாது இப்பாலியல் பாடசாலைக்கு அனுப்பு வதாகவும் ஒரு துன்பமான செய்தி உண்டு.

இந்த மேற்குலகப் பணமுதலைகளின் ஆடம்பர உல்லாச வாழ்விற்காக ஒடுக்கப் பட்ட நாடுகள் மீது மேற்குலக வர்த்தக சமூகத்தால் திணிக்கப்பட்ட அரச பயங்கர வாத யுத்தம் ஆசிய நாட்டுச் சிறுவர்களை மிகுந்த உளவியற் பாதிப்பிற்கு உள்ளாக்கி வருகின்றது. குறிப்பாகச் சிறிலங்காவிலே மேற்குலகின் ஆசீர்வாதத்துடன் ஆயுத உதவிகளுடனும் தமிழ் மக்கள் மீது திணிக் கப்பட்ட அரச பயங்கரவாத யுத்தத்தால் தமிழ்ச்சிறுவர்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள் ளாகி வருகின்றார்கள்.

எமது தமிழ் பேசும் சிறுவர்களின் கண் முன்னாலேயே அவர்களது நண்பர்களும் உடன் பிறப்புக்களும் சக சிறுவர்களும் உடல் சிதறிச் சாகின்றார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர் களது பெற்றோர்கள் இரத்த வெள்ளத்தில் மிதக்கின்றனர். தன்னம்பிக்கை கொள்ள முடியாத, அடுத்த நிமிடம்வரை நாம் உயிர் வாழ்வோமா எனும் நிச்சயமற்ற ஓர் துயர மான வாழ்வு எமது குழந்தைகள் மேல் திணிக்கப்பட்டுள்ளது. மரண பயமெனும் மாபெரும் அவலத்தை ஈழ மண்ணிலே எமது குழந்தைகள் தினமும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். கிபிரின் இரைச் சல் தூரத்தில் கேட்டாலும் எமது குழந்தை கள் மிரண்டெழும் காட்சிகள் உள்ளத்தை தொடுவதாக உள்ளது. இந்தத் துயரத்தை ஒரு நிமிடம் அனுபவித்துப் பார்த்தால்தான் அதன் வலியைத் எம்மால் தெரிந்து கொள்ள முடியும். 1996 ஆம் ஆண்டு ஆரம் பத்தில் தாயின் மடியிலிருந்து என்னுடன் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த ஓர் இரண்டு வயதுப் பிள்ளை கிபிர்ச்சத்தம் கேட்டவுடன் தாயின் மடியில் பிணமாக வீழ்ந்ததை நான் நேரில் கண்டேன்.

தென்மராட்சியில் உள்ள கொடிகாமப் பகுதியில் இரவு ஒரு வீட்டிற்குள் நுழைந்த இராணுவம் பதின்னான்கு வயது மதிக் கத்தக்க ஒரு சிறுவனை வருங்காலப் புலி எனக் கூறி அவனது பெற்றோருக்கு முன் னால் இழுத்துப் போட்டுச் சுட்டார்கள். அவ னைப் பெற்று வளர்த்து ஆளாக்கி அவ னைப் பற்றிய கனவுகளைச் சுமந்த அவ னது அன்புத்தாய்க்கும், தந்தைக்கும் முன் னால் அவன் அணு, அணுவாக துடித்து, துடித்து மாண்டான். இதை நேரில் கண்ட அவனது தங்கை மனப்பாதிப்புக்குள்ளாகி மன நோயாளர் பகுதியில் அனுமதிக்கப் பட்டாள். இது மட்டுமா? மன்னாரிலே ஏழு வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தை இரா ணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாள். அத்தோடு மட்டும் அந்த இன வெறிகொண்ட இராணுவம் திருப்திப்படவில்லை. தச்சுவேலைக்குப் பயன்படுத்தும் பெரிய திறப்பணத்தால் அந்தப் பிஞ்சுக் குழந்தையின் பெண்ணு றுப்பிலும், தொண்டையிலும் பெரியளவில் துழைபோட்டு வீட்டு வாயிலில் தூக்குப் போட்டு தொங்கவிட்டார்கள்.

சிறுவர்கள் உரிமை பற்றியும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் வாய்கிழியப் பேசிக் கொண்டு பயங்கரவாதத்தை ஒழிக்க முயலும் சர்வதேசம் சிறிலங்கா அரசுக்கு வழங்கும் ஆயுதங்கள் மூலமே எமது சிறுவர்கள் கொல்லப்படுகின்றார்கள். அது மட்டுமல்ல..

அறிவை வளர்த்து இந்த உலகத்தை அறியச் செய்து அவர்கள் சிறப்பான வாழ் வுக்கு உதவும் கல்வி கூட எமது சிறுவர் களுக்கு இங்கே முற்று முழுதாக மறுக்கப் பட்டுள்ளது.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் அவர் களது நலன்களைப் பேணுவதற்காக எம் மீது திணிக்கப்பட்ட கல்வி முறையே இன் றும் எமது மண்ணில் தொடர்ந்து கொண்டி ருக்கின்றது. போட்டிப் பரீட்சையை மைய மாகக் கொண்டு செயற்படும் இக்கல்வி முறையானது எமது சிறுவர்களை படிப்ப தற்கு அனுமதிக்க மறுக்கின்றது. மாறாக பாடமாக்குதலே இங்கு முதன்மை பெறு கின்றது.

இந்தப் போட்டிப்பரீட்சையில் தமது பிள் ளைகள் வெற்றிபெற்று தம் குடும்ப அந் தஸ்த்தை உயர்த்த வேண்டும் எனக் கரு தும் பெற்றோர்கள் கல்வியை இந்தக் குழந் தைகளின் தலையிலேயே பெரும் சுமை யாகச் சுமத்துகின்றார்கள். வெறும் உத்தி யோகக் கனவுகளை மட்டும் நோக்காகக் கொண்ட இக்கல்வி முறையானது எமது சிறுவர்களின் இயல்பூக்கங்களை முற்று முழுதாக மறுதலித்து இப்போட்டிப் பரீட்சை யில் அவர்கள் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக பாடசாலைக்கும் தனியார் கல்விநிறுவனங்களுக்கும் எமது பிள்ளை களை நாயாக அலைய வைக்கிறது. ஓரளவு வசதியுள்ள சிறுவர்களின் நிலை இப்படி இருக்கும் போது, வசதியற்ற ஏழைச் சிறு வர்களோ இப்போட்டிப் பரீட்சையில் பங்கு கொண்டு வெற்றிபெறும் வாய்ப்பு முற்றாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுக்கப்பட்டுத் தவிக்கின்றார்கள். வர்த்தகப் பண்பாட்டிலே கல்வியும் பணம் சம்பாதிக்கும் ஒரு வர்த்தகமாக மாற்றப்பட்டுள்ளதால் தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் போகமுடியாத ஏழைச் சிறுவர்களில் பலர் எழுத்தறிவை இழந்த நிலையில் வளர்ந்து வருகிறார்கள். அறிவியலில் வளர்ந்து வரும் நவீன உலகை எழுத்தறிவில்லாத இந்த ஏழைச் சிறுவர்கள் எப்படி எதிர்கொள்ளப் போகின்றார்கள்..? என்ற கேள்வி எழுந்திருக்கும் நிலையில் ஒட்டு மொத்தமான சிறுவர்களின் எதிர்கால நிலை என்ன..?

எமது சிறுவர்களிற்கிங்கே அன்பில்லை, அரவணைப்பில்லை, இயல்பூக்கங்களை அனுபவித்து வாழும் இயல்பான வாழ்வில்லை அவர்களது சின்ன இதயங்களில் தோன்றும் சின்னச் சின்ன ஆசைகளை யாரும் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. தாயின் பாசத்தோடும் தந்தையின் அரவணைப்போடும் சுதந்திரமாக இந்த மண்ணிலே ஆடிப்பாடி கூடிவிளையாடி மகிழ்ந்து வளரும் இயல்பான வளர்ச்சிக்குரிய வழிகள் எமது சிறுவர்களிற்கிங்கே முற்று முழுதாக மறுக்கப்பட்டு வருகின்றது என்றே சொல்லலாம்.

இவ்வாறு எங்கள் எதிர்காலக் குழந்தைகளின் வாழ்வு பாலை நிலப்பூக்களாய் உதிர்ந்து சிதைந்தால் மனிதசமூகம் இந்த மண்ணிலே வாழ்வதன் அர்த்தம்தான் என்ன.? எதற்காக மனித சமூகம் இந்த உலகிலே வாழவேண்டும். நுகர்வுக் கலாச்சாரத்திற்கு அடிப்படையாகி தன் சமூகத்திற்காக தனது வாழ்வை அர்ப்பணிக்க மறுக்கும் மனிதனுக்கு இந்த உலகிலேயே வாழும் உரிமை உண்டா? இந்தக் கொடுமையான நிலைமை மனித சமூகத்திற்கு அறிவியலில் வளர்ந்து செல்லும் இந்த உலகிலேயே ஏன் ஏற்பட்டது..?

'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்பது அரசியலின்றி ஓர் சிறிய அணுக்கூட இந்த உலகத்திலே அசைய முடியாது என்ற அர்த்தத்திலேயே உலகில் இன்று உள்ளது. ஒரு மனிதக் கூட்டத்தின் ஆரோக்கியமான வாழ்வும் பல்துறை சார்ந்த முன்னேற்றமும் அந்த மனிதக் கூட்டத்தின் வாழ்வியல் பண்பாட்டிலேயே தங்கியுள்ளது. அந்த உயரிய வாழ்வியல் பண்பாட்டை உருவாக்கி அதைப் பாதுகாத்து வளர்க்கும் பாரிய பொறுப்பு மனித சமூகத்தை வழிநடத்தும் அரசியல் சித்தாந்தத்திற்கே உண்டென்பதை இதுவரை பதியப்பட்டுள்ள மனிதகுல வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

எனவே எமது சிறுவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் எவரும் இன்றைய நவீன உலகின் அரசியலமைப்பை புறம்தள்ளிவிட்டு ஒருபோதும் சிந்திக்க முடியாது. அப்படி அரசியலை புறம்தள்ளிவிட்டு நாம் எடுக்கும் முடிவுகள் நடைமுறைச் சாத்தியமற்றதாகவே இருக்கும். எனவே மனிதனது வாழ்வோடும் இருப்போடும் இறுகப் பிணைக்கப்பட்ட அரசியலின் அடிப்படையில் எமது சிறுவர்களின் எதிர்காலத்தை சிந்திப்பதே விஞ்ஞான பூர்வமான சிந்தனையாக அமையும். இந்த விஞ்ஞான பூர்வமான சிந்தனையின் அடிப்படையிலேயே இன்றைய எமது விடுதலைப் போராட்டத்தையும் நாம் நோக்க வேண்டும்.

இன்றைய உலகின் நவீன அரசியல் போக்கை நாம் ஆராயும் பொழுது அது வர்த்தக சமூகத்தின் இரும்புப் பிடிக்குள் இருப்பதை நாம் காணலாம். உலக மயமாக்கல் என்னும் நவீன வர்த்தக அரசியல் சித்தாந்தமே இன்றைய உலகின் அசைவியக்கத்தை தீர்மானிக்கும் தீர்க்கமான சக்தியாய் உள்ளது. கைத்தொழிற் புரட்சிக்குப் பின் உருவான மூலதனக் குவிப்பானது இன்றைய உலகத்தின் தேவைகள் அனைத்தையும் ஒரு சில நாடுகள் உற்பத்தி செய்து வழங்கும் பெரியதோர் வளர்ச்சி கண்டுள்ளது. ஒரு சில நாட்டில் வாழும் நூற்றுக்கணக்கான வர்த்தகர்களே இன்றைய உலகிற்குப் பண்டங்களை விநியோகம் செய்யும் வர்த்தகப் பொருளாதார சித்தாந்தமே இன்று உலகை ஆழ்கின்றது.

இந்த வர்த்தகப் பொருளாதார அரசியற் சித்தாந்தமானது ஊடகங்களின் ஆதிக்கத்தை இந்த உலகில் ஏற்படுத்தி அதன் மூலம் ஓர் நுகர்வுப் பண்பாட்டை உருவாக்கி அகில உலகத்தையும் தனது அரசியல் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர முயற்சித்து வருகின்றது. இந்த நுகர்வுப் பண்பாடானது மக்களின் தேசிய உணர்வை முற்று முழுதாக இல்லாமலாக்கி அவர்களைத் தங்கிவாழும் பொருளாதார வாழ்வுக்கு இட்டுச் செல்கின்றது.

தேசப்பற்றும், சமூகக்கூட்டுணர்வும், சொந்த உற்பத்தியும், வர்த்தக உலகின் பொருளாதார நோக்கிற்குத் தடையாக இருப்பதால் மக்களின் இயல்பான கூட்டு வாழ்வை இல்லாமற் செய்து உழைப்பிலிருந்து அவர்களை முழுமையாக அன்னியமாக்கி அவர்களது சுயபொருளாதார உற்பத்தி நடவடிக்கைகளை படிப்படியாக அழிப்பதன் மூலம் தேசத்தின் மீது மக்கள் கொள்ளும் இயல்பான பற்றுணர்வை கொன்று புதைத்து விட்டு எதிலும் பற்றில்லாத தன்னை மட்டுமே நேசிக்கின்ற ஓர் சுயநலவெறி கொண்ட மனிதனையே இந்த நுகர்வுப் பண்பாடு உருவாக்க முயற்சிக்கின்றது. ஏனெனில் ஆசைவெறி கொண்ட சுயநலவாதியே இன்றைய வர்த்தக உலகிற்கு மிகவும் அவசியமானவனாகின்றான். பணத்தைத்தேடுவதையும் அப்பணத்தைக் கொண்டு பண்டங்களை நுகர்வதையும் தனது வாழ்வாகக் கொண்ட மனிதனால் மட்டுமே விடுதலைப் போராட்டங்களை இல்லாமாக்கி வர்த்தகத்தைப் பெருக்க முடியும்.

ஊர் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்ற மனப்பாங்குடன் மனிதர்களை வாழத்தூண்டும் இந்த நுகர்வுப்பண்பாட்டு வாழ்க்கை முறையே இன்றைய எமது குழந்தைகளின் வாழ்வைச் சீரழித்து சின்னாபின்னப் படுத்துகின்றது. பாலியல் வன்முறைகளை எங்கள் பிஞ்சுக்குழந்தைகள் மேல் திணிக்கின்றது. ஆயுத வன்முறையை அவர்கள் மேல் பிரயோகித்து அச்சத்துள் அவர்களை அமிழ்த்தி தன்னம்பிக்கையும் வீரமும் இல்லாத ஓர் கோழைத் தனமான வாழ்வை நோக்கி எமது சந்ததியை வழிப்படுத்திச் செல்ல முனைகிறது.

இந்த வர்த்தக நுகர்வுப் பண்பாட்டின் அரசியல் வழிமுறையானது சனநாயகமெனக் கூறிக் கொண்டு பெரும்பான்மை இன மக்களின் இதயங்களிலே இனவாத நஞ்சை தீவிரமாக ஊட்டி அரசியல் அதிகாரத்தையும் வழங்கி எமது சிறுவர்களின் உயிரையும் ஆத்மாவையும் இனவெறித் தீயில் எரித்துச் சாம்பலாக்கி கொண்டிருக்கின்றது. எனவே வர்த்தக சமூத்தின் நுகர்வுப்பண்பாட்டை எமது மண்ணிலே விதைத்து வளர்க்க முயலும் சிறிலங்கா இனவாத அரசின் வீழ்ச்சியால் மட்டுமே எமது சிறுவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்த முடியும்.

எனவேதான் எமது தேசிய விடுதலைப் போராட்டம் அளப்பரிய தியாகங்கள் மத்தியில் எமது மண்ணிலே நடைபெறுகின்றது. எமது விடுதலைப் போராட்டத்தின் பழுவை அடுத்த சந்ததியின் தலையிலே நாம் சுமத்தக்கூடாது. எமது கடின உழைப்பின் பலனை அவர்கள் அனுபவிக்க வேண்டும் என்ற எமது தேசியத்தலைவரின் சிந்தனைக்கு ஏற்ப ஆயிரக்கணக்கான இளைஞர்கள் களத்திலேயே நிற்கின்றார்கள்.

அத்தோடு கல்வி மறுக்கப்பட்டு, உரிமைகள் சிதைக்கப்பட்டு, ஆளுமை விருத்தியை இழந்து, மரண பயத்துள் வீழ்ந்து தவிக்கும் எமது சிறுவர்கள் மத்தியிலே அவர்களது ஆளுமை விருத்திக்கான பணிகள் விடுவிக்கப்பட்ட வன்னி மண்ணிலே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் மத்தியிலான இப்பணிகள் எவ்வாறு நடை பெறுகின்றன..? என்பதை ஆழமாகப் பார்க்கும் போதுதான் எமது விடுதலைப் போரின் அளப்பரிய அர்ப்பணங்களைப் புரியும் எமது வீர இளைஞர்களின் இலட்சியைப் பணியை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ள முடியும்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழே

## பழமைவாய்ந்த உயர் நாகரீகங்களுக்கு உரித்துடையோர் தமிழரே



கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் அகழ்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்கால மண் உருவச்சிற்பம்.

ஒளிப்படம்: த.திரு

இந்து மாகடலில் மிகப்பெரும் நிலப் பகுதி கடற்கோளால் அமிழ்ந்து போன செய்தியை சிலப்பதிகாரம் சொல்கிறது அது பெரும் கதையாக உள்ளபோதும் தமிழருடைய வரலாற்றை அது எடுத்துச்சொல்கிறது.

இதே போன்று பல்வேறு மொழிகளின் பழைய ஏடுகளை ஆராய்ந்தளிந்த 'ஜேம்சு சரச்வாட்' என்ற அறிஞர் குறிப்பிடுகிறார் 60000 ஆம் ஆண்டு பழமைவாய்ந்த மிகுந்த உயர் நிலை எய்தியிருந்த நாகரீகம் ஒன்று மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டதன் விளைவாக பசுபிக் பெருங்கடலில் மூழ்கியதும் என்றும் இதற்கான சான்றுகள் உள்ளது என்றும் கூறினார். அப்போது 6 கோடி மக்கள் உயிரிழந்தனர் என தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டார்.

கடல் கொண்ட குமரிக்கண்டமே ஆடும் (Lemurio) (The Lost Continentormu) என்ற நூலில் James Charch Ward அவர்கள் பழமையான தலைப்பண்பாடு, வரலாறு தொன்மங்கள் போன்றன நிலை பெற்றிருந்ததாகவும் பன்னூற்றாண்டு கூர் தலான வளர்ச்சிப் பயனாக மனதில் எண்ணியதை தொலை உள்ளவர் உணரச் செய்யும் ஆற்றலை லெமுரியர் பெற்றிருந்தனர் (குமரிக்கண்டம்) என்றும் இக்கால கட்டம் இன்றைக்கு 40000 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் குறிப்பிடுகின்றனர்.

பென்சர் வெல்சுவும் அவரது தலைமையிலான அறிஞர் குழுவும் முதன் மாந்தன் பிறப்பிடம் லெமூரியா என்றும் அது கிட்டத்தட்ட அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவையாவும் கேட்கும் போதும் வாசிக்கும் போதும் மனதிற்கு இன்பமாக இருக்கிறது.

உலகில் முதல் மாந்தன் தமிழன் என்று அறியப்படும் போது அது எவ்வளவு மகிழ்ச்சியையும் பெருமையையும் ஏற்படுத்துகிறது. இன்று கூட அதன் உண்மையை உணர்த்தி இறுமாப்பெய்தி தலை நிமர்ந்து நடக்க நமது ஆட்சியில் ஒரு நாடும் இல்லை என்பது வேதனைக்குறியதே.

இதே மூரியாவின் அறிவுச் செல்வத்தை கடலுக்குள் மூழ்கவிடாது நல்லூரின் பயனாக சிறு குழந்தைகளாக நின்று காப்

www.tamilarangam.net

பாற்றி வேறு நிலப்பரப்பிற்கு எடுத்துச் சென்றுள்ளனர் அறிவுச் செல்வங்கள் பளிங்குகளில் பொறிக்கப்பட்டதான வரலாற்றை தமிழிலக்கியங்களில் காணமுடிகிறது.

விலைமதிப்பற்ற அந்த அறிவுச் செல்வத்தை தமிழர்களிடமிருந்து அபகரித்தச் சென்ற ஆரியர் பிற்காலத்தில் அதனை தங்களுடைய கண்டுபிடிப்பாகவும் தங்கள் ஞானத்தின் வாயிலாக தவமிருந்து பெற்றதாகவும் கட்டுக்கதைகளையும் மூடக்கதைகளையும் சொல்லி மானிடத்தை ஏமாற்றி ஆரியர் உயர் விலை அடைந்தனர் என்பதே வரலாற்றுச் செய்தியாக இப்போது படிந்து கிடக்கிறது.

லெமிரியா கடல் கொண்டது இரண்டு மூன்று கட்டங்களாக நிகழ்ந்துள்ளது. தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா என்று பிரிந்து போன போது அங்கும் தமிழர்கள் பிரியநேரிட்டது. இன்றும் அந்தப்பழங்குடி மக்கள் பேசுவது தமிழோடு தொடர்புடைய பழங்குடி மொழிகளே ஆகும். ஆயினும் ஏற்கனவே பஃறுளியாறு குமரியாறு போன்ற வடிநிலங்களில் இருந்தோர் பாண்டி நாட்டுக்குள் புகுந்ததால் தமிழைக் காப்பாற்ற முடிந்தது.

மூன்றாம் கட்ட கடல் கோள் நிகழ்ந்த போது இந்தியாவில் இருந்து இலங்கை இரண்டாகப் பிரிந்து ஒருக்கால் அரபுக் கடலும் இன்னொருக்கால் வங்கக்கடலும் தோன்றியது வடக்கே இமயமலை மேலெழுந்தது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழ் படிப்படியாகப் பிரிந்து பல மொழிகளாக பிரிந்து உலகம் பூராகவும் பிரிந்து வாழ்கிறது என்று மொழியியலாளர் காட்ட முற்படுகின்றனர். இந்நிலையில் வடமொழியியலாளர் சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் தோன்றியது எனக் காட்ட முற்படுவதுவே வேடிக்கையானதும் அறியாமையனதுமாகும்.

கல்வியும் இல்லை, கலையும் இல்லை, மொழியும் இல்லை, எழுத்தும் இல்லை, இலக்கியமும் இல்லை என்று சொல்லப்பட்ட ஒரு நாடோடிக் கூட்டம் ஆசியாவின் மேற்கில் இருந்து (நாவலர் தீவு) இந்தியாவின் முன் நுழைந்தது.

அப்போது இந்தியா முழுவதும் தமிழர்கள் வியாபித்து இருந்தனர் என்பது வரலாற்றில் காணக்கூடியதாக பரவிக்கிடக்கிறது.

குமரியில் இருந்து தமிழ் வடக்கே செல்ல அது திராவிடமானது அது மேலும் செல்ல செல்ல அது திரிந்து பிராகிருதமானது அதுவே ஆரியக் கலப்பு ஏற்பட்டு

«

மாந்தன் முதன்முதல் பேசியமொழி தமிழேயாதல் வேண்டும் என 1931 இல் பாவாணர் குறிப்பிட்டார். இது குறித்த ஆய்வுகள் அறிவியல் அறிஞர்களால் தொடங்கப்பட்டுள்ளது. 2002 இல் இயற்கை (Nature) என்னும் உலகப் புகழ் மிக்க அறிவியல் ஏட்டில் மாந்தன் மொழிபேசும் திறன் உருவாக காரணியமாகவுள்ள மரபணு பற்றி ஜெர்மனி அறிவியலறிஞர் 'வால்பகாங்கு ஈனார்ட்' அவர்களால் கண்டறியப்பட்ட செய்தி உலகின் கவனத்தை ஈர்த்தது.

»

சமஸ்கிருதமாக மாறியது என மொழியியல் அறிஞர்கள் பாவாணர் முனைவர் மதிவாணன் போன்றோர் குறிப்பிடுகின்றனர்.

அடிப்படையும் முதன்மையுமான தென் சொற்களெல்லாம் (தமிழ்) வடசொல் திரிபாகக் காட்டப்பட்டு (சம்ஸ்கிருதம்) தமிழ் சொற்களை வடமொழி சொற்கள் என நியாயம் கற்பிக்கப்பட்டது ஆயிரக்கணக்கான வேண்டா அயற் சொற்கள் நிலைபெற்றன அவற்றில் இந்தி முக்கிய இடத்தைப் பிடித்தது அதைப் பார்த்தால் தமிழ் வடமொழியின் கிளை என்று எண்ணத் தோன்றும் என்பார் பாவாணர்.

சம்ஸ்கிருதம் இந்திய மொழிக்கெல்லாம் தாய் என்று வடமொழியாளர் உரைப்பது எந்த வகையிலும் பொருந்தாது என்று கூறியே தமிழ் அறிஞர்கள் வாதிட்டு வந்துள்ளார்கள் இந்திய மொழிகளெல்லாவதற்கு மூலமும் வேரும் தமிழே என்பதை நிறுவ முட்பட்டுள்ளனர்.

சமஸ்கிருதம் (வடமொழி) தமிழை அடிப்படையாகக் கொண்ட கலவை நடைமுறை கொண்ட மொழி அது மனிதர்கள் அன்றாடம் பேசக்கூடிய மொழியல்ல அது பேச்சு வழக்கில் புகக் கூடிய வடிவைக் கொண்டிருக்காததால் அது வெகுவிரைவில் அழிந்து போனது ஆங்கிலேயர் ஆட்சியில் வடமொழியாளர் செல்வாக்குப் பெற்றிருந்ததால் அதனை ஒரு வேத மொழியாக காட்ட முற்பட்டனர். பிறநாட்டு மொழியியலாளர் இந்திய மொழிகளை ஆய்வு செய்ய முற்பட்ட போது அவர்கள் வடமொழியைப் பரிந்துரைத்தது அதனை இந்திய மொழிகளுக்கு தாயாகக் காட்ட முற்பட்டனர்.

உலகில் இன்று தமிழ் பல நாடுகளில் உச்சரிக்கப்படும் போதும் அதற்கான கல்வி மொழியாகவோ அல்லது ஆட்சி மொழியாக இல்லாதிருப்பது மொழிவளர்ச்சிக்கு தடையாக உள்ளது. உலகில் 60 நாடுகளில் தமிழர் வாழ்கின்ற போதும் அவர்களால் தமிழில் கடமையாற்ற முடியவில்லை ஏன் இலங்கையிலோ அல்லது இந்தியாவோ அரச அலுவல்களில் தமிழில் பணிபுரிய ஆட்கள் இல்லை.

இது 6 கோடி தமிழ் மக்கள் வாழும் தமிழ் நாட்டில் கூட முடியாத காரியம் இது மோசமான தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

இன்று இந்தியாவின் பொது மொழியாகவும் தேசிய மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ள 'இந்திய மொழிக்கு அடிப்படை இன்றும் தமிழாயிருப்பதாலும் மேலை ஆரியரின் மொழிகளிலும் (ஐரோப்பா) தமிழ் பெரிதும் சிறிதுமாகக் கலந்திருப்பதாலும் வடஇந்திய பிராந்தியங்களும் மூவினத் திராவிடங்களுள் ஏன், நான் வடதிராவிடத்தின் திரிபுகளின் கூறே இந்திமொழி என்று மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

சமஸ்கிருதத்தில் ஐம்பிராதிருதமும் கலந்திருப்பினும் நேர்வழியாகவும் அல்வழியாகவும் ஐந்தில் இருபகுதி கலந்திருப்பது தமிழே என்பது பாவாணிரன் கூற்று இந்நிலையில் கோடிக்கணக்கான திராவிட மக்கள் வாழும் தென்நாட்டில் கூட தமிழோ அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு தொடர்புடைய திராவிட மொழியோ அங்கீகாரமில்லாத மொழியாக உள்ளது. அரசியல் வாதிகள் வெறுமனே வாய்ப்பந்தல் வீச்சில் மக்களை வழி நடாத்துவதோடு சரி அந்த மொழிக்குறித்த விழிப்புணர்வு தமிழ் நாட்டிலும் இல்லை.

ஆயினும், தமிழ் உலகம் பூராகவும் சிதறுண்டு இருப்பதை யார் காப்பார். இன்றளவும் தென் கிழக்காசிய நாடுகளில் படையெடுத்தவரும், குடியேறியவரும், ஆண்டவரும் தமிழரே என்பது வரலாற்றில் நிறையக் கிடக்கிறது. தென்கிழக்காசிய மொழிகளில் தமிழின் செல்வாக்கு மிகுதியாகக் கிடக்கிறது.

வட இந்திய மொழிகளுக்கு தமிழே மூலமென்று நிறுவிய முனைவர் மதிவாணன் 'ஆர்வாட்' பல்கலைக்கழகத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலக முதன் மொழியை கண்டுபிடிக்க கையாளவேண்டிய நெறிமுறை பற்றி (Methoddgy) ஆய்வறிக்கை அளித்துள்ளார் இவரின் அறிவுழைப்பை தமிழகம் போற்றி புகழவில்லை இவரின் கருத்துக்களை தமிழ்ப்பகைவர் வசைபாடி நூலெ முதுகிறார்கள்.

இது போன்று காட்டிக் கொடுத்து பிழைப்பு தேடும் தமிழ்ப்பகைவர்களே தான் தமிழும் தமிழரும் அவர்களது வரலாறும் அழிந்து போகக் காரணமாகி விடுகிறது.


மாந்தன் முதன்முதல் பேசியமொழி தமிழேயாதல் வேண்டும் என 1931 இல் பாவாணர் குறிப்பிட்டார். இது குறித்த ஆய்வுகள் அறிவியல் அறிஞர்களால் தொடங்கப்பட்டுள்ளது 2002 இல் இயற்கை (Nature) என்னும் உலகப் புகழ் மிக்க அறிவியல் ஏட்டில் மாந்தன் மொழிபேசும் திறன் உருவாக காரணியமாகவுள்ள மரபணு பற்றி ஜெர்மனி அறிவியலறிஞர் லால்பகாங்கு ஈனார்ட் அவர்களால் கண்டறியப்பட்ட செய்தி உலகின் கவனத்தை ஈர்த்தது.

இன்று உயிரியல் அறிஞர்கள் (Biologists) எதிர் நோக்கம் பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டுள்ளனர்.

தொடக்கத்தில் ஒரே மொழி இருக்க வேண்டும் காலப்போக்கில் ஒரு சில மொழிகள் அதினின்று வேறுபட்டு வேற்று மொழியாக மாறியிருக்கக் கூடும் என்பதும் இன்று கணிதக் கருவிகளை துணைக்கு அழைத்துக் கொண்டு மாந்தன் பேசும் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளை ஒரு மரபாக வைத்து எந்த மரபணுவில் இருந்து எந்தக் கிளை மொழிகள் கிளைந்தன என்று காட்ட மொழியியல் அறிஞர்கள் முட்பட்டுள்ளனர். இந்த சந்தர்ப்பங்களை தமிழறிஞர்கள் தவறவிடாது தமிழாய்வு காக்க வேண்டும்.

இந்திய அரச கவியராக இருந்த அண்ணாமலைச் செட்டியார் தியாகராஜர் கீர்த்தனைகளை தமிழ்நாட்டு இசையரங்கில் இருந்து விலகவேண்டும் என்று வாதிட்டார் அங்கு காரணம் கீர்த்தனைகளில் தெலுங்குடன் அளவுக்கு அதிகமான வடமொழிச் சொற்கள் கலந்திருப்பதே என யாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளலாம் ஆயினும் செட்டியாரின் கூற்றை எத்தனை அறிவாளிகள் கவனத்தில் எடுத்து தமிழ் இசைத் துறைக்கு புத்துயிர் அளித்தார்கள் என்பது தோல்விக்குரியதே.

உலகின் முதன்மொழி தமிழ் என்ற கருத்துருவாக்கம் இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் மாகறல் கார்த்திகேயனாலும், 1920 களில் அறிஞர் கா.சுப்பிரமணியம்



கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் அகழ்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்கால மண் உருவச்சிற்பம்.

« தொடக்கத்தில் ஒரே மொழி இருக்கவேண்டும் காலப்போக்கில் ஒரு சில மொழிகள் அதினின்று வேறுபட்டு வேற்று மொழியாக மாறியிருக்கக் கூடும் என்பதும் இன்று கணிதக் கருவிகளை துணைக்கு அழைத்துக் கொண்டு மாந்தன் பேசும் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளை ஒரு மரபாக வைத்து எந்த மரபணுவில் இருந்து எந்தக் கிளை மொழிகள் கிழைந்தன என்று காட்ட மொழியியல் அறிஞர்கள் முட்பட்டுள்ளனர் இந்த சந்தர்ப்பங்களை தமிழறிஞர்கள் தவறவிடாது தமிழாய்வு காக்க வேண்டும். »

1930 - 1940 இடைப்பட்ட காலத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசராலும், 1931 முதல் 1968 வரை மொழி ஞாயிறு தேவநேயப் பாவனாராலும் முன்மொழியப்பட்டு அது இன்று வலுப்பெற்று வருகிறது அது இன்று மொழி அறிஞர் முனைவர் மதிவாணன் உள்ளிட்ட அறிஞர்களால் வழிமொழியப்பட்டு பலராரும் உற்றுநோக்கப்படுகிறது. பண்டை தமிழர் நிலவை 'உவா' என்றும் உவமதி என்றும் அழைத்துள்ளனர் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் குமரிக்கண்டத்தில் இருந்து அவுஸ்ரேலியா சென்ற குடியேறிய தமிழர்கள் நிலவு மாதம் போன்ற தமிழ் சொற்களை குறிப்பிடுவதற்கு 'உவா' என்ற பழந்தமிழ் சொல்லையே இன்றும் வழங்கி வருகின்றனர். அவுஸ்திரேலிய பழங்குடி மக்கள் தமிழரே என்று முனைவர் மதிவாணர் போன்றோர் நிறுவிவருகின்றனர். அதேவேளை உவா என்று மேற்காசியாவில் பல இடங்களில் 'உ' என்று எழுத மறந்து 'வாவு' என்று திரிந்து வழங்கி வருகிறது.

கண் என்ற சொல்லுக்கு மட்டும் 30 க்கு மேற்பட்ட சொற்கள் உள்ளன 'புலம்' என்பது கண்ணைக்குறிக்கும் பழம் தமிழ்ச் சொல் அவுஸ்திரேலியப் பழந்தமிழ் குடி மக்கள் இன்னும் கண் என்பதற்கு குலம் என்ற சொல்லையே பயன்படுத்துகிறார்கள்.

செவ்விந்தியர்கள் அம்மா என்ற சொல்லை அன்னை என்றே அழைக்கின்றனர் என பொள்ளாச்சி மகாலிங்கம் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

இறைச்சி, நிறங்கள், பூ போன்ற தமிழ்ச் சொற்களுக்கு சீனமொழியில் 'றச்சி', 'ரங்', 'ஹி' என்றும் வழங்குகின்றன. சீன மொழியில் கண் என்ற தமிழ்ச் சொல் கண் எனவும் கண் என்பது கண் என்றே சீன மொழியியல் வழக்கத்தில் இருக்கின்றன. சீனமொழியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் உள்ளன. தமிழ் முதிரையை 'மா' என்றும் அழைக்கிறோம் தாய்லாந்து சீன மொழியிலும் 'மா' என்று இப்போதும் குதிரையை அழைக்கிறார்கள் இவ்வாறு உலகம் பூராகவும் வியாபித்து நிற்கும் தமிழை அறிவதற்கும் தமிழை வளர்ப்பதற்கு ஒவ்வொரு தமிழனும் ஆர்வம் காட்ட வேண்டும். தமிழ் என்றும் இளமையானது, அழியாதது. பல அறிவியல் சொற்கள் பிறந்த போதும் அதற்கு ஈடான சொற்கள் தமிழில் இருப்பதும் தமிழின் உயர்வை வெளிப்படுத்துகிறது.

தமிழில் புதிய சொற்களை உலகியல் மாற்றத்திற்கு ஏற்றவாறு உருவாக்கி தமிழை வாழவைப்போம்.

■ கலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யோ.செ.யோகி

# காலணிகள், காலணிகள், காலணிகள்...

அமெரிக்க உள்நாட்டுப் போரில் பங்குகொண்ட கொன்பிடரேசி படையினரின் இயக்சன் போன்ற ஜெனரல்களுக்கு ஒரு சுடுகலனைப் போல் ஒரு சோடிகாலணியும் முக்கியமானது என்பது நன்கு தெரியும் சில வரலாற்றாசிரியர் அமெரிக்க உள்நாட்டுப் போரில் கொன்படரேசிப் படையினரின் தோல்விக்கான முக்கிய காரணிகளில் ஒன்று அவர்களுக்குப் போதிய அளவில் காலணிகள் வழங்கப்படாமையே எனச் சொல்லியுள்ளனர். கொன்பிடரேசியில் இணைந்திருந்த மற்றைய நாடுகளின் படையினரிடம் காலணிகள், கம்பளிகள், சீருடைகள் பற்றாது இருந்த வேளை அதில் இருந்த ஒரு நாடான வடகரோலினாவின் ஆளுனர் 92000 சீருடைகள் பெருமளவிலான கம்பளிகள் காலணித் தோல்களைச் சேமிப்பில் வைத்திருந்தார் என்பது வியப்புத் தரும் ஒருவிடயமாகும் வட கரோலினாவில் 42 நெசவுத் தொழிற்சாலைகள் கொண்பிடரேசியில் இணைந்திருந்த மற்றைய நாடுகள் உற்பத்தி செய்தவற்றிலும் இருமடங்கு உற்பத்தி செய்த போதும் அது அதனது படையினரைத் தவிர மற்றைய படையினருக்கு மேலதிக உற்பத்தியை தருவது முறையானது எனக் கருதவில்லை சைலோச்சமர் (battle Of Shiloh) 1862 இல் இடம் பெற்ற வேளையில் கொன்பிடரேசியன் 60 வீத படையினர் யூனியன் படையினரிடம் கைப்பற்றிய சீருடைகள் தலையணிகள் மேலங்கிகள் ஆகியவற்றை அணிந்திருந்தனர் இதன் விளைவாகப் பிழையாக அடையாளம் காணப்பட்டு இழப்புக்களை எதிர்கொள்ளும் இடர் வரவுகளுக்குள்ளானார்கள்.

ஆனால் இவற்றுக்குப் போதிய காலணிகள் இல்லாமயே பெரியளவில் சிக்கலை ஏற்படுத்தியது கொண்பிடரேசியின் தளபதி இரோபேட் லீ - இன் மூலோபாயமானது அவரது தளபதிகளான இலக்சன், கில், லோங்சுறீற்று ஆகியோரின் விரைவான பக்கவாட்டு அணி பெயர்ச்சியிலேயே (marches) தங்கியிருந்தது இது விரைவாக காலணிககைளைச் சீர்கெடச் செய்தது 1861 இடம்பெற்ற முதலாவது புல்ரன சமரின் போதே ஐரோப்பாவிலிருந்து புதிய காலணிகளைப் பெற முயற்சி எடுக்கப்பட்ட போதும் ஒவ்வொரு மாதமும் 40,000 சோடிக் காலணிகளுக்குப் பற்றாமை நிலவயது கொன்பிடரேசிப் படையினர் பல ரக காலணிகள் இல்லாமையினால் பின்னால் விட்டுச் செல்ல வேண்டியிருந்தது. அல்லது சமரில் இருந்து தவிர்க்க வேண்டியிருந்தது அன்ரீரம்பில் 1862 இல் காலணிகளுக்கு ஏற்பட்ட பெரிய அளவிலான பற்றாமையினால் இதனால் போதிய படையினர் சமரில் கலந்து கொள்ளாமையால் லீ அங்கு தோல்வியுற்றார் எனக்கூறப்படுகின்றது. இதனால் படையிலிருந்து 2000 பேர் அளவில் எடுக்கப்பட்டு காலணிகள் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். இருந்த போதும் 1863 இல் கெற்றிசுபேர்க்குச் சமரில் போதிய காலணிகள் இல்லாமையால் பல கொன்பிடரேசிப் படையினர் கலந்து கொள்ளவில்லை இரென்னீசில் கூட்டின் தலைமையின் கீழிருந்த படையினரின் 25 வீதமானோர் வெறும் காலுடன் உறைகாலநிலை, பனித்திரள் ஆலங்கட்டி மழையூடாக நடந்து செல்லும் நிலைக்காலானர்கள் உறங்கும் போதும் காலணிகளோடு இருக்க வேண்டும் இல்லாது போனால் அவை களவாடப்பட்டு விடும் எனும் நிலையளவுக்கு காலணிகளுக்குப் பற்றாமை நிலவியது. இதே வேளை யூனியன் படையினரைப் பொறுத்தவரை காலணிகள் பற்றாமை இல்லாத போதும் அவர்கள் அவற்றின் தரத்தால் பாதிப்புக்குள்ளானார்கள். அமெரிக்காவின் வடபகுதியை சேர்ந்த காலணித் தயாரிப்பாளர் இரண்டு கால்களுக்கும் ஒரே சீரான வடிவில் காலணிகளைத் தயாரித்தனர். இது காற்புண்களைத் தோற்றுவித்ததுடன் படையினரின் விலகலுக்கும் வழிவகுத்தது.

> சில வரலாற்றாசிரியர் அமெரிக்க உள்நாட்டுப் போரில் கொன்படரேசிப் படையினரின் தோல்விக்கான முக்கிய காரணிகளில் ஒன்று அவர்களுக்குப் போதிய அளவில் காலணிகள் வழங்கப்படாமையே எனச் சொல்லியுள்ளனர்.

கிரிமியன் போரில் (Crimean war) பிரித்தானியப் படைக்கு காலணிகள் வழங்கியதில் பெரும் அவதூறு எழுந்தது. அங்கு நிலவிய குளிர்காரணமாக படையினர் இரு காலுறைகளை அணிந்தனர். ஈரலிப்பான காலநிலை படையினரின் கால்களை வீங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரித்தானிய படையினர் தொடக்கத்தில் கொல்லப்பட்ட படையினரிடமிருந்து அவர்களது நட்புப் படையினரான துருக்கியர் உடைமைகளை எடுப்பதை வெறுப்போடு பார்த்தனர் ஆனால் பின்பு அவர்களது சீருடைகளும் சீர்கெடத் தொடங்கிய போது தாமும் அவ்வாறே செய்தனர்

கச் செய்தது. அவர்களால் இந்த நிலையில் அவர்களுக்கு என வழங்கப்பட்ட காலணிகளை அணியமுடியாதிருந்தது. காலணி வழங்களை மேற்கொண்டோர் படையினருக்குச் சற்று அளவு பெரிதாகக் காலணிகளை வழங்கும் முயற்சியைச் செய்யாது ஒரு குறிப்பிட்ட அளவைக் கொண்ட காலணிகளையே வழங்கினர் இதனால் பெரும்பாலான படையினர் அவர்களது கால் அளவிலும் சிறிய காலணிகளை துன்பத்தோடு அணிய வேண்டியிருந்து பிரித்தானிய படையினர் தொடக்கத்தில் கொல்லப்பட்ட படையினரிடமிருந்து அவர்களது நட்புப் படையினரான துருக்கியர் உடைமைகளை எடுப்பதை வெறுப்போடு பார்த்தனர் ஆனால் பின்பு அவர்களது சீருடைகளும் சீர்கெடத் தொடங்கிய போது தாமும் அவ்வாறே செய்தனர். கப்பலின் நடுத்தர பணியாளரான வூட்டு (பின்பு சேர் ஈ லைன்ன்) ஒரு கடற்படை வீரனிடம் இடுகாட்டிலிருந்து சில உருசியக் காலணிகளை எடுத்து வர பத்து சில்லிங் பணம் கொடுத்தார். அவர் மேற்கொண்ட காலணிகள் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது பல பிரித்தானியப் படை மேலாளர்கள் பிரித்தானியக் காலணிகளைக் காட்டிலும் கைப்பற்றப்பட்ட உருசியக் காலணிகளையே விரும்பினர். பிரித்தானியக் காலணிகள் தரமற்றவையாக இருந்தன ஒரு கிழமையின் பின்பு அவற்றின் அடிப்பகுதி கழன்று விடும் நிலையே பொதுவாகக் காணப்பட்டது. பிரித்தானிய ஒப்பந்தகாரர் காலணிகளுக்கும் செலவைக் குறைக்க முயன்றதன் விரளைவாகவே ஈரம், சேறு, உள்ள பகுதிகளில் விளைபயனுடன் பயன்படுத்த முடியாத காலணிகள் உருவாக்கப்பட்டன பெப்ரவரி முதலாம் நாள் பரந்த கறுப்பு நிறச்சேற்று நிலப்பரப்பில் அணிவகுப்பில் ஈடுபட்ட 55 ஆவது ரெயிமென்ட் படையினர் வண்டற் சேற்றில் புதையுண்டனர். அவர்கள் சேற்றிலிருந்து காலை இழுத்து எடுத்தபோது அவர்களின் காலணிகளின் அடிப்பாகங்கள் கழன்று சேற்றுள் புதையுண்டன. இதனை அடுத்து எல்லாப்படையினரும் காலணிகளை கழற்றி எறிந்து விட்டு முன்னிலைக்கு காலுறையுடன் மட்டும் அணிபெயர்ந்து சென்றனர்.

1914 போதிய காலணிகள் அற்ற நிலையில் உருசியப் படையினர் இலையுதிர் காலச் சேற்றினூடாக வெறுங்கால்களுடன் அணிபெயர்ந்தனர் அல்லது மரத்திலான காலணிகளை அணிந்து சென்றனர் இரண்டாம் உலகப் போரின் போதும் படையினரின் காலணிகள் குறித்த சிக்கல் நிறைவு தரும் வகையில் தீர்க்கப்பட்டிருந்தது. செருமனி 1941 இல் உருசியா மீது பார்ப்பரோசா நடவடிக்கை எனும் பெயரில் வன்கவரைத் தொடங்கிய போது செருமன் படையுடன் சேர்ந்து செயற்பட்ட இத்தாலியப் படைப் பிரிவு தாளட்டையிலான (card board) காலணிகளை அணிந்திருந்தது இத்தாலியில் விலையுயர்ந்த தோல்க் காலணிகள் விற்பனையில் இருந்த போதும் அவற்றை உருசிய குளிர்கால நிலைக்குபயன்படுத்த முடியாதிருந்தது இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட செருமன் படையினர் அவர்களின் காலணியிலும் உருசியப் கடையினரின் காலணிகள் தரமானவையாக இருப்பதைக் கண்டனர். கீழ்க்காணும் துணுக்கானது செருமனியர் எவ்வளவு தூரம் மோசமான நிலையில் இருந்தனர் என்பதயும் அவர்கள் அவர்களுக்குத் தேவையானவற்றை எவ்வாறு பெற்றனர் என்பதையும் எடுத்துக் காட்டும்.

இப்போது எமது படையினருக்குக் கூடியளவு குளிர்கால உடைகளை வழங்கும் வாய்ப்புள்ளது.

கயெனெக்கு இறந்த 73 உருனியப் படையினரின் உடல்களைச் சிற்றூருக்கு எடுத்துச் சென்று அவற்றிலிருக்கும் ஒட்டுக் கம்பளம் வைத்துத் தைக்கப்பட்ட காலணிகளையும் குளிர்கால உடைகளையும் கழட்டுமாறு ஆணையிட்டார்.

ஆனால் அந்த உடல்கள் உடைந்து விறைத்திருந்தன விலைமதிப்பற்ற காலணிகள் உருசியப் படையினரின் கால்களோடு உறைந்து கிடந்தன.

"அவர்களின் கால்களை வெட்டுங்கள்" என கயெனெக்கு ஆணையிட்டார்.

படையினர் இறந்திருந்த உருசியரின் முழங்காலுக்குக் கீழுள்ள பகுதியை வெட்டினர். காலணிகளோடு இருந்த கால்களை சூட்டுக்குள் போட்டனர். பத்து அல்லது பதினைந்து நிமிடத்துள் விலைமதிப்பற்ற காலணிகளைக் கழற்றி எடுக்கமளவுக்கு அந்த கால்களின் விறைப்புத் தளர்ந்திருந்தது.

## நம்பிக்கை ஒளி

ஸ்ரீ துஸ்யா

நான் பறக்கத் துடிக்கின்றேன்
என்னால் முடியவில்லை

என் கைகளும் கால்களும்
பிணைக்கப்பட்டு
சிரசிலே முள் முடி தரிக்க
நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்


என் முழு சக்தியையும் திரட்டி
நான் பறக்கத் துடிக்கின்றேன்
என்னால் முடியவில்லை

ஒடுக்குமுறைகள் - என்
குரல்வளையை நெரிக்கின்றன
மூட நம்பிக்கைகளோடு

அவை
என் மேனி மீது
பாம்புகளாய் நெளிகின்றன

சாக்கடை நாற்றத்தை விஞ்சிய
துர்வாடை
மூச்சு முட்ட முனைகின்றது

ஆனாலும் என்னுள் முகை கொண்டுள்ள
அசைக்கவியலாத ஒளி பொருந்திய
நம்பிக்கை மீது மட்டும்
ஆணி அறைந்திட
எவற்றாலும் முடியவில்லை.



www.tamilarangam.net



# உயிரம்புகள்

மண்மீட்புப் போராட்டத்தில் உயிராயுதமாக விளங்கும் கரும்புலிகள் தமிழீழ விடுதலைப்போரில் எதிரிகளின் தடைகளை உடைத்து விடுதலைப் பயிரை வளர்த்து வருவது கண்டு உலகம் மெய்சிலிர்க்கிறது. அதுவே படத்தின் கதை.

கரும்புலிகளின் ஒவ்வொரு வரலாறும் எமது மக்களுக்கு விடுதலை உணர்வை மேலோங்கச் செய்யும்மென்பது யதார்த்த நிலையாகும். என்பதை வெளிக்காட்டும் எண்ணம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அந்தவகையில் தாங்கள் எடுத்துக் கொண்ட இலக்கை எய்தியிருக்கிறார்கள் என்கிறேன்.

எதிரியின் பிடிக்குள் சிக்குண்டு போன 250 போராளிகளை வெற்றிகரமாக மீட்டு வந்த கரும்புலிகள் வீரத்தை வெளிக்காட்டுகிறது உயிரம்புகள் திரைப்படம்.

ஈழத்து மண் வாசனையோடு இதுவரை வெளிவந்த திரைப்படங்களிலிருந்து சற்று வித்தியாசமாக உருவாக்கலில் 'உயிரம்புகள்' தடம் பதித்துள்ளது.

முதல் முயற்சியிலேயே பெரு வெற்றியை சுவீகரித்துக் கொண்டது. 'ஊடகஇல்லம்' வலுவான கதையைத் தேர்வு செய்து விடுதலைப் போராட்டத் தளநிலையில் எவ்விதப் பாதிப்புமின்றி தம் கண் முன்னே ஒரு தாக்குதல் சம்பவத்தை வீரப்பிரதாபத்தோடு காட்டியுள்ளனர். பாராட்டு.

வீடியோ திரைப்பட திரைப்படவுலகில் நுழையும் 'ஊடகஇல்லம்' தாங்கள் சாதாரண மாணவர்களல்ல ஜாம்பவான்கள் எனக்காட்டியுள்ளனர். இது யாரும் துணியாத ஒரு புது முயற்சி.

சிறந்த கதையை வடிவமைத்த குழுவிற்கு முதலில் பாராட்ட வேண்டும் ஒரு வலுவான கதையை எமது மண்ணின் வாசனையோடு இயக்கிய அல்பேட் பவுலஸ், கரும்புலிகள் அணியில் இடம் பெற்ற சசி, நிலவன், கீதன் ஆகிய மூவருக்கும் இதுவே முதல்படம். இது இவர்களுக்கு அறிமுகமாக இருந்தாலும். மிகச் சிறப்பாக நடிப்பாற்றலை வெளிப்படுத்தி இயக்குனரின் எண்ணங்களை தங்கள் நடிப்பால் மெருகேற்றிய நடிகர்களையும் பாராட்ட வேண்டும்.

படத்தில் குறை சொல்லக் கூடிய எந்தப் பக்கத்தையும் காண முடியவில்லை. எமது மண்ணிலும் இப்படியான படங்களை எடுக்க முடியுமா? என மூக்கில் விரலை வைக்க தோன்றுகிறது.

படம் தொடங்குவதிலிருந்து முடியும் வரை விறுவிறுப்புக்கு பஞ்சமில்லை. படத்தின் உச்சக் கட்டக்காட்சிகள் ஆங்கிலப் படங்களுக்கு ஒன்றும் குறைந்தவையல்ல. படம் முடியும் வரை எழுந்து செல்ல மனமில்லாமல் இருந்து முழுப்படத்தையும் பார்த்தே எழுந்தோம். அது எல்லோர் மனங்களையும் கட்டிப் போட்டு கதை சொல்லியது.

இது ஒரு புதிய முயற்சியான போதும் இது ஒருவித தாக்கத்தை எமது மண்ணின் திரைப்படத்துறைக்குள் ஏற்படுத்திவிட்டது.

இராணுவ ஆக்கிரமிற்பிற்குள் சிக்குண்ட அந்த 250 போராளிகளை ஆபத்தின்றி மீட்க ஒரே வழி கரும்புலித்தாக்குதல் நடத்துவதுதான் என கட்டளைப்பீடம் முடிவெடுத்து மூன்று பேர் கொண்ட கரும்புலிகள் அணியை தேர்வு செய்வது, அணியில் இடம்பெற ஒரு பெண் கரும்புலி முயற்சிப்பது, அதில் இடம் பெற ஒவ்வொரு கரும்புலிகளும் ஆவலாக இருப்பது போன்ற காட்சிகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இயல்பாகவே நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. அது அனைவர் மனங்களிலும் ஆழமான ஓர் உணர்வை ஏற்படுத்தி விட்டது.

அந்த கரும்புலிகள் அணி 25 கிலோ மீற்றர் காட்டுப்பாதையைக் கடப்பது வழியில் இடம்பெறும் சுவையான சம்பவங்கள் பின்னணியில் படத்திற்கு விறுவிறுப்பைக் கூட்டுகிறது.

நடந்தே காலையில் புறப்படும் அணி குறிப்பிட்ட இலக்கை நண்பகல் 12 மணிக்குள் அடைந்து விட வேண்டும்.

அவர்கள் திட்டமிட்டவாறு சென்று அந்த ஆட்லறி முகாம் தளத்தை தாக்கி அழிக்கிறார்கள்.

எமது மண்ணின் வீரம், கொடை, ஈகம் என பல அற்புதமான வரலாற்றை உலகம் எண்ணி வியப்பும், ஆர்வமும் கொண்டுள்ள நிலையில் இத்திரைப்படம் வெளிவந்துள்ளது. எம் மண்மீது இது புதிய பார்வையை செலுத்தும் ஒரு குறியீடாக 'உயிரம்புகள்' படத்தை சொல்ல வேண்டும்.

படத்தின் முக்கிய பாத்திரம் தமிழ்ப்படங்கள் போன்று சொல்ல வேண்டுமானால் படத்தின் கதாநாயகர்கள் மூவர் எனலாம். படத்தின் உயிர் நாடியாக நிலவன், கீதன், சசி என்போர் இவர்களது நடிப்பு மிக அற்புதம். அனுபவப்பட்ட நடிகர்கள் போன்று நடித்து மனங்களில் வாழ்கின்றார்கள்.

அது போன்றே கணேஸ் மாமாவை குறிப்பிட வேண்டும். தனது பண்பட்ட நடிப்பால் அனைவரையும் கவர்ந்து விடுகிறார். அவரது பாத்திரம் போராளிகளுக்கு உதவுவது. எல்லோர் மனங்களிலும் குடிபுகுந்து விட்டார்.

> எமது மண்ணின் வீரம், கொடை, ஈகம் என பல அற்புதமான வரலாற்றை உலகம் எண்ணி வியப்பும், ஆர்வமும் கொண்டுள்ள நிலையில் இத்திரைப்படம் வெளிவந்துள்ளது. எம் மண்மீது இது புதிய பார்வையை செலுத்தும் ஒரு குறியீடாக 'உயிரம்புகள்' படத்தை சொல்ல வேண்டும்

படத்தில் வரும் மற்றைய கலைஞர்கள், நடிகர்கள் யாவரும் மிகச்சிறப்பாக தங்கள் பாத்திரங்களை சிறப்பாகச் செய்துள்ளனர்.

இசைப்பிரியனின் இசை; படம் பூராகவும் விறுவிறுப்பைக் கூட்டியது. அல்பேட் பவுலஸ் படத்தில் பல துறைகளில் தனது கைவண்ணத்தைக் காட்டியுள்ளார். பாடல், படத்தொகுப்பு, ஒளிப்பதிவு, இயக்கம் என கடுமையாக உழைத்திருக்கிறார். அவரது முயற்சி பெரு வெற்றி கிடைத்திருக்கிறது. அவர் சுதந்திரமாக இயக்க பலரும் ஒத்துழைப்பு நல்கியிருப்பது தெரிகிறது.

மொத்தத்தின் ஊடக இல்லத்தின் கூட்டுழைப்பிற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியின் வெளிப்பாடாகவே 'உயிரம்புகள்' படத்தைப் பார்க்கிறோம். தைப்பொங்கல் வெளியீடாக தமிழர் தாயகத்தில் வெளிவந்து தமிழர் உள்ளங்களை மகிழ்வித்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலம் எழுதப்பட்ட வரலாறு

**31.12.1999** அன்றுடன் ஓராயிரம் அல்லது 2000 ஆம் ஆண்டு குறித்து பல வகைப்பட்ட எதிர்வு கூறல்கள் அக்காலத்தில் தெரிவிக்கப்பட்டன. இல்லாமை என்பதைச் சுட்டும் பூச்சியம் தனியே எந்த விதமான பெறுமதியும் அற்றது. 1 இலிருந்து 9 வரையான எண்களைப் போலன்றி 0 இன் பெறுமதியை தெட்டத்தெளிவாகக் குறிப்பிட்டு விட முடியாது. ஆகையால் தான் கணனிகளின் செயற்பாடுகள் குறித்து முன்னாயத்த நடவடிக்கைள் பல முடுக்கி விடப்பட்டன இன்னும் சில மதக் குழுக்களைச் சேர்ந்தவர்களோ உலகம் அழியப் போகிறது உயிர் பிழைக்க வேண்டுமானால் எம்முடன் வாருங்கள் விசேட விண்வெளிக் கூடம் வருகிறது அழைத்துச் செல்லப்படுவீர்கள் என்றெல்லாம் அபத்த மூட்டைகளை அவிழ்த்து விட்டவாறிருந்தனர். இதுவெல்லாம் எதற்காக? நீண்ட காலத்துக்குப் பின்னர் வந்த மூன்று பூச்சியங்களுடன் கூடிய 2000 ஆயிரம் என்ற ஓர் எண்ணிற்கு உலகத்தை அவிழ்த்து விடக்கூடிய சக்தி உண்மையிலேயே இருந்தது.

2000 ஆம் ஆண்டிற்கு அவ்வாறான சக்தி இருந்ததா என்பதற்கு முன்பாக எல்லாவற்றுக்கும் காரணமான 2000 ஆம் ஆண்டு உண்மையிலே எப்போது ஆரம்பிக்காது என்று பார்ப்பது சாலப் பொருத்தம் அல்லவா? எவ்வாறான போதும் கணனி தொடர்பான எச்சரிக்கைகள் நியாயமானவையே ஏனென்றால் தெளிவாக வரையறுக்க முடியாத பூச்சியத்தை அதிலும் இரண்டு எண்களால் வருடத்தை குறிப்பிட்டு வந்த வழக்கத்தின் படி 99இற்கும் அடுத்தாக 2000 என்பது 00ஆகவே இடம் பெறும் பெறுமதி இல்லாத இரண்டு எண்களால் உண்மையிலேயே நிகழவிருக்கும் ஒரு வருடம் குறிப்பிடப்படும் போது கணனியின் மையச்செயலி அதனை எவ்வாறு புரிந்து கொள்ளும் என்பதே அறிவியலின் அன்றைய எச்சரிக்கைக்கு அடிப்படையாக இருந்தது. அதனை அவர்கள் வெற்றிகரமாகக் கையாண்டு விட்டார்களாயினும் அவர்களை பொறுத்தவரையில் ஆண்டினைக் குறிப்பிடும் நடைமுறை தொடர்பான சிக்களையே எதிர்கொண்டிருந்தார்களே தவிர அந்த 2000 என்ற ஆண்டு தன்னளவில் இவ்வுலகிலும் மனிதர்களிலும் செலுத்தக்கூடிய செல்வாக்குச் சம்பந்தப்பட்டதல்ல இங்கு கட்டுரையின் ஆரம்பத்தில் கேட்கப்பட்ட வினாவினை மீண்டும் கேட்டுக் கொள்வோம் 31.12.1999 அன்றுடன் ஓராயிரம் அல்லது மில்லெனியம் கழிந்தது என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

முதலில் இன்று நாம் வழக்கத்திலுள்ள கிறிகோறியன் ஆண்டு முறையின் குறுகிய வரலாற்றினை சற்று நோக்குவது பொருத்தமாக அமையும் 6 ஆம் நூற்றாண்டில்





தமிழர் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சு. ஞானவன்

வாழ்ந்த ரோம மதகுருவான டயோனிசியுஸ் எக்ஸிகுஸ் இனால் பெத்தலேகம் நட்சத்திரத்தின் அடிப்படையில் யேசு கிறிஸ்துவின் தோற்றத்தையொட்டி கணிப்பிடப் பட்ட இன்று உலகெங்கும் நடைமுறையிலுள்ள கிறிகோறியன் வருட நடை முறை 1431 இல் தான் வத்திக்கானிலேயே பாப்பரசர்களின் புழக்கத்திற்கு வந்தது. தொடர்ந்து 1582 ஒக்டோபர் 15 ஆம் திகதி அன்று அக் காலப்பகுதியில் வழக்கத்திலிருந்த மற்றையதொரு நடைமுறையான யூலியன் முறை திருப்பப்பட்டு பாப்பரசர் 13ஆவது கிறிகொறி அவர்களின் அனுசரனையுடன் புதிய ஆண்டு நடைமுறைபடுத்தப்பட்டது. ஆகவே தான் இது கிறிகொறி ஆண்டு வழக்கு என குறிப்பிடப்படுகிறது. தொடர்ந்து காலனித்துவம் காரணமாக உலகெங்கும் இந்த நடைமுறை பரவியது அப்படியானால் 1431 இற்கு முன்னர் கால நகர்வு எவ்வாறுதான் குறிப்பிடப்பட்டு வந்தது என்ற கேள்வி நியாயமானதே. ஒவ்வொரு நாட்டு அரசர்களினதும் ஆட்சிக்காலத்தை ஒட்டியே ஆண்டுகளும் குறிப்பிடப்பட்டு வந்தன. இதனால் முகங்கொடுக்கப்பட வேண்டியிருந்த சிக்கல்கள் இன்றைப்போலன்றி அன்றிருந்த எளிமையான வாழ்க்கைப் போக்கு காரணமாக பாரதூரமாக இருக்கவில்லை தற்போது தமிழர்களாகிய எம்மிடமுள்ள திருவள்ளுவர் நடைமுறையின்படி 2038 ஆம் ஆண்டிலே நாம் வாழ்ந்து வருகின்றோம். சீனர்களுக்கு இப்போது 4784. முஸ்லிம் மக்களைப் பொறுத்த மட்டில் இறைதூதர் முகம்மது தனது சொந்த ஊரான மெக்காவிலிருந்து நீங்கி மெதீனாவிலே அடைக்கலம் கோரும் கி.மு 622 யூலை 6 அன்றிலிருந்தே அவர்கள் கணிப்பிடத் தொடங்குவதால் தற்போது அவர்களுக்கு 1427 ஆம் ஆண்டு. இந்து மதத்தின் கலியுகக் கணக்குடன் அதிகம் ஒத்துவரக் கூடிய யூதர்களின் ஆண்டு வழக்கத்தின் படி இப்போது நிலவுவது 5767ஆம் ஆண்டு அதிலும் உலகம் படைக்கப்பட்டது தொடர்பாக யூதர்கள் மிகத்துல்லியமான கணக்கொன்றைக் குறிப்பிடுகிறார். அதன்படி கி.மு 3761 ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி 11 நிமிடம் 20 செக்கனுக்கு படைப்பு நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.

மேற்கண்டவாறு அதி துல்லியமாக பேசப்படும் தரவுகள் யாவும் கிறிகோறிய கால அலகிலேயே குறிப்பிடப்படுகின்றன. இங்கு நாம் சில விடயங்களை கவனத்தில் கொண்டாக வேண்டும். இன்று உலகெங்கும் நடைமுறையிலுள்ள கிறிகோறிய வருடமானது ஒரு சூரியஆண்டைக் கொண்டதாகவும் (365.2421896698 நாட்கள் அல்லது 365 நாட்களையும் 5 மணித்தியாலயங்களையும் 48 நிமிடங்களையும் 46 செக்கன்களையும் உள்ளடக்கியது) ஒரு மாதம் 29.530588531 சந்திர நாட்களையும் (அல்லது 29 நாட்களையும் 12 மணித்தியாலயங்களையும் 44 நிமிடங்களையும் 3 செக்கன்களையும் உள்ளடக்கியது) கொண்டதாக உள்ளது முழுமையற்ற தசம இலக்கங்களான இவற்றை ஒரு வழி செய்வதற்காகவே லீப் வருடம் மற்றும் மாதம் உள்ளடங்கும் 30, 31 என ஒழுங்கற்ற விதத்தில் பகுக்கப்பட்டிருக்கும் நாட்கள் போன்ற வழமைகள் காணப்படுகின்றன. எட்டாவது என்று அர்த்தம் தரும் ஒக்டோபர் மாதம் ரோமர் ஆட்சியிலே கி.மு ஏழாம் நூற்றாண்டிலே பத்து மாதங்களை மட்டுமே ஒரு வருடம் கொண்டிருந்த காலத்திலே உண்மையாகவே எட்டாவது மாதமாகத் தான் இருந்தது 365 நாட்களுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் கால்வாசி நாளினை 4 வருடங்களுக்கு ஒரு முறை சேர்த்து 28 நாட்களை மட்டும் பெற்றிருக்கும் பெப்ரவரி மாதத்திற்கு கொடுத்து விடும் நல்லெண்ண அடிப்படையிலான லீப் வருட ஒழுங்கை ஏற்படுத்தியது யூலிய சீசர் தான். அவனை வென்றவர்களே யூலை, ஒகஸ்ட் என்றெல்லாம் மாதங்களுக்குத் தத்தம் பெயர்களை சூட்டிக் கொண்டார்கள். இவர்களின் காலத்திலேயே சனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டன. ஆக கிறிகோறிய நடைமுறையானது தொடர்ந்து பல சீர் திருத்தங்களுக்கு உட்பட்டு வந்துள்ளதை கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. வேறு விதத்தில் சொல்வதானால் நீட்டலளவையை பொறுத்தவரையில் தமிழினம் ஒரு காலத்தில் குதிரையின் ரோமத்தின் தடிப்பைக்கூட ஊர் அலகாகக் கொள்ளும் அளவிற்கு துல்லியத்தை கடைப்பிடித்து வந்ததை நாம் பழம் பெரும் இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். ஆனாலும் பின்னாளில் ஆங்கிலேய அளவைகளை பின்பற்றிய நாம் ஓரளவு அவற்றிலிருந்து விடுபட்டு உலகெங்கும் நடைமுறையிலுள்ள மெட்றிக் முறையை இன்று நமது வழக்கத்திற்குட்படுத்தி வருகின்றோம். அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படுவதற்கு எளிமையாக உள்ள இந்நடைமுறை இன்று கொண்டிருக்கும் செல்வாக்கை போலவே கிறிகோறிய முறைமையும் பல போட்டியாளர்களை தோற்கடித்து இன்றைய நிலையை எட்டியுள்ளது.

> இருள் நிறைந்த கருப்பையில் இருந்த குழந்தை வெளியே வருகிறது நாளொன்றுக்கு 20 மணித்தியாலயங்கள் வரை தூக்கம் போடுகின்றது பின்னர் மெல்ல மெல்ல பகலையும் இரவையும் உணர்ந்து அதற்கேற்ப தன்னை வழக்கப்படுத்திக் கொள்ள பயில்கின்றது. புற உலகின் நாள் வெளிச்சமும் இருளுமே காலம் பற்றிய புரிதலை மனிதனுக்குள் ஏற்படுத்துகின்றது என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ரோம மதகுருவான டயோனிசியஸ் எக்ஸிகுஸ் அவர்கள் பெத்தலேகம் நட்சத்திரத்தின் அடிப்படையில் யேசுகிறிஸ்து தோன்றிய காலத்தை அன்றைய வழங்களைக் கொண்டு கணிப்பிட முடிந்ததை மெச்சிக் கொள்ள வேண்டுமாயின் வானியலாளர்களின் கருத்துப்படி கிறிஸ்துவின் பிறப்பு உண்மையிலே கி.மு 6ஆம் நூற்றாண்டிலே தான் நிகழ்ந்திருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆதாரம்: quarks & co) இந்தக் கருத்தை கண்களை மூடியவாறு மறுதலிக்கும் பட்சத்திலும் வேறொரு சிக்கல்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டிவருகிறது குழந்தை ஒன்றின் வயது அது பிறக்கும் நாளன்று ஒன்று எனக் கொள்ளப் படுவதில்லை மாறாக அதன் வயது கணித அடிப்படையில் பூச்சியத்திலிருந்தே ஆரம்பிக்கிறது அதன்படி முதலாவது வயது குறிப்பிடப்படுவதும் இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் இரண்டாவது வயது ஆரம்பித்துள்ளது எனவும் கருதி வருகிறோம். யேசு கிறிஸ்து பிறந்த காலத்திலேயே அவரது பிறப்பை அடிப்படையாகக் கொண்ட வருட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடைமுறையும் இருந்திருக்குமென எவரும் எதிர்பார்க்க முடியாது அவரது தத்துவ வார்த்தை நெறி மக்களில் பெரும்பகுதியி னரின் உள்ளங்களை ஆகர்சித்துக் கொண்ட பிற்காலத்திலே தான் அதற்கான ஒரு புறச் சூழல் ஏற்பட்டிருக்க முடியும். அதன் படி கி.பி 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ரோம மதகுருவான டயோசியுஸ் எக்சிகுஸ் இனால் பெத்தலேகம் நட்சத் திரத்தின் நிலையத்தின் அடிப்படையில் யேசுகிறிஸ்துவின் தோற்றத்தை ஒட்டி கணிப்பிடப்பட்ட கிறிகோரியன் (பிற்காலத் திலேதான் இது கிறிகோறிய முறை எனப் பெயர் பெற்றது) வருட நடைமுறை திட்ட மிடப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது. எனி னும் உலகளாவிய நடைமுறையாக இது கடைப்பிடிக்கப்படத் தொடங்கியது 15ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே இங்கு கவனிக் கப்பட வேண்டியது என்னவென்றால் டயோ சியுஸ் எக்ஸிகுஸ் இன் கணிப்பீட்டிலே கிறிஸ்து பிறந்த வருடம் பூச்சியமாக அன்றி ஒன்றாகவே கொள்ளப்பட்டது அதாவது ஒரு வருடத்திற்குரிய கணக்கை அவர் தவற விட்டு விட்டார் அந்த வகையில் 2007 ஆம் ஆண்டொன்று நாம் தற்போது கருதுவது உண்மையிலேயே 2006 ஐத் தான் அந்த வகையில் 2006 ஆம் ஆண்டு என்பது பழைய ஆயிரத்திற்குரியதே என்பதும் 2001இலே தான் மில்லெனியம் தொடங்கு கின்றது என்ற வாதத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டியுள்ளது.

அதேவேளை உலகெங்கும் கிறிகோ றிய (கி.பி) ஆண்டு வழக்கமானது சகல நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த போதிலும் பல்வேறு சமய கலாச்சார பாரம்பரியப் பின்னணியுடன் பூமியிலே வாழ்ந்து வரும் 6 பில்லியன் மக்களும் முழுமனதாக இதனை ஏற்றுக்கொண்டுள் ளார்களா என்பது கேள்விக்குரியது ஏனென் றால் பழைய ஐதீக வழக்கில் தீவிர பற்று பாராட்டி வரும் ஒத்தொடொக்ஸ் துறவிகள் இன்னமும் தான் பழைய யூலியன் நடை முறையைக் கடைப்பிடித்து வருகிறார்கள் அவர்களைப் பொறுத்த வலையில் 21ஆம் நூற்றாண்டு பிறந்தது 14.01.2000 அன்றா கும்.

100 கோடிக் குறையாத இந்துக்களுக்கு கலியுகம் தொடங்கி ஐந்து ஆயிரங்கள் கடந்து விட்டன என்பதுடன் அவர்களுடைய வருடப்பிறப்பு 14.04.2000 அன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகிலுள்ள மக்களில் ஆறிலொரு பங்கினர் சீனர்கள் என்பதனால் அவர்க ளின் வழக்கத்தினையும் புறக்கணித்து விட முடியாதல்லவா அவர்கள் (ஆயிரத்தை அல்ல) புத்தாண்டைக் கொண்டாடியது 05.02.2000அன்றாகும்.

பாரசீகர் எனப்படும் ஈரானியர்கள் புத் தாண்டைக் கொண்டாடியது 20 - 21.03.2000 அன்றாகும்

ஒரு பில்லியன் (100கோடி) முஸ்லிம் கள் புத்தாண்டைக் கொண்டாடியது 06.04.2000 அன்றாகும்

இதேபோல யூதர்கள் 30.09.2000 அன்று (உலகம் உருவாக்கப்பட்ட 5761 ஆவது ஆண்டை) தமது புத்தாண்டு விழாவினை கொண்டாடினார்கள்.

புவி தன்னையும் சூரியனை நீள்வட்ட ஒழுங்கில் சுற்றி வருவதை அடிப்படையா கக் கொண்டு வரையறுக்கப்பட்டவையே நமது நாட்களும் வருடங்களும் நாம் வாழும் இந்தப் பூமி தோற்றம் பெற்றது இற்றைக்கு சுமாராக 4 000 000 000 ஆண்டு களுக்கு முன்பென்பதை மனதில் இருத்திக் கொண்டு ஒரு விடயம் 400 000 000 ஆண்டு களுக்கு முன்னர் பூமி தன்னைத்தான் ஒருமுறை சுற்றுவதற்கு 22 மணித்தியா லயங்களும் சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்கு 399 நாட்களும் எடுத்திருந்தன நமது மூதாதையர்கள் சமுத்திரங்களிலே (ராட்சத சுறா, திமிங்கிலம், இன்னும் கடல் வாழ் அழகிய டைனோசர்கள் தான் குறிப் படப்படுகின்றன) வாழ்ந்து வந்த அக்கால நிலவரம் பற்றி நுண்ணுயிர்களின் கனிமப் படிவுகளை இலத்திரனியல் நுணுக்குக் காட்டி கொண்டு பார்த்ததினூடாக இவ் வுண்மை தெரியவந்துள்ளது. அதே போல இன்னும் 180 000 000 வருடங்களிலே நமது நாட்கள் ஒவ்வொன்றும் 25 மணித்தியா லயங்களை கொண்டிருக்கும் இப்படியெல் லாம் நுணுக்கமான சிக்கல்களைப் பேச வேண்டி வந்ததற்கு என்ன காரணம் ஒரு காலத்திலே சூரிய வெளிச்சத்தினால் ஏற் படும் தத்தம் நிழல்களை வைத்து அன்றாட அலுவல்களை முன்னெடுத்த மனித குலம் பின்னாளில் சூரிய மணிக்கூடு, நீர் மணிக் கூடு, சுவாலை மணிக்கூடு, மணல் மணிக் கூடு, ஊசல் மணிக்கூடு, பொறிமுறை மணிக்கூடு என்றெல்லாம் பல கட்டடங் களைத் தாண்டிவந்து இன்று சேசியம் அணுவைப் பயன்படுத்தி காலத்தை அதி துல்லியமான அலகுகளில் அளவிடுகின் றன.

சரி இவ்வளவு தூரம் நேரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த மனிதன் நேரத் திற்கான உணர்வுதான் என்ன? இருள் நிறைந்த கருப்பையில் இருந்த குழந்தை வெளியே வருகிறது நாளொன்றுக்கு 20 மணித்தியாலயங்கள் வரை தூக்கம் போடு கின்றது பின்னர் மெல்ல மெல்ல பகலை யும் இரவையும் உணர்ந்து அதற்கேற்ப தன்னை வழக்கப்படுத்திக் கொள்ள பயில் கின்றது. புற உலகின் நாள் வெளிச்சமும் இருளுமே காலம் பற்றிய புரிதலை மனி தனுக்குள் ஏற்படுத்துகின்றது என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். 40 வருடங்களுக்கு முன்னர் அகப்பட்ட அப் பாவிகளை இருட்டுக்குள் விட்டு சோதித் ததில் முழு நாள் என்பது 22, 23, 25 என்றெல் லாம் மாறுபட்ட மணித்தியாலங்களை கொண்டிருந்ததாக அவர்களால் உணரப் படுகிறது இதற்கென மனித உடலில் காணப்படும் பாகமானது ஒரு நெல்லி மணியை விடப் பெரியதல்ல இது தவிர மரபணுக்களிலும் நேரத்துடன் தொடர்பு டைய கூறேதாவது உள்ளதா என்ற தீவிர வேட்டையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் மிருகங்களிடத்தில் நேரத்திற்குப் பொறுப் பான மரபுக் கூறினை அடையாளம் கண்டு விட்டார்கள்.

மேற்கண்ட யாவற்றையும் கட்டுரையில் குறிப்பிடுவதற்கான காரணம் சகல இடை வெளிகளும் பரிமாணங்களும் நிச்சயமாக உள்ளவைதான் இவற்றை அளவிடுவதன் மூலம் தனது வாழ்வியலை எளிதாக்கு வதற்காக மனிதன் கண்டு பிடித்தவை தான் மணித்தியாலயங்கள், நாட்காட்டிகள், மீற் றர், லீற்றர், கிலோ இன்னும் ஏனையவையா வும் அப்படியிருக்க இவ்வலகுகளின் பய னாக வெளிப்படும் எண்களுக்கென்று உல கத்தை அழித்து விடும் அல்லது ஒரு மனி தனின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி விடும் சக்தியேதும் இருப்பதாகச் சொல்வது ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்பதையிட்டு நாம் சிந்திக்க வேண்டும் அதாவது மனித னால் உருவாக்கப்பட்ட ஒன்றிற்கு அவனு டைய எதிர்காலத்தை தனித்தே தீர்மா னிக்கக்கூடிய அபூர்வ சக்தி ஏதும் இருக்க முடியாது அதே வேளை மனிதனின் காலம் அவரவர் கைகளிளேயே இருப்பதை உணர்ந்து எங்களின் எதிர்காலத்தை எதிரி களைத் தீர்மானிக்க அனுமதியாது நிகழ் காலத்தின் தேவைகளை நினைவில் நிறைந்து இனத்தின் எதிர்காலத்தை எல் லோருமாகச்சேர்ந்து எழுதுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீறு • ௭

அத்துவானக் காட்டில் எதுவும் செய்யத் தோன்றாதவனாய் விரைந்துகொண்டிருந்தான் பரநிருபசிங்கன். அவனுடைய வரவை எதிர்நோக்கியபடி பூநகரித்துறையில் நாகதேவன் காத்திருந்தான். செய்தியைத் தாங்கிய வீரனொருவன் துணுக்காயில் காத்துநின்றான். துணுக்காயில் இருந்து அக்கராயன் ஆண்டபகுதியை நோக்கிச்செல்லும் வீதியில் முள்ளியவளையை நோக்கிச்செல்லும் நெடுஞ்சாலையும், பல்லவராயன் ஆண்ட பகுதியூடாக பூநகரி செல்லும் நெடுஞ்சாலையும் அமைந்துள்ளன. பரநிருபசிங்கன் வரும் பாதை செட்டிக் குளத்திலிருந்து நேராகத் துணுக்காய் வரும். பின்னரே அது பிரியும். சிலவேளை மன்னாருக்கும் செல்லலாம் என்றாலும், பண்டாரன் இறந்த செய்தி அவனுக்கு கிடைத்ததால் அவன் இப்போது அங்கு சென்றாக வேண்டும். நாகதேவன் தன் துறையை வந்தடைந்த வணிகர்கள் மூலம் சீதாவாக்கையைப் பெரும் மழை ஆட்கொண்ட செய்தியை அறிந்தே இருந்தான். நேற்று முன்தினம் அபரபட்ச அட்டமி நிறைவுற்று விட்டதால் தாழமுக்கம் நீங்கியிருக்கும். எனவே இன்று எப்படியும் இளவரசர் வரலாம் என எதிர்பார்த்த நாகதேவன் ஈழநல்லூர்ச்சாலையில் தேரை அனுப்பியிருந்தான். அதோ தேர் வருகிறது. முன்னும் பின்னும் வேலேந்திய குதிரை வீரர்கள் வந்துகொண்டு இருந்தனர். தேரை எதிர்கொண்டு வரவேற்ற நாகதேவன் சுங்கப் பகுதிக் கொட்டகை ஒன்றிற்கு அழைத்துச் சென்றான்.

## காலதூதன்



www.tamilarangam.net

"வணக்கம் இளவரசே"

"ஆமாம் அக்கரைக்குப் போக நாவாய் தயாராகவுள்ளதா?"

"இருக்கிறது பிரபு. ஆனால் தாங்கள் மாலையில்தான் போகமுடியும்."

"ஏன்?..."

"அரசர் உத்தரவு"

"நான் அவசரமாகப் போகவேண்டும்"

"என் விருப்பத்திற்கு மாறாகக் கட்டளையிடும் அரசன் யார்?"

"மாண்புமிகு சங்கிலி சிறீ செகராஜசேகரன் அவர்கள்" மதிப்போடு வந்தது அவன் பதில்.

"அவன் யார் என்விடயத்தில் தலைபோட?..."

"மன்னிக்க வேண்டும் அமைச்சர் பெருமானே"

பரநிருபசிங்கன் சட்டெனத் திரும்பி தன் பின்னால் பார்த்தான். அங்கு யாருமில்லை என்பதைக் கண்டதும், அவன் தன்னிடந்தான் பேசினான் என்பதை அறிந்து வியந்தான்.

"என்ன சொன்னாய்?" அந்த வியப்புடன் மீண்டும் அவனை நோக்கினான்.

"மன்னிக்க வேண்டும் அமைச்சர் பெருமானே"

"இங்கு நான் மட்டும் தானே நிற்கின்றேன்"

"ஆமாம்"

"அப்படியென்றால் அமைச்சர்?"

"சந்தேகமென்ன?.... யாழ்ப்பாண ராட்சியத்தின் பிரதம அமைச்சர் தாங்கள் தானே"

"நாகதேவா! யார் கொடுத்த பதவி?...." குரலை உயர்த்திக் கத்தினான் பரநிருபசிங்கன்.

"சந்தேகமென்ன?.... தங்கள் தந்தையார் சிறீபரராஜசேகரனாகிய மகாராசாதான்" என்ற நாதேவன் தொடர்ந்தும் பரநிருபசிங்கனை ஆச்சரியத்தில் ஆழ்த்த முயலவில்லை.

"அமைச்சர் பெருமானே! நீங்கள் இல்லாத காலத்தில் எத்தனையோ மாற்றங்கள் நடந்து விட்டன. உங்கள் தமையனான பண்டார ராசாவை குத்திக் கொன்றுவிட்டனர்." "கொலையாளி பிடிபட்டு விட்டான். ஆனாலும் அவனைப் பேசவைக்கத் தண்டத்தில் மாட்ட வேண்டியதாயிற்று." "என்ன தண்டத்திலா" "ஆம். தொடர்ந்து இரு அரசர்கள் கொல்லப்பட்டு விட்டனர். ஒரு குற்றவாளி பிடிபட்டான். அவனும் பேச மறுத்தான்."

"அப்படியா?"

"வேறு வழியின்றித் தண்டத்தில் மாட்ட வேண்டியதாயிற்று"

"அவன் பேசினானா?...."

"இல்லை"

பரநிருபசிங்கனுக்கு அவனையறியாமல் ஒரு நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமலேயே, "அப்புறம்" என்றான்.

"அவன் எதிரிகளால் ஊமையாக்கப் பட்டிருக்கிறான். பாவம் அவன் குடும்பத்தைப் பணயம் வைத்து இந்த வேலையைச் செய்வித்துள்ளனர். நாக்கு துண்டிக்கப்பட்ட நிலையிலும் தன் குடும்பத்தைக் காக்கவே இந்த வேலையைச் செய்தானாம்."

"இதை எப்படி நீங்கள் அறிந்தீர்கள்"

"அவனால் பேச முடியவில்லையே தவிர எழுத முடிந்ததே"

நின்ற பரநிருபசிங்கன் அருகிருந்த மஞ்சத்தில் பொத்தென அமர்ந்தான். நாகதேவன் தொடர்ந்தான். இது வன்னியர்கள் செய்த சதி என்பது புரிந்துவிட்டது. ஆகவேதான் வன்னியர்களை அடக்கக் கூடிய ஒரு திறமையான அரசை அமைக்கவேண்டியதாயிற்று.

"மேலும்.... மேலும்"

"வன்னியர்களுக்கும் உங்களுக்கும் நல்லுறவு நிலவுவதாலும், மேற்படி சதியில் தங்களுக்கும் பங்கிருக்கலாமென"

"என்ன" பரநிருபசிங்கன் கர்ச்சித்தான்.

"ஒரு சந்தேகம் தான், உண்மையென்று கூறவில்லையே... அதுவும்... அதுவும்... அதுவும் மக்களுக்கு"

"மக்கள்... மண்ணாங்கட்டி" சீறினான் பரநிருபசிங்கன். சினத்திலும் அவமானத்திலும் அவன் உடல் ஆடியது.

"அந்த மண்ணாங்கட்டிகள், மன்னிக்கவும் மக்கள் தங்களைக் கண்டால் கலவரம் செய்யக்கூடும். ஆகவே தாங்கள் மாலையில் போவது நல்லது"

இப்போது பரநிருபசிங்கனுக்கு எல்லாம் தெளிவாயிற்று. "சே... முழுவதும் குழம்பியது. சதி அம்பலமாகிவிட்டது. என்றாலும் நான் இதில் சம்பந்தப்படாமல் வெளியே போய்விட்டது நல்லதாயிற்று. ஆனாலும் அதுவே என் அரசபதவி போகவும்

www.tamilarangam.net

காரணமாயிற்றே. இனி என்னசெய்வது... ஹா... நல்லது சங்கிலியே மன்னராக இருப்பதால் இப்பதவிக்காக அவனே இக்கொலைகளைச் செய்தான் எனச் சாதித்து விடலாம். அப்படியே... சங்கிலியைக் கொலைகாரனாக்கி, அதனை உறுதியும் செய்துவிட்டால் ஆகா சங்கிலி வெட்டுக்களத்தில், நான் கட்டிலில். இந்நினைவு மேலோங்க, "ஹா..ஹ்ஹ்ஹ்ஹா..." எனப் பெரிதாகச் சிரித்தான் பரநிருபசிங்கன்.

"அப்படியானால் சங்கிலியன் முடிசூடிக் கொண்டானா....."

* * * * *

"இல்லை ஒருக்காலுமில்லை. நான் முடிசூடிக் கொள்ளமாட்டேன். அண்ணன் பரநிருபசிங்கன் வரட்டும். அதற்குமுன் வன்னியர்களின் கொட்டத்தை அடக்குவோம்" சங்கிலியன் விடாப்பிடியாக இதையே கூறினான். அமைச்சரும் பெருஞானியுமான சுபாதிட்டா மௌனமாகத் தலையசைத்தார். மன்னன் பரராஜசேகரன் தன் மகன் சங்கிலியை நோக்கினான். பின்னர் இதமாகக் கூறினான்.

"சங்கிலி! வன்னியர்கள் அனைவரும் நம் எதிரிகளல்ல, முள்ளியவளை, பச்சிலைப்பள்ளி, பழுங்காமம், கொட்டியாரம், பனங்காமம் என நம்முடன் ஒத்துமேவிப் போகும் வன்னியர்கள் இல்லையா?"

"அப்பா மன்னிக்க வேண்டும். கொட்டியாரத்து மன்னன் நீலப்பனிக்கனும், பழுங்காமத்து மன்னன் குகனும் சீதாவாக்கை மன்னனுடன் சிநேகமாக இருக்கிறார்கள்."

"ஹ..ஹ... சீதாவாக்கை மன்னன் நமது நண்பன் தானே"

"இருக்கலாம்" ஆனால் அவன் தம்பி விமலதர்மன் பறங்கியரிடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு... அவனைக் காட்டிக் கொடுக்க முயன்றதாக கேள்வி. அது மட்டுமல்ல"

"ம்....கூறு"

"ஊர்காவல்துறையையும், மன்னார் தீவையும் ஆளும் காக்கை வன்னியன் பறங்கியருக்கு அடிக்கடி விருந்து வைப்பதாகவும் கேள்வி."

"அத்தனையும் உண்மை மகனே. இத்தனையும் அறிந்து புரிந்துகொண்ட நீயே இந்த மண்ணைக் காப்பாற்றும் தகுதியுடையவன்"

"அப்பா" என்ற சங்கிலியன் எதைப் பேசுவது என்று தெரியாமல் தர்மசங்கடப்படுவது தெரிகிறது. ஒருபுறம் நாடு. மறுபுறம் சகோதரன். தந்தையின் வேண்டுகோளை அவனால் மறுக்க முடியவில்லை. ஆட்சியுரிமையைக் கைப்பற்றச் சொந்தச் சகோதரனை ஒழித்துக்கட்டத் திட்டமிட்ட பரநிருபசிங்கன் மேலும் என்ன செய்வான் என்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. அவன் எதுவும் தோன்றாதவனாய் சுபாதிட்டாவை நோக்கினான்.

அவன் முகக்குறிப்பை உணர்ந்த அமைச்சர் சுபாதிட்டா, "இளவரசே தங்கள் சபைக்கு பரநிருபசிங்கர் அமைச்சராக இருப்பார். ஆகவே, நீங்கள் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்" சங்கிலி செகராஜசேகரன் அதற்கு மேல் பேசவில்லை. அந்த மௌனம் சம்மதத்தின் அறிகுறியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாட்கள் உருண்டாலும் புதிய அரசனின் வரவையடுத்து வரும் தைத்திருநாள் அது. நகரங்கள் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டன. வன்னியிலிருந்து புதுநெல்லும், கரும்பு, தேன் என்பனவும் வந்துசேர்ந்தன. கார்த்திகை மாதம் அரசகட்டில் ஏறிய சங்கிலி இன்னும் முறைப்படி முடிசூடவில்லை. அதனையடுத்து மார்கழி மாதம் வந்துவிட்டது. எதுவித நற்காரியங்களையும் மார்கழியில் செய்வதில்லை. ஆகவே இந்தத் தைமாதம் சங்கிலியனுக்கு முடிசூட்டு விழாவைச் செய்துவிடலாம் என்பது தீர்மானமாயிற்று. மன்னன் மகிழும்போது அதனை மேலும் அதிகரிக்க முயல்வது இயற்கையே. மனம் வேதனைப்படும்போது.... பரநிருபசிங்கனின் மனமும் வேதனையில் உழன்றது. வீதிகள் பெருந்தெருக்கள் எங்கும் கட்டப்பட்டிருந்த தோரணங்கள் அனைத்தும் அவனை அவமதிப்பதாகவே ஆடினபோல் வெந்தான். சொல்லிவைத்தாற்போல் விழாவுக்கு வந்த அவனது தாயாதி உறவுகள் எல்லாம் அவனைக் கண்டதும் பெரிதாகக் கதறி ஒப்பாரிவைத்தனர்.

"கோட்டை வாசலைய்யா - உன் கொடி பறக்கும் தேசமைய்யா கூகை குடியாச்சோ என்ற ஐயா கொலுவிருக்கும் நாளாச்சோ-ஓ ஓ ஓ" "உனக்கே சொந்தமான அரசு, யாரோ வைப்பாட்டிப் பிள்ளைக்காய் போச்சே" வந்தவர்கள் அவன் வேதனையை அதிகரித்தனர். அவன் தேர்ந்த நடிகனைப் போல.., "சே.. ஏன் அலறுகிறீர்கள். அவன் யார் என் தம்பிதானே. சொல்லப்போனால் என்னிலும் பார்க்கப் பெரியவீரன். இந்த நாட்டைக் காப்பாற்றும் தகுதி அவனுக்குத்தான் உண்டு. இனியொரு தடவை என் தம்பியைப்பற்றி யாரும் பேசினால் நான் பொல்லாதவனாகி விடுவேன். ம்...போங்கள்... எல்லோரும் இங்கிருந்து போங்கள்" அவன் போட்ட சத்தத்தில் அப்பா முதலில் ஆடித்தான் போய்விட்டார். அரசன் பரராஜசேகரனின் உள்ளம் நெகிழ்ந்தது. இருக்கையிலிருந்து எழுந்து ஓடிப்போய் பரநிருபசிங்கனைத் தழுவிக்கொண்டார். "மகனே... என், மகனே" அவன் முணுமுணுத்தான். "அப்பா" அனைவர் நெஞ்சமும் ஒருதடவை விம்மின. "ஆகா... இவனையா சகோதரர்களைக் கொன்றவன் என்று சந்தேகித்தோம்" உணர்ச்சிப் பெருக்கில் திளைத்த அம்மாளிகையின் வாசலில் குரலொன்று வந்தது,


"வணக்கம் மன்னவா"

"யார் காக்கை வன்னியரா?"

"ஆம்" காலதூதன் போல வாசலில் நின்றான் காக்கை வன்னியன்.

(தொடரும்)

www.tamilarangam.net



# நடை

ஆதிலட்சுமி சிவகுமார்

இரவு முழுவதும் பொழிந்த பனியில் விறைத்துப் போய் அவன் நின்றிருந்தான். பனி மூட்டம் இன்னும் முற்றாகக் கலையவில்லை. மரங்களும் வீடுகளும் மல்லைகள் போலத் தெரிந்தன. சசியண்ணர் முன்பெல்லாம் நாலு நாலரைக்கு கடையைத் திறந்து விடுவார். சசியண்ணரின் கடைக்கு முன்னாலிருந்து கடைச்சல் பட்டறையில் தங்கி நின்று வேலை செய்த பத்துப்பன்னிரண்டு பெடியளும் சசியண்ணரின் கடையிற்றான் தேநீர் வாடிக்கை. தனது கடமைக்காக உள்ளே வந்த இவனும் சசியண்ணரின் கடையிற் தான் உதவியாளனாக நின்றான். சசியண்ணர் இவனை வேலையிற் சேர்த்த போது அவருக்கு இவன் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் போகப் போக கொஞ்சம் விளங்கிக் கொண்ட மாதிரி இருந்தது. சசியண்ணரின் கடைக்கு முன்னால் காலையிலிருந்து மாலை வரை இரண்டு இராணுவத்தினர் நிற்பார்கள். அவர்கள் நிற்குமிடம் முச்சந்தி என்பதால் போக்குவரத்தும் அதிகம். சந்தியில் நிற்கும் அந்த இரு இராணுவத்தினரும் அப்பாதைகள் ஊடாகப் போகும் பெண்பிள்ளைகளை நக்கலடிப்பார்கள். கொச்சையாகப் பகிடி விடுவார்கள். அந்த வேளைகளில் இவனுக்கு மனம் கொதிக்கும். ஓர் அணு உலை கொதிப்பதுபோல இருக்கும் அந்தக் கொதிப்பு. ஒரு நாள் சசியண்ணரின் கடையில் சிகரெட் வாங்கி புகைத்துக் கொண்டிருந்த இராணுவத்தினன் கூட்டமாக பாடசாலைக்கு நடந்து போய்க் கொண்டிருந்த பிள்ளைகள் மீது அதை எறிந்தான். ஊரில் யாராவது இந்த இழிவான செயலைச் செய்திருந்தால் நடப்பது வேறாயிருக்கும். இவனுக்கு இரண்டு மூன்று நாட்களாய் மனது கிடந்து மறுகிக் கொண்டிருந்தது. " முந்திக் கொஞ்சக்காலம் இந்தியன் ஆமியும் உப்படித்தானே அட்டகாசம் செய்தவன்?..." சசியண்ணர் இவனைச் சமாதானப்படுத்துவது போலச் சொன்னார்.

இவன் தனது பெரிய கடமையை நினைத்து மனதை ஆற்றிக் கொண்டான். இவனது முகபாவத்தை வைத்தோ அல்லது நடைபாவனையை வைத்தோ இராணுவத்தினர் விசாரிக்கத் தொடங்கினர். தன்னால் சசியண்ணருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடக்கூடாது என்று நினைத்து, கடையிலிருந்து விலகினான். சசியண்ணரின் உதவியோடு வேறொரு கடையில் வேலைக்குச் சேர்ந்தான். சிலவேளைகளிற் கடைக்கார ஐயா இவனை வெளிவேலைக்கும் அனுப்புவார். ஐயாவைப் பற்றி விசாரித்துப் பார்த்தான். ஐயாவின் மகனொருவன் இவனைப் போலவே வேறொரு இடத்தில் வேறு பணிக்காக நிற்கின்றான் என்று தெரிந்து கொண்டான். இத்தகவல் இவனுக்கு சிறு ஆறுதலைத் தந்தது. இரவில் எப்பாடு பட்டாவது ஐயா இரகசியமாய் வானொலிச் செய்தி கேட்பார். எங்காவது, ஏதாவது நடந்திருந்தால் அவர் மனம் பதறுவதும், அந்த மகனை நினைத்துத் தவிப்பதும் இவனுக்கு விளங்கும். ஐயாவின் வீட்டிலிருந்து தான் கடைக்கு மூன்று நேர உணவும் வரும். பெரிய மீன் துண்டை ஐயா இவனுக்கு எடுத்து வைப்பார். ஒரு வேளை ஐயா தன்னை விளங்கிக் கொண்டு விட்டாரோ என்ற ஐயம் எழும். ஆனால் அது பற்றி எதுவும் கதைப்பதில்லை. ஐயாவின் வீட்டிலிருந்து ஒரு எழுநூற்றைம்பது மீற்றரில் காவலரண் ஒன்றிருந்தது. பகலில் அந்தக் காவலரணில் நிற்கும் ஒரே ஒரு இராணுவத்தினன் தூங்கி வழிந்து கொண்டிருப்பான். அந்த நேரம் மனம் துறுதுறுக்கும். மிகவும் சிரமப்பட்டு மனதை அடக்கி விடுவான். இவனது கடமை பெரியது என்பதை உள் மனம் உணர்ந்தது. ஒரு நாள் ஐயா இவனை மில்லுக்கு அனுப்பினார் சட்டைப் பையில் கொஞ்சம் பணமிருந்தது வழக்கம் போல இவன் போய்க் கொண்டிருந்தான். எதிர்பாராத விதமாய் சிவமக்கா. இவன் தவிர்க்க முயன்றான். சிவமக்கா கண்டு விட்டா. "நீ... நீ... எங்கட துரைரத்தின மண்ணையின்ர கண்ணனெல்லே.." இவனால் ஆமென்று கூற முடியவில்லை. இல்லை என்று கூறவும் முடியவில்லை. "எப்ப இஞ்சால வந்தனி... அம்மாட்டை போனனியே" இவன் கதையை வளர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரும்பவில்லை எல்லாக் கேள்விகளுக்கும் சிரித்து நழுவினான். வீட்டுக்கு இனி கதை போதும். அம்மா இவனைப் பார்த்தே ஆக வேண்டும் என்று அடம்பிடிப்பா. எல்லாமே நல்லதில்லை. இவன் இடம் மாறினான். புதிய இடம் பெரியளவில் பொருத்தமில்லை. இவன் கால் பதித்த முதல் நாளே சுற்றி வளைப்பு நடந்தது. எப்படியோ இவன் தப்பி விட்டான். மூன்று நான்கு இளைஞர்களை இராணுவத்தினர் அப்பிச் சென்றனர். இவன் பல இடங்களில் மாறி மாறி நின்றான். வேலை எதிலும் சேரும் உத்தேசம் இருக்கவில்லை. ஏதாவது படிக்கலாம் என்று நினைத்தான். ஆனால் படையினர் மாணவர்களையும் துருவித் துருவி ஆராய்ந்து வருவதாக அவன் அறிந்தான். ஐந்து மணியுடன் ஊர் அடங்கிவிடும். பல இளைஞர்கள் இராணுவத்துக்கும், ஒட்டுக்குழுக்களுக்கும் பயந்து மனித உரிமை ஆணையகத்தில் அடைக்கலம் புகுந்து விட்டதாக அறிந்தான். எல்லாமே இவனுக்கும் கவலையளித்தன. இவனுக்கும் ஒரு தம்பி. இவன் புறப்பட்ட போது தம்பிக்கு பன்னிரண்டு வயது. காற்சட்டையோடு பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தவன் இப்போது படையினின் கண்களை உறுத்தும் இளைஞனாய் இருப்பான். இவனுக்கு நேரே இளைய தங்கை இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் திருமணமாகியிருந்தாள்.

இப்போது சுற்றி வளைப்புக்கள் அதிகரித்தன. பல தடவைகள் மயிரிழைகளில் இவன் உயிர் பிழைத்தான். சொந்த மாவட்டத்திலேயே ஓரிடத்தில் நிற்க முடியாது அவலமுறும் தன் மீதும் இவன் இரக்கமுற்றான். தனது கடமை பற்றி கனவு இவனது மனதில் வலுவேற்றி தன்னைத் தக்க வைத்திருப்பதாக இவன் நினைத்துக் கொண்டான்.

கிழக்கே சூரியன் எழுந்து கொண்டிருந்தான். இன்றைக்கு எப்படியும் இடம் மாற வேண்டும். இரவு என்றால் ஓரளவுக்கு வசதியாக இருக்கும். இராணுவத்தினர் அடிக்கடி வராத இடமென்று ஒரு நாள் சசியண்ணர் பேச்சுவாக்கிற் கூறியது பளிச்சிட்டது மெதுவாக நடந்து ஆலமரத்தடிக்குப் போனான். ஒரு அம்மாவும் மகளும் பஸ்சுக்காக நின்றிருந்தார்கள்.

இவனும் போய் அருகே நின்றான். ஒரு துளிநேரம் நகர்வதே அவனுக்கு பெரும் பாடாயிருந்தது. அந்த அம்மாவின் மகள் அவனைப் பார்த்து விட்டு வேறு பக்கம் முகத்தைத்திருப்பி வைத்துக் கொண்டு நின்றாள். இவன் புறப்பட்ட போது இவனது தங்கையும் இப்படித்தான் இருந்தாள். பஸ் ஒன்று வந்தது. அம்மாவும் அந்த மகளும் ஏறுவதற்குத் தயாரானார்கள். இவன் தனிக்கப் போகின்றான். பஸ்ஸிலிருந்து ஆறுபத்தைந்து வயது மதிக்கத்தக்க அம்மா இரண்டு பெரிய பைகளுடன் இறங்க, முதல் நின்ற அம்மாவும், மகளும் ஏறிக் கொண்டனர். பஸ் புறப்பட்டுச் சென்றது.

"எங்கையம்மா போகவேணும்" கேட்டான்

"ஆஸ்பத்திரியடிக்கு தம்பி"

"ஒரு பையைத்தாங்கோ அம்மா, கொண்டு வந்து தாறன்"

"நீரும் அவடத்துக்கோ தம்பி போறீர்"

"ஓமம்மா"

அம்மா பெரிய கூடையை இவனிடம் தந்தாள். இவன் அம்மாவுக்கு அருகாக நடந்தான். எப்படியும் ஆஸ்பத்திரியடி மட்டும் போயிடலாம் என நினைத்துக் கொண்டது இவன் மனம்.

அம்மா சுற்றும் முற்றும் பார்த்தாள்?.

"தம்பி நீர் புலியே"

"இல்லையம்மா ஏன்"

"இஞ்சயுள்ள பொடியள் உப்படி பண்பா கதையாதுகள்"

இவன் முறுவலித்தபடி நடந்தான். முதல் நாள் பத்து மணிபோல ஒரு கடையிற் குடித்த தேனீரும், வடையும்தான். இரவும் எதுவும் சாப்பிட வாய்ப்பில்லை. ஆஸ்பத்திரிக்கு அண்மையாக வர ஒரு இராணுவ ஊர்தி வந்தது. அம்மா நின்று இவனைப் பார்த்து

"கெதியா நட" என்றாள்.

ஆஸ்பத்திரிக்கு முன்னாள் உள்ள மருந்துக் கடையில் இரண்டு இராணுவத்தினர் நின்று கொண்டிருந்தனர். "தம்பி, உம்மைப் பார்க்க உப்படியே விட்டுட்டுப் போக மனமில்லாமக் கிடக்கு, நீர் எவடம் போகவேனும்"

"இல்லையம்மா நீங்கள் ஆஸ்பத்திரிக்குப் போங்கோ நான் போவன்"

"இல்லத்தம்பி இவங்கள் தெரு நீளம் நிறையப் பேர் நிக்கிறாங்கள்.. பயம்"

"எனக்கொரு பயமுமில்லையம்மா, நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை.." பையை அம்மாவிடம் கொடுத்து விட்டு நடந்தான்.
ஒரு வழிப்பாதை சன நெரிசலாயிருந்தது, நடந்தான் வயிறு பசி எடுப்பது போலிருந்தது.

பார்த்தான் ஒரு சிறிய தேனீர்கடை. இந்தத் தேநீர்க் கடைக்கு அருகே முன்னர் ஒரு தனியார் கல்வி நிறுவனம் இருந்தது. இப்போது அவ்விடத்தில் எதுவுமில்லை. வெறும் வீடு மட்டும் இந்தது. தேனீர்க்கடைக்குள் நுழைந்தான். கடைக்காரர் இவனை மேலுங் கீழுமாகப் பார்த்தார்.
"ரீ மட்டும்" என்றான்
சுடச்சுடத் தேனீர். குடித்தபடியே கடையைப் பார்த்தான். ஐயா, அம்மா, சமையற்காரர் மட்டுந்தான். காசைக் கொடுத்து விட்டு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தபடி வெளியே வந்தான். தன் கண்களையே தான் நம்ப முடியாதவனாய் ஒரு கணம் தடுமாறினான். மீண்டும் பார்த்தான். அது அப்பாதான். சற்று மெலிந்திருந்தார். தலைமுடி முக்காற்பங்கு மேல்நரை விழுந்திருந்தது. மற்றும்படி அவரில் மாற்றமில்லை.
"அப்பா ஏன் இவ்விடத்தில் நிற்கிறார்....." மனம் தவித்தது.
தவித்த மனம் இவனது பெரிய கடமையை நினைவுறுத்தியது. இவன் ஒரு தரம் தன்னை உலுப்பிக் கொண்டான்.

அப்பாவை விலத்திக் கொண்டு நடந்தான். பத்துப் பதினைந்து மீற்றர் தூரம் நடந்து திரும்பிப் பார்த்தான். அப்பா நின்று கொண்டிருந்தார்.

இவனுடைய பெருங்கடமை இவனை இழுத்தது. நடையின் வேகத்தைக் கூட்டினான். இராணுவ ட்ரக் ஒன்று இவனை விலத்திக் கொண்டு விரைந்தது. இவன் தனக்கான இடத்தைத் தேடி நடந்து கொண்டிருந்தான். தன்னுடைய கடமை நிறைவேறும் வரை இவன் நடை தொடரும் என்பதை இவன் அறிந்து தானிருந்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மண்டேலாவின் காணாமற் போன கைத்துப்பாக்கி

பெரியோர்கள் தமது வாழ்ந்த நாட்களில் பாவித்த பொருள்களுக்குப் பெறுமதி இருக்கிறது அவர்கள் உயிரோடு இருக்கும் போதே பெறுமதி கூடிக்கொண்டே போகும் இறந்த பின் பெறுமதி பன்மடங்காகிவிடும் ஒருவரை நினைவூட்டும் பொருளை மெமென்ரோ (Memento) என்பார்கள் மெமுவா (Memoir) என்ற இன்னுமொரு சொல் இருக்கிறது இந்தச் சொந்த அனுபவக் குறிப்பு என்ற அர்த்தம் ஒருவர் அறிந்து எழுதிவைத்த தகவல் அவதானித்த நிகழ்ச்சி பற்றிய குறிப்புதான் வரலாறு நூல் நிபுணர் அறிக்கை போன்றவை மெமுவாவில் அடங்குகின்றன. பதினெட்டு வருடகாலமாக அமெரிக்காவின் மத்திய வங்கி அமைப்பின் தலைவராக பதவி வகித்த 18 வயதினரான அலன் கிறீன் ஸ்பான் செப்ரெம்பர் 2007 இல் தனது வாழ்க்கை அனுபவ நூலை வெளியிட்டுள்ளார். அண்மையில் வெளிவந்த மிகமுக்கியமான மெமுவா நூலாக இது கருதப்படுகிறது.

மெமென்றோ பெரும்பாலும் பொருளாகவும் மெமுவா எழுத்தாகவும் அமைவதை அவதானிக்கலாம் டொசியே (Dossier) என்ற இன்றுமொரு சொல் இருக்கிறது தனியொரு மனிதனின் கைப்பட வெளிவந்த ஆவணம் என்று டொசியே பொருள்படும். அவர் சேகரித்த ஆவணத் தொகுப்புக்களை இது குறிப்பிடமாட்டாது எல்லா நினைவுப் பொருள்களையும் குறிப்பிடும் மெமறபிலியா (Memorabilia) என்ற பிரெஞ்சு மொழிச் சொல் இருக்கிறது. மேற் கூறிய சொற்கள் அனைத்தும் மெமறி (Memory) என்ற நினைவாற்றலைக் குறிப்பிடும் சொல்லில் இருந்து தோன்றியுள்ளன.

நெல்சன் மண்டேலாவில் காணாமல் போன கைத்துப்பாக்கி இப்போது உலகின் மிக உயர்ந்ததொரு நினைவுப் பொருளாக பார்க்கப்படுகிறது. அது சாதாரண கைத்துப்பாக்கி அல்ல அது மண்டேலாவின் கைப்பட்டது அதனால் அது விலைமதிப்பற்ற பொருளாகியுள்ளது. இந்த சோவியத் தயாரிப்பு மக்கரோவ் பிஸ்ரல் (makarov pistol) அவருக்கு எதியோப்பிய நாட்டில் வைத்து அவர் அங்கு இராணுவப் பயிற்சி பெற்ற போது வழங்கப்பட்டது. அதை அவர் தென்னாபிக்க நகரான ஜொகானஸ் போர்க் நகரப்புரத்திலுள்ள ஒரு கமத்தின் மண்ணில் புதைத்துவைத்தார். அதன்பின் அது பற்றி அவர் சிந்திக்கவில்லை இப்போது தேடல் தொடங்கிவிட்டது. முழு விபரங்களையும் இதன்கீழ் படித்தறியலாம்.

மண்டோலா 1918 இல் பிறந்தவர். உலகின் மிக அகவை கூடிய அரசியல் தலைவர் என்று கருதப்படுகிறார். சில சமயங்களில் கோமாளிபோல் பேசினார். அவரிடம் சிறந்த தத்துவக் கருத்துக்கள் இருக்கின்றன. "நீ எதிர் கொள்ளும் ஆபத்திற்கு பொருத்தமான உன்னுடைய வீரத்தை வளர்த்துக் கொள்" என்று ஒரு முறை சொன்னார். இன்னொருமுறை "உன்னுடைய சண்டைத்திறனை எதிரிதான் தீர்மானிக்கிறான்" என்றார். சென்ற வருடம் அவருடைய வாழ்க்கையை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்வதற்காக கேலிச்சித்திர நூல் (Comic Books) வடிவமாக்கினார்கள். முதற்பிரதி அவரிடம் கொடுக்கப்பட்டபோது நான் சாகா வரம் பெற்றுவிட்டேன் ஏனென்றால் நான் கொமிக்ஸ் புத்தக் கதாநாயகன் அல்லவா என்றார்.

சிறுபான்மை வெள்ளை இனத்தவர்கள் பெரும்பன்மை கறுப்பினத்தவர்கள் மீது நடத்திய நிறவெறி அரசமுறை தென்னாபிரிக்காவில் நிலவியது. இது அப்பார்தைத் (Apartheid) என்று அழைக்கப்பட்டது. கறுப்பர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பு 1918 இல் உருவாக்கப்பட்டது. 1950 கள் வரை அது செயற்றிறன் அற்றதாக விளங்கியது. இந்தியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்ட தொழிலாளர் உரிமைக்காக தென்னாபிரிக்காவில் 21 வருடங்கள்



நெல்சன் மண்டேலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ச்சியாக (1893 - 1914) வாழ்ந்த மகாத்மா காந்தி போராடினார். அவருடைய போராட்டம் கறுப்பர்களின் போராட்டத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும் 1950 கள் வரை ஏ.என்.சி.யின் நடவடிக்கைகள் சூடுபிடிக்கவில்லை. காந்தி வழக்கறிஞராக ஆபிரிக்கா சென்றார். மகாத்மாவாக நாடு திரும்பினார் என்று சொல்லப்படுகிறது.

ஆபிரிக்க தேசிய காங்கிரசின் இராணுவக் கிளையை உம்கொண்டோவே சிஸ்வே (தேசத்தின் ஈட்டி) என்ற பெயரில் நெல்சன் மண்டேலா 1961 இல் ஆரம்பித்து அதன் முதல் தலைவராக இடம்பெற்றார். அதே வருடம் அவர் தனது நெருங்கிய சகாக்களுடன் ஆபிரிக்க நாட்டுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். நிதி உதவியும் இராணுவப் பயிற்சியும் பெறுவது அவருடைய திட்டம். அவர் முதல் அல்ஜீரியாவுக்குச் சென்றார் எட்டு வருடப் போராட்டத்தின் பின் பிரெஞ்சு காலனித்துவ ஆட்சியாளர்களை விரட்டியடித்த அல்ஜீரியாப் புரட்சித் தலைவர்களை அவர் சந்தித்தார். எதியோப்பியாவில் அவருக்கு சகாக்களுக்கும் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டது. தனது வாழ்நாளில் கறுப்பர்கள் விமானம் ஓட்டுவதை முதன் முதலாக எதியோப்பியாவில் கண்டார். மகிழ்ச்சி தாங்க முடியாமல் தான் விமான நிலையத்தில் நின்று ஆடிப்பாடியதாக அவர் பின்பு குறிப்பிட்டார்.

இதில் குறிப்பிட்ட பிஸ்ரலும் ஒரு தொகுதி ரவைகளும் எதியோப்பிய இராணுவச் சீருடையும் அவருக்கு வழங்கப்பட்டன. 1962 ஆம் ஆண்டு இவற்றோடு அவர் நாடுதிரும்பினார். திரும்பிய ஒரு மாதத்தில் அவர் கிளர்ச்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்படுவதற்கு இரு வாரத்திற்கு முன்பு அவர் தனது பிஸ்ரல் அதற்குரிய 200 ரவைகள் எதியோப்பிய இராணுவச் சீருடை என்பவற்றை லில்லிஸ் லீப் (Lilliesleaf) என்ற ஜொகானஸ்பேர்க் கமத்தில் புதைத்து வைத்தார். 1962 இல் நீதிமன்றம் அவருக்கு ஐந்து வருடச் சிறைத்தண்டனை வழங்கியது.

1964 யூன் 11 ஆம் நாள் வெள்ளைப் பாதுகாப்புப் படையினர் ல்லிலிஸ் லீப் கமத்திற்கு ஒரு சலவைத் தொழில் நிறுவனத்தின் மோட்டார் வாகனத்தில் தமது அடையாளத்தை மறைத்தவாறு சென்றனர். அங்கிருந்து எட்டு உம்கொண்டோவே சிஸ்வே போராளிகள் கைதுசெய்யப்பட்டனர். ஆயுதங்கள் எதுவும் அகப்படவில்லை. எட்டுப் பேரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர் நெல்சன் மண்டேலா சிறையில் இருந்து மீண்டும் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டார். பயங்கரவாதிகள் என்ற வெள்ளையரின் சட்டத்தின் அடிப்படையில் மண்டேலா உட்பட ஒன்பது பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மண்டேலாவின் கைத்துப்பாக்கி மண்ணுக்கடியில் இருந்து நல்லதாய்ப் போய்விட்டது. நிறவெறி அரசுச் சட்டப்படி ஆயுதத்தோடு கைது செய்யப்படும் பயங்கரவாதிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. மறைவாய் புதைத்த பிஸ்ரல் அவர் உயிரை காப்பாற்றி விட்டது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட மண்டேலாவும் அவருடைய சாகக்களும் றொபென் தீவுச் (Robben Island) சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். 1990 பெப்ரவரி 10 ஆம் நாளில் விடுதலையாகும் வரை 27 வருடமும் 06 மாதத்தையும் மண்டேலா சிறையில் கழித்தார். விடுதலையாகும் போது அவருக்கு வயது 71. ஆபிரிக்கக் கண்டத்தின் கீழ்த் தென்முனை நகர் கேப்ரணின் (Cape Town) கடற்கரையில் இருந்து எட்டு மையில் தொலைவில் இத் தீவு இருக்கிறது. இத்தீவுக்கு சீல் எனப்படும் கடல்வாழ் பாலூட்டிகள் வருவது வழக்கம். சீல் (Seal) ஆங்கிலச்சொல் வெள்ளை நிற வெறி அரசின் டச்சு மொழியில் அது றொபென் எனப்படும். இத்தீவு முன்பு குஷ்டரோகிகளைத் தடுத்து வைக்கும் நிலையமாகவும், பின்பு மனநோயாளர் மனையாகவும், இறுதியில் கடுங்காவல் சிறைக்கூடமாகவும் பயன்படுத்தப்பட்டது. உலகின் மிக ரம்மியமான நகரங்களில் ஒன்றாகக் கேப்ரவுண் இடம்பெறுகிறது. அதன் கரையோரத்தில் இரு மாகடல்கள் சந்திக்கின்றன. அதன் கிழக்கே இந்து மாகடல், மேற்கே அத்திலாந்திக்கடல். றொபேன் தீவு அத்திலாந்திக் நீரில் காணப்படுகிறது.

ஒரு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கறுப்பு நிறக்கைதிகள், கறுப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் பிறந்த கலப்பினக் கைதிகள், இந்தியக்கைதிகள் றொபென் தீவில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறை உணவும் வித்தியாசப்பட்டன. சிறை வாழ்வின் கடினத்தை அனுபவித்தவாறு எப்படி தனது உடல் ஆரோக்கியம் மனநலம் என்பவற்றை மண்டேலா சீராக வைத்திருந்தார் என்பது வியப்பான விடயம் சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளியே வரும் வேளையில் அவர் வலதுகை முஷ்டியை உயரத் தூக்கி ஆர்ப்பரித்தவாறு நடந்து வந்தார். சந்திர மண்டலத்தில் நிற்கும் நீல் ஆம்ஸ்ரோங், எதிரியைக் குத்தி வீழ்த்தும் குத்துச்சண்டை வீரன் முகம்மது அலி ஆகியோரின் வரலாற்றுப் புகைப்படங்களோடு சிறையிலிருந்து வெளியேவரும் மண்டேலாவின் படமும் ஒப்பிடப்படுகிறது. 1997 ஆம் ஆண்டில் றொபென் தீவு ஒரு தேசியச் சின்னமாக



அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் உல்லாசப் பயணத்துறை மையங்களில் ஒன்றாக றொபென் தீவு இடம் பெறுகிறது. அரைமணி நேரத்தில் படகு மூலம் கேப்ரவுணிலிருந்து அங்கு செல்லலாம் இற்றைவரை ஒன்றரை மில்லியன் பயணிகள் அங்கு வந்துள்ளனர். நெல்சன் மண்டேலாவும் தான் வாழ்ந்த சிறையின் பல பகுதிகளை வந்து பார்த்தார். றொபென் தீவுப் படங்கள் நல்ல விலை போகின்றன. மண்டேலா தீட்டிய தீவுச் சித்திரங்கள் பிரதியாக்கம் செய்யப்பட்டு ஒவ்வொன்றும் 1500 பவுண்டுக்கு விற்பனையாகின்றன. விற்பனை நிதி சிறுவர் நலன் காப்பு நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைத் தொங்க விடும் தூக்குக் கயிறுகள் றொபென் தீவுச் சிறைச்சாலையில் அப்படியே இருக்கின்றன.

ஒரு பயங்கரவாதியின் கைத்துப்பாக்கி இன்று உலகப் பெருந்தலைவனின் நினைவுச்சின்னமாக மாறிவிட்டது. வரலாற்று நகர்வுகள் செய்யும் விந்தையில் இதுவும் ஒன்று. இது மக்கரோவ் அரைத்தானியங்கித் துப்பாக்கியை மண்டேலாவுக்கு அன்பளிப்புச் செய்தது எதியோப்பிய இராணுவக் கேணல் பிரு தாடெசே (Col.Biru Tadesse). மேற்குலகும் வெள்ளை நிறவெறி அரசுமுறையை வெறுத்தது. மேற்கு நாடுகள் பிரயோகித்த பொருளாதாரத் தடைகளும், இராசதந்திர அழுத்தங்களும் வெள்ளை ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து. எம்.கே. இயக்கம் இன்று தென்னாபிரிக்க தேசியப் படைகளோடு இணைக்கப்பட்டு வரலாறாகிவிட்டது.

■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## பிரான்ஸ் தமிழ்ச்சோலையின்
## 9 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு

## 2008



www.tamilarangam.net




















www.tamilarangam.net

# வடக்கு மீதான பொருளாதாரப் போர்





அதனடிப்படையில் ஓமந்தை சோதனைச்சாவடி இராணுவ அதிகாரிகள் கெடுபிடிகளைத் தொடங்கிவிட்டன.

இன்றைய நவீன உலகில் நாளாந்தம் எவ்வளவோ புதிய விடயங்கள் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் வந்து கொண்டிருக்கின்றன. இது சர்வதேச தரத்துடன் பலரும் பயன் பெற்று வரும் நிலையில் ஓமந்தை இராணுவ முகாமை தாண்டி சராசரி ஒரு வானொலிப் பெட்டிக்குரிய பற்றி கொண்டுவர முடியாது. மின்சாரத்தை அரசாங்கம் நிறுத்தி வைத்திருக்கிறது.

வன்னிப் பகுதியில் இயங்கும் மின்பிறப்பாக்கிகளுக்குரிய (டீசல்) எரிபொருளைக் கொண்டுவர அரசு தடைசெய்துள்ளதால் இவை இயங்காமல் உள்ளன இதனால் வன்னி நகரங்கள் மின்சாரம் இல்லாமல் இருள் சூழ்ந்து கிடக்கிறது.

ஏற்கெனவே வன்னிக்கிராமங்கள் மின் சார வசதிகள் எதுவும் ஏற்படுத்த சிறிலங்கா அரசாங்கம் நிதி வளங்கள் ஏதும் ஒதுக்கீடு செய்யாததால் இப்பகுதிகள் இது வரை மின் வசதிபெறவில்லை.

இது இருநூறு வருடத்துக்கு பின் தள்ளி விட்ட நிலையை முன்னறிவிப்பு செய்கிறது.

போக்குவரத்துக்கு சுமார் 25 வருடமாக வன்னிக்கு அரசு வழங்கவில்லை அரச போக்குவரத்துக்கழக பேருந்து எவையும் வன்னியில் இல்லை. அனைத்தும் தனியார் துறை மட்டுமே சேவையில் உள்ளது. ஆயினும் இவர்களுக்கு தேவையான எரிபொருள் இல்லை இதனைக் கொண்டுவரக் கூட அரசு அனுமதிக்கவில்லை என்பது மிகவும் தொன்மையான செய்தி. பொதுவாக மலசலகூட வசதியை ஏற்படுத்தக் கூட

மகிந்த ராஜபக்ச பதவி ஏற்ற கையோடு வடபகுதி மீதான பொருளாதாரத்தடையும் அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் அமுலுக்கு வந்து விட்டது.

வவுனியா ஓமந்தைச் சோதனை சாவடியூடாகக் கடுமையான கட்டுப்பாடுகளுடன் உணவுப் பொருட்களை அனுமதித்தது. இது கூட புதிய கட்டுப்பாட்டு விதியாக இருந்தது. பொருள்கள் சென்று சேராமல் இருக்க படைத்தரப்பிற்கு அறிவுறுத்தல்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அவர்களால் வழங்கப்பட்டது.

« இன்றைய நவீன உலகில் நாளாந்தம் எவ்வளவோ புதிய விடயங்கள் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் வந்து கொண்டிருக்கின்றன. இது சர்வதேச தரத்துடன் பலரும் பயன் பெற்று வரும் நிலையில் ஓமந்தை இராணுவ முகாமை தாண்டி சராசரி ஒரு வானொலிப் பெட்டிக்குரிய பற்றி கொண்டுவர முடியாது மின்சாரத்தை அரசாங்கம் நிறுத்தி வைத்திருக்கிறது. »



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாத நிலை. மலசல கூடங்களைக்கட்ட சீமெந்து இல்லை. சிறிலங்காப் படைகளின் இராணுவத் தாக்குதல் காரணமாக ஆயிரக் கணக்காக வீடுகள் அழிந்து போயுள்ளன. இந்நிலையில் கூட சீமெந்து கொண்டுவர முடியாத நிலையை சிறிலங்கா அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக வீடுகள் அள்ளிச் செல்லப்பட்ட செய்தி அனைவரும் அறிந்த ஒன்றே. இன்றுவரை இந்த வீடுகள் கட்டி முடிக்கப்படாத நிலையில் யாவும் அரைகுறையாகக் கிடக்கிறது. இதற்குக் கூட சீமெந்து அனுமதி செய்யவில்லை.

அத்தியாவசியப் பொருட்களை இது வரை அரசாங்க அதிபரின் சிபார்சின் அடிப் படையில் ஒரு குறிப்பிட்ட உணவுப் பொருள்கள் மட்டும் வந்தன. ஆயினும் அதற்கும் இப்போது தடை வந்திருக்கிறது மிகப்பெரிய கொடுமை.

ஓமந்தைச் சாவடியூடாக நாளாந்தம் சுமார் 25 தொடக்கம் 30 வரையான பார ஊர்திகள் உணவுப் பொருட்கள் தொட ரலை வந்தன. ஆனால் இப்போது 2002 பெப்ரவரி முதல் வாரத்தில் இருந்து சராசரி நாளாந்தம் ஐந்து பாரஊர்திகள் மட்டும் பொருட்களை எடுத்து வருகின் றன. அதுவும் சனி, ஞாயிறுகளில் இல்லை.

இதனால் பாரிய உணவுப்பற்றாக் குறை ஏற்பட்டு வருகிறது. இது தொடரு மானால் பட்டினிச்சாவை எதிர்கொள்ள நேரிடும் என்று மனித உரிமை ஆய்வா ளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கட்டிடப்பொருட்கள், சீமெந்து, எரி பொருட்களான பெற்றோல் டீசல் என்பன வும், பற்றி, சைக்கிள், மோட்டார் சைக்கிள், உதிரிப் பாகங்கள் என தடைவிதிக்கப் பட்டு வந்த நிலையில் இப்போது அத்தி யாவசிய உணவுப் பொருட்களுக்கும் 400 சதவீதத்திற்கு மேல் குறைக்கப்பட்ட செய்தி தமிழ் மக்களை மிகவும் வாட்டி விட்டிருந்த நிலையில் இப்பேரது வன்னியில் இயங்கும் மருத்துவமனைக்குரிய மருந்துப் பொருட் களிலும் அரசாங்கம் கைவைத்துள்ளது. வன்னிக்கு மருந்து எடுத்துவர புதிய தடைகளை போட்டுள்ளது என செய்திகள் வந்துள்ளன. இதனிடையே வன்னி மருத் துவ மனைகளில் நோயாளர்களிற்குரிய மருந்துகளை விநியோகிக்கும் போது ஒரு தொகுதியை வழங்கி விட்டு மிகுதியை வெளிச்சந்தையிலுள்ள மருந்துக்களஞ் சியங்களில் பணத்திற்குப் பெறுமாறு அறி வுறுத்தப்படுகிறது.

இது ஒரு மோசமான நிலை. இலங்கை யில் மருத்துவம், கல்வி என்பன இலவச மாக பெறும் நிலை உள்ள போதும் அது வன்னியில் இல்லாத நிலையை அரசு தோற்றுவிக்கிறது இதே போன்று நீரிழிவு நோய்க்கு இரத்த பரிசோதனை செய்ய வேண்டிய மருந்துகள் இல்லாததால் கிளி நொச்சி மருத்துவமனையில் இரத்த பரி சோதனை செய்ய முடியாது ஏமாற்றத்துடன் திரும்பும் நோயாளிகளைப் பார்க்க முடி கிறது.

இது போன்று ஏனைய உடற்பரிசோ தனை செய்ய முடியாது அவதிப்படும் நோயாளிகளை காணமுடிகிறது.

உணவின்றி மருந்தின்றி தொழிலின்றி வாடும் நிலைதோன்றியுள்ளது தொழில் செய்யமுடியாத நிலைக்கு வன்னி மீது பொருளாதாரத் தடையை போட்டுத் தமிழர் களின் குரல்வளையை நெரிப்பதன் மூலமே ஏதாவது ஒன்றை பெற சிறிலங்கா அரசு

«

**தமிழ் மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது நிலை தோன்றி விட்டது. ஒரிரு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திற்குச் சென்று விட்ட அவலத்தை தமிழ் மக்கள் உணர்கிறார்கள். இன்று சராசரி ஒரு வறிய நாட்டில் கூட இதுபோன்ற அவலத்தை காணமுடியாது. எனவே உணவு, மருந்து, நுகர்ச்சி தேவை, போக்குவரத்து, மின்சாரம், கல்வி போன் றன சீராகக் கிடைக்கச் சர்வதேசச் சக்திகள் ஆவன செய்யவேண்டும் என்பதில் தமிழ் மக்கள் ஆவலாக உள்ளனர்.**

»

முயலுமானால் அரசுதோற்றுப்போகும்.

அத்தியாவசியப் - பொருட்தடை,
உணவுத் தடை,
மருந்துத் தடை,
பனித்தடை,
மின்சாரத்தடை,
உற்பத்தித்தடை

என எல்லாவிதமான தடைகளையும் விதிப்பதன் ஊடாக சர்வதேச நெருக்கடிக்கு ஆளாவது தமிழர்களுக்கே வாய்ப்பாகும் என்பதை அறிந்து கொள்ள சிறிலங்கா அர சாங்கம் பின்னிற்பது அவர்களுக்கே கேடா னது.

இது குறித்து பல பொது அமைப்புக்கள் சர்வதேச உதவியை நாடுகின்றன.

வடக்கே இராணுவக் கட்டுப்பாடற்ற தமிழ் மக்களின் அத்தியவசியத் தேவை களை நிறைவேற்ற சிறிலங்கா அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் இல்லாவிடின் அந்தப் பணியை நிறைவேற்றக் கூடிய பன்னாட்டுச் சக்தி களின் கைகளிற்கு விட்டுவிட வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது நிலை தோன்றி விட்டது. ஒரிரு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திற்குச் சென்று விட்ட அவலத்தை தமிழ் மக்கள் உணர்கிறார்கள். இன்று சராசரி ஒரு வறிய நாட்டில் கூட இது போன்ற அவலத்தை காணமுடியாது. எனவே உணவு, மருந்து, நுகர்ச்சி தேவை, போக்குவரத்து, மின்சாரம், கல்வி போன் றன சீராகக் கிடைக்கச் சர்வதேசச் சக்திகள் ஆவன செய்யவேண்டும் என்பதில் தமிழ் மக்கள் ஆவலாக உள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்க ஒரு நாளும் முன்வராது எனவே தமிழ் மக்கள் தங்கள் தாயகம் விடுதலை பெறுவது ஒன்றே தீர்வின் வழி என்று எண்ணத் தொடங்கி விட்டனர்.

சிறிலங்கா அரசும், படைகளும் தமிழ் மக்களை இல்லாதொழிப்பதற்காக வடக்கே இராணுவ நடவடிக்கையை தொடங்கி விட்டனர். இவர்களது வான்வழியாக மட்டு மல்ல கடல் வழி தாக்குதல் யாவுமே தமிழ் மக்களை அழிப்பதுவே நோக்கம் எனவே இதனை முறியடிக்க விடுதலைப்புலிகள் போராடி வருகின்றனர்.

சிங்களப் படைகள் ஒருபோதும் வடக்கே புலிகளை வெல்ல முடியாது வேணுமென்றால் கிழக்கில் இராணுவம் புலிகளிடம் வீழும் நிலையே தற்போது தோன்றியுள்ளது.

பொதுவாக சிறிலங்காவின் தெற்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் போர் விரிந்திருக்கிறது.

இந்நிலையில் வன்னிமீது பொருளா தாரப் போரை தீவிரப்படுத்தினால் தங்களது வெற்றி வாய்ப்பு நிச்சயிக்கும் என மகிந்த வும் கோத்தபாயவும் கணக்குப்போடு கிறார்கள்.

ஆயினும் எத்தனை பொருளாதாரத் தடை போட்டாலும் அதனை உடைக்கத் தமிழ் மக்களால் முடியும் இப்போது அதற்கு பன்னாட்டு சக்திகள் உதவவேண்டும் குறிப் பாக பன்னாட்டுத் தமிழர் உதவி மிக மிக அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளிருந்து ஒரு குரல்

(அ)

காலத்தின் அழைப்பிற்குச் செவிசாய்த்து வீட்டிலிருந்து ஒரு குஞ்சைக் களத்துக்கு அனுப்பிவிட்டு காத்திருப்பவர் இதயங்களின் துடிப்பு மிக அதிகம் வீட்டு வாசலருகே வேகத்தைத் தணிக்கும் ஊர்திகள், வீதியில் திரும்பும் போராளிகளின் மிதிவண்டிகள் என எல்லாம் இவர்களின் துடிப்பை அதிகரிப்பவை. போர்க்களத்தின் செய்திகளுக்காக காத்திருப்பதிலேயே காலம் கழிந்து விடுகின்றன.

போரின் முகவரி பொழுதுக் கொன்றாக மாறினாலும் போரிடும் வீரர்களின் புத்துணர்வு மாறுவதில்லை முதலில் திருகோணமலை பின்னர் யாழ்ப்பாணம் இப்போது மன்னார் என்று களமெங்கும் பொறிபறக்கின்றது. வெற்றிச் செய்திகளும் வெற்றியை எமதாக்கியவர்களின் வீரச்சாவுச் செய்திகளும் வந்து கொண்டே இருக்கின்றன.

விழிகளில் நீர் வழிய மனம் பதற 'போருக்கு போ' என்று தாம் நேற்று வழியனுப்பிவைத்த மகள் இன்று புகழுடலாக மூடப்பட்ட பேழையில் வருகிறாள் என்ற செய்தி அந்தத் தாய்க்கு தெரிவிக்கப்பட்டது. பிரிவின் வலி; தாயெழுப்பிய ஒலி ஊரை அவள் விட்டு முற்றத்துக்கு அழைத்தது.

மஞ்சள், சிவப்புத் துணிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலில் மகளின் வரவுக்காக காத்திருந்தனர். வந்தது புகழுடல். பேழைதிறக்கப்பட முடியாதவாறு மூடப்பட்டிருந்தது.

பிள்ளையின் முகத்தை இனிப் பார்க்க முடியாது கடைசியாக அவளைப் பெற்றோர் சந்திப்பிலே கண்ட தோற்றமே மனதில் எழுந்தது எனினும் பேழையை திறக்கவே பலர் விரும்பினர்.

"பிள்ளையைச் சேதப்படுத்த வேண்டாம் அவள் அமைதியாக உறங்கட்டும்" அழுகைக்கிடையே தாய் சொன்னார். "கடைசியா ஒருக்காப் பாக்காம விடுறதோ, பெட்டிய நாங்கள் திறப்பம்" உறவினர்கள் அயலவர்கள் ஓலமிட்டனர்.

தங்கள் தோழியின் அமைதியைக் கெடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட போராளிகளுக்கு விழுந்தன அடிகள். எங்கள் மக்களால் எங்களைத் தவிர யாரை அடிக்கமுடியும், உடல் நொந்தது உறுதி கொண்ட மனங்கள் அவர்களிடம் இருந்ததால் தாங்கிக் கொண்டார்கள்.

பிரிவு வேதனையில் துடிக்கின்ற மக்களின் உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தலைவர் அவர்கள் சொன்னது மனதில் பசுமையாக இருந்ததால் தாங்கிக் கொண்டார்கள்.

கட்டுக்கரையில பெரும் சண்டை நடந்த






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அதேவேளை பாலைக்குழியிலும் சண்டை நடந்தது. நான் உயிரோடு உள்ளவரை ஒரு சிங்களவரையும் என்னைக் கடந்துபோக விடமாட்டேன் என்ற உறுதியோடு ஒவ்வொருவரும் சண்டையிட்டார்கள். பாலைக்குழியில் தமது காப்பரணுக்கு வெளியே வந்து எதிரிகளைத் தேடித் தேடிச் சுட்டுக்கொண்டிருந்த போராளிகள் இருவரின் தலைகளை ஒரு எறிகணை கொண்டு போனது.

கழுத்துக்குக் கீழ ஒரு கீறல்கூட இல்லை எனினும் உங்கள் பிள்ளையின் தலையில்லை என்று பெற்றவருக்கும் உற்றவருக்கும் நாங்கள் சொல்ல முடியாது எனவே அவர்கள் என்ன செய்த போதும் தாங்கிக் கொண்டார்கள்.

(ஆ)

பேருந்தில் ஏறிய போராளிகள் ஜெயபுரத்திலிருந்து 2.ஆம் லெப். அபர்ணாவின் வீட்டைத் தேடிப்போனார்கள். அவர் 2007.10.27 அன்று திருக்கேதீச்சரத்தில் சிங்களப் படையினருடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்திருந்தார்.

பேழையைச் சூழ இருந்தவர்களின் மனநிலையை அறிவதற்காக சற்றுத் தள்ளியே இருந்தனர். நிமிர்ந்து இவர்களை கண்ட தாய் இரு கைகளையும் நீட்டினார்.

வாங்கோ பிள்ளையள் வாங்கோ வந்து பிள்ளையப் பாருங்கோ வீரச்சாவுக்கு வாற போராளிகளை அடிக்கக் கூடாது எண்டு பிள்ளை எனக்கு கடிதம் எழுதினவள். என்ர பிள்ளை போனதுக்கு வாறபிள்ளையளை நான் அடிச்சு என்ன செய்யிறது? வாங்கோ பிள்ளையள் என்றார் பெற்றாரின் குரல் உற்றவர்களைக் கட்டிப்போட்டது.

(இ)

மேஜர். சந்திரா (அல்லி ஆறுமுகம், கிளிநொச்சி, 1999.10.14. அன்று அம்பகாமத்தில் நதிமூலம் (வோட்டர் செட்- 01 எதிர் நடவடிக்கை)

அடிக்கடி முகம் கழுவி வாசமாய்ப் பூசுவார்.

“சாகேக்கையும் வாசமாகச் சாகவேணும். வந்து தூக்கிறவைக்குக் கரைச்சல் குடுக்கக் கூடாது” என்பார்.

சாவின் பின்னரும் இன்னொருவரை நோகவைக்கக்கூடாது என்று நினைப்பவர்கள் போராளிகள்.

(ஈ)

பின்பெட்டியில் மன்றநிலாவையும் எழிலமுதுவையும் சுமந்த கேணல். யாழினியின் படைய ஊர்தி திருக்கேதீச்சரத்தை நோக்கிப் பயணித்தது அவர்கள் இருவரும் போருக்குப் புதியவர்கள் காலத்தின்

« கழுத்துக்குக் கீழ ஒரு கீறல்கூட இல்லை எனினும் உங்கள் பிள்ளையின் தலையில்லை என்று பெற்றவருக்கும் உற்றவருக்கும் நாங்கள் சொல்ல முடியாது எனவே அவர்கள் என்ன செய்த போதும் தாங்கிக் கொண்டார்கள். »

குரலை உணர்ந்த பெற்றோர்களால் களம் நோக்கி வழியனுப்பப்பட்டவர்கள். திருக்கேதீச்சரத்தில் இறங்கியவர்களை அந்தப்பகுதி நிலைகொண்டிருந்த அணியினரின் கட்டளை அதிகாரி பொறுப்பேற்று காப்பரண் ஒன்றில் விட்டார்.

வந்த வழிமுழுவதும் யாழினியோடு உரையாடி அவரின் சண்டை சார்ந்த பட்டறிவின் சில துளிகளை உள் வாங்கிக் கொண்டு வந்து இருவரும் தமது காப்பரணின் முன்புறத்தை அவதானித்தனர் முன்னே இந்த நீர்நிலை ஒன்று எதிரிக்கு வாய்ப்பையும் எங்களுக்கு வாய்ப்பற்ற நிலையையும் தரக்கூடும் என்று உணர்ந்தனர். உடனடியாக அன்றிரவு பின்னர் தொடர்ந்தும் தமது காவலையும் கண்காணிப்பையும் நீர்நிலைக்கு முற்புறம் ஒரு மறைவான இடத்துக்கு மாற்றினார்கள்.

மூன்று நேர உணவும் நேர காலத்துக்கு வந்து சேர்ந்தது சேராது வருகின்றதா வருமா என இடையிடையில் கேட்பதற்கும் போராளிகள் ஒரு மறைபொருட் சொல்லைப் பயன்படுத்தினார்கள். அதை எதிரிகள் இந்நேரம் அடையாளம் கண்டிருப்பார்கள் என ஊகித்த இவர்கள் தமக்குள் ஒரு மறைபொருட் சொல்லை உருவாக்கி தமது மேலாளருக்குத் தெரியப்படுத்தி விட்டுப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

சில நாட்களின் பின் போர் முன்னரங்கை பார்வையிட்டவாறு யாழினி வந்தார். இவர்களை கண்டார். ஏன் எதை எதற்காகச் செய்தோம் என்ற இவர்களின் விளக்கங்களைக் கேட்டார் ஸ்ரீ தனக்குள்.

புதிய தலைமுறை போரைப் பொறுப்பெடுத்துவிட்டது.

(உ)

வீட்டிலே சமையல் சாப்பாட்டைக் காக்க வைக்காதே கெதியாச் சாப்பிடு நாளைக்கு சாப்பாடு உன்னைக் காக்க வைக்கும் என்று அடிக்கடி அம்மா சொல்வது அன்று ஏனோ திடீரென நினைவில் வந்து விட்டது கூடவே சிரிப்பும் வந்தது.

பரப்பாங்கண்டலிலே எமது போர் முன்னரங்கில் சங்கீர்த்தனாவின் ஆளுகைக்குட்பட்ட காப்பரண்களின் சுற்றுப்புறங்களின் (சற்று அயற்புறம்) தேடுதல் செய்து முடியவே மதியம் 1.00



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> « உலகளாவிய ரீதியில் மிகக் கூடியளவு பயிற்சிபெற்ற படைகள் கூடத் துணிவின் முன்னால் மண்டியிட்டுத்தான் இருக்கின்றன »

மணி ஆகும் அதன் பின்னர்தான் காலைச் சாப்பாடு எடுத்துவரப் போகலாம் அவரது ஆளுகைக்குட்பட்ட காப்பரண்களின் பின்புறம் ஒரு நீர்நிலை இருப்பதால் அவர்களின் போக்குவரவுப் பாதையாகக் காப்பரண்களையே பயன்படுத்த வேண்டியிருப்பதால் எப்போதுமே காலையுணவையும் மதிய உணவையும் சேர்த்து ஒன்றாக எடுக்க நேரிடும்.

ஐந்து நாட்களுக்கு ஒருமுறை மூன்று பேர் குளிக்கப்போவார்கள் அன்று ஒரு அணி குளிக்கவேண்டிய நாள் எனில் தேடுதலை 1.00 மணியளவில் முடித்து குளித்து விட்டு மதிய உணவை எடுத்து வழியிலுள்ள காப்பரண்களுக்கு கொடுத்தபடி தொங்கலுக்கு வந்து சேர சிலவேளை 4.00 மணியாகிவிடும் காற்றைக் குடித்துக் கொண்டிருப்போர்கள் நேர காலத்துக்கே சண்டையெனில் அன்று முழுதும் சாப்பாடிராது சாப்பாடு நினைவும் வராது அம்மாவுக்கு இது விளங்கவே விளங்காது.

(உள)

களம் பல கண்ட காப்பரண்கள் அவை அடம்பன், மாந்தை முதன்மைச்சாலையின் இரு புறங்களிலும் அமைந்திருந்து 2 ஆம் லெப். இசையழகியின் காவல் நிலையையும் கலைவதனாவின் காவல் நிலையையும் விடிந்ததுபாதி விடியாதது பாதியாக சிங்களப் படையினர் தாக்குவது வழமை. டாங்கிகள், உந்துகணை செலுத்திகள் 40 மில்லி மீற்றர் எறிகணைசெலுத்திகள் பீ.கே.எல்.எம்.ஜி.கள் என்று எல்லாவற்றாலும் முழுங்கித் தள்ளிவிட்டு முன்னகரும் சிங்களப்படைகளைச் சுடு சுடு என்று சுட்டு இவர்களின் ரவைகள் முடிந்து விடும். நாளாந்தமும் இவர்களுக்கான ரவைகளையும் குண்டுகளையும் காவும் குழுவினர் காவிக் கொடுப்பார்கள்.

அன்றும் சிங்களப் படையினர் வழமைபோல அதிகாலையில் டாங்கிகளால் கலைவதனாவின் காவல் நிலையை மொங்கு மொங்கென்று மொங்கினார்கள். மண்கட்டிகள் மரக்கொப்புகள் எல்லாம் மேலெழுவதும் கீழே விழுவதுமாக அடி தாள் பறந்தது அடி ஓய்ந்ததும் கலைவதனாவும் ஈகைமதியும் அமுதமதியும் வலைக்குள் பதுங்கிக்கிடந்த அகலெலிகள் வெளியே தலைநீட்டுவதைப் போல நீட்டி நிலைமையை பார்த்து விட்டு தமது வழமையான நடவடிக்கைகளைச் செய்தனர்.


அன்று மாலை அயலிலே கொப்புகள் ஒதுக்கப்படும் ஓசையும் குரலொலிகளும் கேட்க இவர்கள் விழிப்பானவர்கள் உடனடியாக கொம்பனி நடத்துனர் சொரூபிக்குத் தெரியப்படுத்தினார்கள். அவர் உடனடியாக பிளாட்டூன் நடத்துனர் தரணியைப் போகுமாறு பணித்தார். தரணி தன்னோடு கபிலாவைக் கூட்டிப்போனார்.

கண்ணிவெடி வேலை செய்யும் போராளிகள் நால்வரைக் கூட்டிக் கொண்டு சொரூபியும் புறப்பட்டார். கூட பீ.கே.எல்.எம்.ஜி. நந்தாயினி தன் உதவியாளருடன் இரு சுடுகலன்களை சுமந்து போனார்.

காவல் நிலையில் நின்றவர்களில் அமுதமதி சம்பவ நேரம் ஏதோ வேலையாகக் கட்டளைப்பணியகத்துக்குப் போயிருந்தார். தனித்திருந்த இவ்விருவருக்கும் பெரும் பலமாக சொரூபியும் தரணியும் வந்து விட்டனர் கண்ணி விதைக்கும் போராளிகளைக் கூட்டிக்கொண்டு காவல் நிலையின் முன்புறமாகப் போன சொரூபியைச் சிங்களப்படையினர் கண்டு பீ.கே.எல்.எம்.ஜி.யால் சூடுகளைத் தொடங்க எல்லோரும் மின்னல் வேகத்தில் காவல் நிலைக்குள் இறங்கி பதில் தாக்குதலைத் தொடங்கினர்.

காவல் நிலையில் நின்ற பதினொரு போராளிகளுக்கும் முன்னேறி வந்த பல பத்து சிங்களப் படையினருக்கு மிடையிலான கடும் சண்டை பதினைந்து நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தது போராளிகளில் கண்ணிவெடிப் பணி செய்ய வந்த நால்வரிடமும் சுடுகலன்கள் இருக்கவில்லை இருந்த சுடுகலன்களில் ஒன்று இயங்க மறுத்து விட்டது விடுதலைப் புலிகளின் ஆறு சுடுகலன்களினதும் செறிவான சூட்டில் சிறிலங்காவின் பெரும்பான்மை இனத்தின் பெரும்பாலான சிங்களத் தரைப்படையினர் நடையைக் கட்டினர்.

'...உலகளாவிய ரீதியில் மிகக் கூடியளவு பயிற்சிபெற்ற படைகள் கூடத் துணிவின் முன்னால் மண்டியிட்டுத்தான் இருக்கின்றன' துரோகி பஸ்தியாம்பிள்ளையைச் சுட்டபோது லெப்.செல்லக்கிளிக்கு இயந்திரத்துப்பாக்கியில் பயிற்சி இல்லை அவர் துப்பாக்கி வைத்திருந்த விதத்தைப் பார்த்து ஊகித்துத்தான் இவர் சுட்டார். அந்த வெற்றி துணிவால் கிடைத்தது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை
# ERIMALAI

கலை பண்பாட்டு அரசியல்
சமூக இதழ்

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு...

Tel: 01 43 58 11 42

Fax: 01 43 58 11 91

e-mail: info@erimalai.info

ERIMALAI,
c/o T.C.C France, 341, Rue Des Pyrenees,
75020, Paris, FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை
# ERIMALAI

மார்ச் - 2008





## உலகப்பெண்கள் நாள்
## மார்ச் 8